விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்
Thamil Naatham

இராகம் 01 | தாளம் 100 வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 21 செவ்வாய்க்கிழமை (06.11.2012) பக்கங்கள்: பதினாறு

டெங்கு ஒழிப்புப் பணியில்



அணி திரள்வோம்



அவுஸ்ரேலியாவுக்குத் தஞ்சம் தேடிச் சென்று நவ்ரு தடுப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருக்கும் காட்சி.

## மீண்டும் மரண தண்டனை; ஆராயக் குழு நியமிக்கப்படும்

### நீதியமைச்சர் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் மரண தண்டனை அமுல் படுத்துவது குறித்து ஆராய்வதற்காக ஒரு குழுவை நியமிக்க உத்தரவிட்டுள்ளேன் என நீதி அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் இக்குழுவை நியமிக்கும்படி நீதி அமைச்சின் செயலாளருக்கு உத்தர விட்டுள்ளேன். மரண தண்டனையை மீண டும் நடைமுறைப்படுத்துவதா? இல்லையா? என்பதை தீர்மானிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே உண்டு எனவும் அவர் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் பேர்னார்ட் சவேஜ் மற்றும் அமைச்சர் ஹக்கீம் ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பு கடந்த திங்கட்கிழமை நீதி அமைச்சில் இடம்பெற்றது. இதன்போதே அமைச்சர் ஹக்கீம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு 02

# சர்வதேசத்தின் பலத்தை உணர்ந்து இலங்கை பயப்பட ஆரம்பித்துள்ளதாம்

### கனேடிய எம்.பி.கூறுகிறார்

(ரொறன்ரோ)

"சர்வதேசத்தை தமது விருப்பத்திற்கேற்ப நடத்த முடியுமென நினைத்த இலங்கை, சர்வதேசத்தின் பலத்தை இப்போது தான் உணர்ந்து பயப்பட ஆரம்பித்துள்ளது" என்று இல்கைக்கான கனேடியப் பாராளுமன்றக் குழுவின் பிரதிநிதியான நிக் டிக்ஸ்ரா தமிழர்களினூடான சந்திப்பின் போது தெரிவித்தார்.

கனேடிய மனிதவுரிமை மையத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இச்சந்திப்பில் கலந்து கொண்ட கனடாவின் இலங்கை விவகாரத்திற்கான உத்தியோகபூர்வ குழுவில் அங்கம் வகிப்பவர் மேற்படி பாராளுமன்ற உறுப்பினர். தாங்கள் இந்த ஆண்டு மார்ச் மாதம் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயம் தொடர்பான அறிக்கையை கனேடிய அமைச்சரவையின் கவனத்திற்குச் சமர்ப்பித்து விட்டதாகத் தெரிவித்துள்ளார்.

2009ஆம் ஆண்டு இறுதிப் போரின்போது காணமற் போனவர்களிற்கான பதிலை இலங்கை சொல்லியே ஆக வேண்டும் என்பதில் உள்ள அழுத்தத்தை அது இப்போது தான் புரிந்து கொண்டுள்ளது. கனடா ஐக்கிய நாடுகள் சபை மற்றும் நேச நாடுகளோடு இணைந்து கனடா மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அதற்கான தேவையை ஏற்படுத்தியுள்ளதாகவும் நிக் டிக்ஸ்ரா தெரிவித்தார்.

வடக்கில் இராணுவப் பிரசன்னம் குறைக்கப்பட வேண்டும், தமிழர்கள் சம பிரஜைகளாக வாழக்கூடிய வழியேற்படுத்தப்பட வேண்டும் போன்ற 02

## மூன்று சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் இராஜதந்திர சேவையில்

(கொழும்பு)

மூன்று சிரேஷ்ட இராணுவ மேஜர் ஜெனரல்களை இராஜதந்திர சேவையில் இணைத்துக் கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பிரேஸில், தென்னாபிரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளின் தூதரங்களில் இவ்வாறு இராணுவ மேஜர்கள் கடமையாற்ற உள்ளனர். பிரேஸில் நாட்டின் துணைத் தூதுவராக மேஜர் ஜெனரல் கமல் குணரட்ன நியமிக்கப்பட வுள்ளார்.

இஸ்ரேலின் துணைத் தூதுவராக மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸ் நியமிக்கப்பட 02

## நண்பரே, செல்வம் எம்.பி.யின் மைத்துனரைக் கொன்றார்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் மைத்துனரான சின்னத்துரை இந்திரேஸ்வரன் என்பவரை கொலை செய்ததாக ஒருவர் ஒப்புக் கொண்டுள்ளார். சக நண்பர் ஒருவரே இந்தக் கொலையைச் செய்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

தங்க நகை வியாபார முகவராக செயற்பட்டு வந்த 53 வயதான சின்னத்துரை இந்திரேஸ்வரன் கடந்த 30ஆம் திகதி கொலை செய்யப்பட்டார். 02

## நீதிமன்ற விடயத்தில் தலையிடும் தேவை கிடையாது

### - அமைச்சர் எஸ்.பி.

(கொழும்பு)

நீதிமன்றின் சுயாதீனத்தன்மையில் தலையீடு செய்யும் அவசியம் கிடையாது என்று உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கத் தெரிவித்துள்ளார். 02

## குற்றப் பிரேரணை பற்றி மீண்டும் ஆராய மகாநாயக்கர்கள் கோரிக்கை

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராகச் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ள குற்றப்பிரேரணை தொடர்பில் மீண்டும் ஆராய்ந்து பார்க்குமாறு மூன்று பீடங்களைச் சேர்ந்த மாநாயக்க தேரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இது தொடர்பில் கடிதம் ஒன்றையும் அனுப்பி 02

## 110 அகதிகளுடன் படகொன்று கிறிஸ்மஸ் தீவு கடற்பிராந்தியத்தில் இடைமறிப்பு

(சிட்னி)

கிறிஸ்மஸ் தீவு கடற்பிராந்தியத்தில் 110 அகதிகளுடன் படகொன்று நேற்றுக் காலை இடைமறிக்கப்பட்டதாக அவுஸ்திரேலிய 'மொனிங் ஹெரால்ட்' செய்தித்தாள் தெரிவித்துள்ளது. இலங்கையர் உள்ளிட்ட அகதிகள் உடனடியாக கிறிஸ்மஸ் தீவுக்கு கொண்டு செல்லப்பட்டு ஆரம்ப பாதுகாப்பு, சுகாதார மற்றும் அவர்கள் குறித்த விபரங்கள் சேகரிக்கும் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டதாக அத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கடந்த 02

## மன்னம்பிட்டியில் அதிசக்தி வாய்ந்த கிளைமோர் குண்டு மீட்பு

(கொழும்பு)

பொலநறுவை மன்னம்பிட்டி பிரதேசத்தில் உள்ள வீட்டுத் தோட்டமொன்றிலிருந்து 02

தமிழ் பேசும் மக்களின் எழுச்சிக் குரல்

# மின்சாரம் தாக்கி இறந்த மாணவன்: நீதிமன்றம் உத்தரவிட்டால் நஷ்டஈடு

வட மராட்சியில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த பாடசாலை மாணவ-னின் குடும்பத்திற்கு நஷ்டஈடு வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டால் மாத்திரம் நஷ்டஈடு வழங்க தயார் என்று மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

யாழ். மாவட்ட மின்சக்தி மற்றும் மின்சக்தி வள பாவனை குறித்த கலந்துரையாடல் நேற்று முன்தினம் நடைபெற்ற போதே, ஊடகவிய லாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

மின்சார சபையின் பொறுப்பற்ற தன்மையினால் உயிரிழப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளதா என்று மின்சார சபை ஊழியர்களிடம் தகுந்த விசாரணைகள் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்தோடு, நீதிமன்றினால் பாடசாலை மாணவனின் இறப்புக் குறித்து மின்சார சபையிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு மாணவனின் குடும்பத்திற்கு நஷ்டஈடு வழங்குமாறு மின்சார சபைக்கு நீதிமன்றம் உத்தரவிட்டால் நஷ்ட ஈடு வழங்கப்படும்" என்றும் அமைச்சர் சம்பிக்க கூறினார்.

இதேவேளை, கடும் மழை பெய்து கொண்டு இருந்தபொழுது மேற்படி பாடசாலை மாணவன் தவறுதலாக மின்சார வயரில் தொட்டதால் மரணம் சம்பவித்ததென அயலவர்கள் தெரிவித்தனர். இது தொடர்பாக உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் மீண்டும் போராட்டம் வெடிக்கலாம்: எச்சரிக்கிறார் இந்திய வெளிவிவகார அமைச்சர்

தமிழர்களை தொடர்ச்சியாக ஏமாற்றும் செயன் முறையானது மீண்டும் போராட்டத்திறகு வழிவகுக்கும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்சித் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸை 12வது இந்து சமுத்திர பிராந்திய ஒத்துழைப்பு மாநாட்டில் சந்தித்த பொழுது தெரிவித்தார்.

இலங்கைக்கான இந்திய வதிவிட பிரதிநிதியின் மதிய போசன நிகழ்வில் கலந்து கொண்டு உரை யாற்றிய இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அவர்கள் தமிழர்களால் கோரப்படு கின்ற வட கிழக்கு பிரதேசங்களிற்கான அதிகாரப் பகிர்வினை வழங்குவதில் தமது அரசாங்கம் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் விளக்கமளிப் பதற்கு கடும் முயற்சிகளை மேற்கொண்டார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பா னது தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இதுவரை 18 சுற்று பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ள போதிலும் அதில் எவ்வித முன்னேற்றங்களும் ஏற்பட வில்லை.

பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பானது பாராளுமன்ற தெரிவிக் குழு உருவாக்கப்பட வேண்டும் என தெரிவித்துள் ளது.

ஆயினும் முதலில் ஒப்பந்தத்தில் கைச்சாத் திடப்பட்ட பின்னர் பாராளுமன்ற தெரிவிக்குழுவில் அங்கம் வகிக்கலாம் என அறிவித்துள்ளது.

ஆதிகார பரவலாக்கள் செயற்பாட்டின் மூலமாக மீண்டுமொருமுறை விடுதலைப்புலிகள் தங்கள் இயக்கத்தின் தண்டுவடத்தினை உறுதியாக்க முயல்கின்றனர் என்னும் அச்சத்தில் இலங்கையி னுள் 13ம் திருத்தச் சட்டம் முற்றுமுழுதாக அழிக் கப்பட வேண்டுமென்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச அறிவித்துள்ளார். மேலும் இச்சட்டமூலம் மற்றுமோர் பிரிவினைக்கு வழிகோ லும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிராந்தியத்தில் இலங்கையின் மூத்த சகோதர னாக கருதப்படுகின்ற இந்தியா அதிகார பரவல-ாக்கல் மற்றும் நல்லிணக்க செயற்பாடுகள் தொடர் பாக ஆலோசனைகளை வழங்கியது.

மேலும் தமிழர்களை தொடர்ச்சியாக ஏமாற்றும் செயன் முறையானது மீண்டும் ஒருமுறை விடுதலை போராட்டத்திறகு வழிவகுக்கும் என இந்திய வெளி விவகார அமைச்சர் சல்மான் குர்சித் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸை 12வது இந்து சமுத்திர பிராந்திய ஒத்துழைப்பு மாநாட்டில் சந்தித்த பொழுது தெரிவித்தார்.

# தரம் ஒன்பது மாணவர்களுக்கான மாகாண மட்டப் பரீட்சைகள்

உடுவில்

வடமாகாண கல்வித் திணைக் களத்தினால் தரம் 9 மாண வர்களுக்கு நடாத்தப்படும் மாகாண மட்டப் பரீட்சை எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் 24 திகதி வரையும் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சை 19 ஆம் திகதி காலையில் முதலாம் மொழிப் பாடமும் பி.ப. அழகியல் பாட மும், 20 ஆம் திகதி காலை கணிதம், பி.ப. செய்முறை தொழில் நுட்பப் பாடமும் 21 ஆம் திகதி வரலாறு பி.ப. சுகாதாரமும் உடற் கல்வியும் நடைபெறும். 22 ஆம் திகதி காலை விஞ்ஞானம் குடியுரிமைக் கல்வி 23 ஆம் திகதி காலை ஆங்கிலம், பி.ப. புவியியல் பாடமும், 24 ஆம் திகதி காலை சமயம் பி.ப. விஞ் ஞானச் செய்முறைப் பரீட்சையும் என்ற அட்டவணைப்படி நடைபெற வுள்ளது.காலை 8.30 மணிமுதலும் பி.ப. ஒருமணி முதலும் பரீட்சைகள் நடைபெறவுள்ளது.

## சர்வதேசத்தின் பலத்தை...(தொடர்)

விடயங்களில் ஏதேனும் முன்னேற்றம் ஏற்பட்டுள் ளதா என்பதை தாங்கள் மீளாய்வு செய்வோம் என்றும் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

மேற்குறிப்பிட்ட விவகாரங்களில் கனடாவிற்கு திருப்தியான முடிவு ஏற்படாதபட்சத்தில் கனடியப் பிரதமர், இலங்கையில் அடுத்தவருடம் இடம்பெற வுள்ள பொதுநலவாய மாநாட்டில் பங்குபற்றுவது தொடர்பான தனது நிலைப்பாட்டை மீளாய்வு செய்ய மாட்டார் எனவும் றிக் டிக்ஸ்ரா குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பில் சுமார் 25 வருடங்களாக இயங் கும் கனடிய தமிழ் வர்த்தக சம்மேளனத்தின் முக் கிய பிரதிநிதிகள் உள்ளிட்ட பல பிரமுகர்களும் கலந்து கொண்டனர். இலங்கை விவகாரத்தில் கனடா செயற்படுத்த வேண்டிய செயற்பாடுகள் குறித்த தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட னர்.

## மூன்று சிரேஷ்ட...(தொடர்)

உள்ளார். தென்னாபிரிக்காவின் துணைத் தூதுவராக தற்போது ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கையின் பிரதி வதிவிடப் பிர-திநிதியாக கடமையாற்றி வரும் மேஜர் ஜெனரல் சவேந்திரா சில்வா நியமிக்கப்படவுள்ளார்.

எதிர்வரும் இரண்டு மாதங்களில் இந்த அதிகாரிகள் குறித்த நாடுகளின் துணைத் தூதுவர் பதவிகளை பொறுப்பேற்றக் கொள் வார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த மூன்று இராணுவ மேஜர் களும் கஜபா படைப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

## மீண்டும் மரண...(தொடர்)

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், மேல் நீதிமன்ற நீதிபதியொருவரின் தலைமையில் விடை-ரவில் நியமிக்கப்படவுள்ள இக்குழுவில் சட்டமா அதிபர் திணைக்களம், நீதி அமைச்சு ஆகியவற் றின் உயர் அதிகாரிகள் மற்றும் உளவியல் நிபுணர் ஒருவரும் இடம்பெறுவார்.

இந்தக் குழு கூடி ஆராய்ந்து விதந்துரைக்கும் விடயங்களைப் பொறுத்து மரண தண்டனையைச் சிறைத் தண்டனையாக மாற்றுவது பற்றி பரிசீலிக் கப்படும்" என்றார். இதன்போது கருத்து தெரிவித்த ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர், தற்பொழுது பல நாடுகளில் மரண தண்டனை நிறைவேற்றப்படுவ தில்லை என்றார். சவூதி அரேபியாவில் கொலைக் குற்றம் சாட்டப்பட்டு, மரண தண்டனையை எதிர் நோக்கியுள்ள ரிஸானா நபீக் பற்றியும் இந்த சந்திப் பில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு விஜயம் செய்து சட்டமுறைமை மற்றும் நீதிச் சீர்திருத்தங்கள் பற்றி கண்டறிவதற்கான வாய்ப்பை தமது தலைமையில-ான இலங்கைத் தூதுக் குழுவிற்கு அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் ஏற்படுத்தித் தருமாறு அமைச்சர் ஹக் கீம் விடுத்த வேண்டுகோளை தூதுவர் பேர்னார்ட் சவேஜ் ஏற்றுக்கொண்டதோடு, அது தொடர்பான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதாக வும் உறுதியளித்தார்.

இலங்கையில் மரண தண்டனை இறுதியாக 1976ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது. 2002ஆம் ஆண்டு மே மாதம் 26ஆம் திகதி வரை மரண தண்டனை விதிக்கப் பட்டிருந்தவர்களுக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கப் பட்டு ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது. கடந்த ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி வரையில் பெண்கள் மூவரும் 377 ஆண்களுக்கு மரண தண் டனை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தமக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனைக்கு எதிராக 453 ஆண்களும் 20 பெண்க ளும் மேன் முறையீடு செய் துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## நீதிமன்ற விடயத்தில்...(தொடர்)

ஜனாதிபதிக்கும் நாடாளுமன்றத்திற்கும் நீதிமன்றின் சுயாதீனத்தன் மையை உறுதி செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை இலங்கைக்கு ஒன்றும் புதிதல்ல. ஏற்கனவே இவ்வாறு குற்றப் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்று எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித் துள்ளார். கண்டி உடுநுவர பகுதியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

## நண்பரே, செல்வம்...(தொடர்)

இவரது சடலம் நானுஓயா பிரதேசத்தில் கடந்த 31ஆம் திகதி மீட்கப்பட்டது.

பணத்தை அபகரிக்கும் நோக்கில் தாம் இந்தக் கொலையை செய்ததாக செட்டியார் தெருவில் தங்க நகை வியாபார முகவராகச் செயற்பட்டு வரும் யூசுப் என்பவர் ஒப்புக் கொண்டுள்ளார்.

இந்திரேஸ்வரனிடமிருந்து 35 இலட்ச ரூபா பணத்தைப் பெற்றுக் கொள்வதற்காக இந்தக் கொலையை செய்ததாகக் குறிப்பிட்டுள்ளார். கார் ஒன்றில் இந்திரேஸ்வரனை அழைத்துச் சென்று கழுத்தை நெரித்து கொலை செய்ததாக யூசுப் தெரி வித்துள்ளார்.

இந்திரேஸ்வரனின் சடலத்தை நானுஓயா பிரதேசத்தில் போட்டுவிட்டு மீண்டும் கொழும்பு திரும்பியதாக யூசுப் பொலிஸ் விசாரணைகளின் போது தெரிவித்துள்ளார். கொள்ளையிட்ட பணத் தில் ஐந்து இலட்ச ரூபா கடன்களை செலுத்திய தாகவும், மிகுதிப் பணத்தை வாகனமொன்றை கொள்வனவு செய்வதற்காகச் செலுத்தியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## குற்றப் பிரேரணை...(தொடர்)

வைத்துள்ளனர். திப்பட்டுவாவே ஸ்ரீசுமங்கல மல்வத்த மாநாயக்க, உடுகம புத்தரஜ்ஜித்த அஸ்கிரிய மாநாயக்க, தெளல்தன ஞானஸர அமரபுர மாநாயக்க மற்றும் நாபான பிரேமஸ்ரீ ராமஞ்ஞ மாநாயக்க தேரர்களே இந்த கடிதத்தில் கையொப்பமிட்டுள்ளனர்.

இதேவேளை, மாநாயக்க தேரர்களை நேற்றுமுன்தினம் சந்தித்த ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தலை மையிலான குழுவினர் பிரதம நீதியரசருக்கு எதிராக அரசாங் கத்தினால் கொண்டுவரப்பட்டுள்ள குற்றப்பிரேரணை நாட்டின் நற்பெய ருக்கு களங்கம் விளைவிக்கும் என்றும் இதனை மீள்பரிசீலனை செய்வதற்கு வலியுறுத்துமாறும் கேட்டுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## 110 அகதிகளுடன் படகொன்று...(தொடர்)

வெள்ளிக்கிழமை முதல் நேற்று வரையான நான்கு நாள் காலப் பகுதியில் 6 படகுகளில் அவுஸ்திரே லியா செல்ல முனைந்த 429 பேர் அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதுதவிர, அவுஸ்திரேலியாவில் அகதி அந்தஸ்து கோருபவர்களின் மனுக்கள், அவுஸ்திரேலியாவிற்கு வெளியே பரிசீலிக்கப்படும் என்று கடந்த ஒகஸ்ட் மாதம் அவுஸ்ரேலிய அரசாங்கம் எடுத்த முடிவின் பின்னர் இன்று வரை ஆறாயிரம் பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து அவுஸ்திரேலிய நாடா ளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் டோனி எப் பொட் அதிருப்தி வெளியிட்டுள்ளார். அகதிகளின் வருகை குறித்து அவுஸ்திரேலிய அரசாங்கம் முற் றாக கட்டுப்பாட்டை இழந்துள்ளதாக அவர் குறிப் பிட்டுள்ளார்.

கன்பராவில் ஊடகவியலாளர் மத்தியில் நேற்றுக் காலை அவர் உரையாற்றுகையில் இதனைத் தெரி வித்தார்.

தினமும், பல நாடுகளைச் சேர்ந்த அகதிகள் வருவதைக் கட்டுப்படுத்துவதற்கான உறுதியான திட்டம் எதனையும் அரசாங்கம் கொண்டிருக்க வில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய நிலப்பரப்பிற்கு வெளியே அகதி களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படுவது குறித்து அரசாங்கம் எடுத்த முடிவு எந்த விதமான நன்மை யினையும் வெளிப்படுத்தவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## மன்னம்பிட்டியில் அதி...(தொடர்)

அதிசக்தி வாய்ந்த கிளைமோர் குண்டு மீட்கப்பட்டுள்ளதாக பொலன்நறுவை காவற்துறையினர் தெரிவித்துள்ளனர்.

சுமார் எட்டுக் கிலோ கிராம் எடைகொண்ட இந்த கிளைமோர் குண்டு, மன்னம்பிட்டி கொலனி வீதியில் உள்ள யோகேஸ்வரன் தர்ம லிங்கம் என்பவரின் வீட்டுத் தோட்டத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. தோட்டத்தை துப்பரவு செய்து கொண்டிருந்த போது, குண்டு இருப் பதை அவதானித்த அவர், இது குறித்து காவற்துறையினருக்கு அறி வித்துள்ளார். இதனையடுத்து, மின்னேரிய இராணுவ முகாமைச் சேர்ந்த குண்டு செயலிழக்க செய்யும் பிரிவினரின் உதவியுடன் குண்டு மீட்கப் பட்டு செயலிழக்க செய்யப்பட்டுள்ளது.

### கேப்பாபுலவு மீள்குடியேற்ற விவகாரம்:

# சொந்தக் காணிகளில் குடியேற்றுமாறு கோரி வழக்குத் தாக்கல்

## மாவை எம்.பி.

கேப்பாப்புலவு மக்களை அவர்களது சொந்த இருப்பிடங்களில் குடியமர்த்தக் கோரி வழக்குத் தாக்கல் செய்யப்போவதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

மீள்குடியேற்றப் போவதாக அழைத்துச் சென்று, முல்லைத்தீவு மாவட்டம் சீனியாமோட்டையில் (வேறிடத்தில்) குடியேற்றப்பட்டுள்ள கேப்பாப்பிலவு பகுதி மக்களுக்கு நிரந்தர வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்காக மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரக்கோன் வெள்ளிக்கிழமை 5 வீடுகளுக்கு அடிக்கல் நாட்டியுள்ளார். கேப்பாப்புலவு பகுதி மக்கள் அருகில் உள்ள சீனியா மோட்டை என்னுமிடத்தில் குடியேற்றப்பட்டுள்ளார்கள்.

சுமார் ஒரு மாதத்திற்கு முன்னர் குடியமர்த்தப்பட்ட இந்தக் குடும்பங்களுக்கே இவ்வாறு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது பற்றி கருத்து வெளியிட்ட முல்லைத்தீவு அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன், மீள்குடியேற்ற அமைச்சின் நிதியொதுக்கீட்டில் தலா மூன்றரை இலட்சம் ரூபா செலவில் இந்த வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அவற்றில், முதற் கடட்மாக 50 வீடுகள் அமைக்கப்படவுள்ளன. மொத்தமாக 165 வீடுகள் இந்தப் பகுதியில் நிர்மாணிக்கப்படவுள்ளன என்றும் அரச அதிபர் வேதநாயகன் கூறினார்.

இந்த வீடுகள் கட்டப்படவுள்ள இடங்களில் கால் ஏக்கர் வீதம் இந்தக் குடும்பங்களுக்கு காணிகள் வழங்கப்பட்டு, அதற்கான காணி அனுமதிப் பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளதாக அரச அதிபர் தெரிவித்தார்.

ஆனால், அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை குறித்து கருத்து வெளியிட்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, இந்த மக்கள் அவர்களது விருப்பத்திற்கு மாறாகவே வேறிடத்தில் - அதுவும் - வேறு ஆட்களுக்கு அரசாங்கத்தின் வேறு ஒரு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட காணிகளிலேயே குடியேற்றப்பட்டிருப்பதாகவும், இதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்து கேப்பாப்பிலவு மக்களின் சொந்தக் காணிகளை இராணுவத்திடமிருந்து மீளப் பெற்று அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்களை அங்கேயே மீள்குடியேற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப் போவதாகத் தெரிவித்தார்.

# ரக்டரில் சிக்கி ஒருவர் உயிரிழப்பு

வெலிஓயா பிரதேசத்தில் ரக்டரில் பயணித்துக் கொண்டிருந்த நபர் அவ் வண்டியிலேயே சிக்கி உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை இச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுகிறது.

வெலிஓயா பிரதேசத்தில் வசித்துவரும் 22 வயதான இளைஞர் ஒருவர் இதன் போது உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பில் ரக்டர் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள சாரதி கெபிட்டிகொல்லாவ நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைளை வெலிஓயா பொலிஸர் மேற்கொண்டுள்ளனர்.

# யாழ்.போதனா வைத்தியசாலை புதிய கட்டடம் டிசெம்பரில் திறப்பு

ஜப்பானிய அரசாங்கத்தின் 3000 மில்லியன் ரூபா நிதி உதவியுடன் தற்சமயம் நவீனமயப்படுத்தப்பட்டு வரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையை டிசெம்பர் மாத முற்பகுதியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

5 மாடிகளைக் கொண்ட இந்த போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு, ஸ்கான், அதிதீவிர சிகிச்சைக் கூடம், மற்றும் நோயாளிகள் தங்கியிருக்கும் வாட்டுக்கள், சத்திர சிகிச்சை நிலையங்களுடன், டாக்டர்கள் மற்றும் தாதிமாருக்கான வசிப்பிட வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

இந்த வைத்தியசாலையில் புற்றுநோய்க்கான சிகிச்சைப் பிரிவு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டு சகல வசதிகளையும் கொண்ட ஒரு வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்படும்.

இந்த வைத்தியசாலையில் பிராணவாயுவைத் தயாரிக்கும் ஒரு நிலையமும் ஏற்படுத்தப்படுவதுடன் இந்த வைத்தியசாலைக்கான மின்சார வசதியை சூரிய சக்தி மூலம் பெறவும் வசதிகள் செய்யப்படும். இந்த வைத்தியசாலையின் புனரமைப்புப் பணிகளை ஜப்பானிய அரசாங்கம் இலவசமாக செய்துகொடுக்கும்.

# கஜ முத்துக்களை வைத்திருந்த இருவர் ஐந்து சந்தியில் கைது

சட்டவிரோதமாக பல இலட்சம் ரூபா பெறுமதியான 3 கஜமுத்துக்களை வைத்திருந்த இருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக யாழ்.பொலிஸ் பொறுப்பதிகாரி சமன் சிகேரா தெரிவித்தார்.

யாழ்.அதிரடிப்படை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் படி நாவாந்துறை ஐந்து சந்திப் பகுதியில், இருவர் பல இலட்சம் பெறுமதியான கஜமுத்துக்களை வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரில் ஒருவர் யாழ்.நகரப் பகுதி நகை வியாபாரி என்றும், நகை வியாபாரிக்கு கிடைத்த கஜமுத்தினை ஐந்து சந்திப் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு விற்க முற்பட்ட வேளையிலேயே விசேட அதிரப் படை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இருவரும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக யாழ்.பொலிஸ் பொறுப்பாதிகாரி மேலும் கூறினார்.

# சடலம் ஒன்று மீட்பு

பதவியா, வெகரகல விகாரைக்கு பின்புறத்தில் உள்ள நீர்த்தேக்க கற்களுக்கிடையில் சிக்கிய நிலையில் சடலம் ஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

பதவியா பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இச்சடலம் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சடலம் சிதைவடைந்த நிலையில் இருந்த அதேவேளை சடலத்திலிருந்து தலை வேறாக்கப்பட்டும் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட சடலம் ஒரு ஆணினுடையது எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது சடலம் அனுராதபுரம் பொது மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

# நெல் திருடிய நால்வர் கைது

கொரவப்பத்தான, புக்கரவவ பிரதேசத்தில் தனியார் சங்கம் ஒன்றிற்கு சொந்தமான நெற்களஞ்சியசாலையில் ஒரு தொகை நெல் திருடிய சம்பவத்துடன் தொடர்புடைய நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் புக்கரவவ மற்றும் கெபிட்டிகொல்லாவ பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என கொரவிப்பத்தான பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த மாதம் இந்த நெற்களஞ்சியசாலையில் இருந்து 275 நெல் மூட்டைகள் திருடப்பட்டுள்ளன.

திருடப்பட்ட நெல் மில் இரண்டில் விற்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# மேலும் ஒரு எண்ணெய்க் கசிவு

கொழும்பிலிருந்து கொலன்னாவ பகுதிக்கு எண்ணெய் ஏந்திச் செல்லும் நிலக்கீழ் குழாயில் கசிவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மீதொட்டமுள்ள, விகாரமாவத்த பிரதேசத்தில் இந்த எண்ணெய்க் கசிவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் இருந்து எண்ணெய் கசிவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# யாழ்.பல்கலைக்கழக வெற்றிடங்கள் நேர்மையாக நிரப்பப்பட வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

யாழ்.பல்கலைக்கழகத்தில் நிலவும் ஊழியர் வெற்றிடங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிரூபம் 876 இற்கு அமைய உண்மையாகவும் நேர்மையாகவும் நிரப்பப்பட வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.பல்கலைக்கழகத்தில் தற்போது கணினி பிரயோகவியலாளர் முகாமைத்துவ உதவியாளர்களுக்கான 43 பதவி வெற்றிடங்கள் உள்ளன. இதற்கான புதிய வர்களை நியமனம் செய்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிரூபத்திற்கு அமைவாக பெயர்களை வழங்கியுள்ளேன். இந்த பெயர்ப் பட்டியலிலும் கூட, நான் பல்கலைக்கழகத்தில் உள்ள வெற்றிடங்களிலும் பார்க்க மூன்று மடங்கானவர்களின் பெயர்ப்பட்டியல்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பியுள்ளேன். திறமையானவர்களை தெரிவுசெய்ய வேண்டும் என்ற அடிப்படையில் இந்த பெயர்களை அனுப்பிவைத்துள்ளேன். இதில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனுப்பிய பெயர்களும் கூட அடங்கி இருக்கலாம்.

இந்த வகையில் நேர்மையாகவும் உண்மையாகவும் நேர்முகப் பரீட்சை வைத்து உரியவர்கள் ஊழியர்களாக நியமனம் செய்யப்படவேண்டும்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் சுற்றறிக்கையை மீறி பொதுவான விளம்பரத்தை செய்து பல்கலைக் கழகங்கள் ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்ய முடியாது.

ஏன் பல்கலைக்கழகம் வெளிவாரியாக விளம்பரப்படுத்தியது மற்றும் அனைவருக்கும் விண்ணப்பங்களை வழங்கியது என்பது பற்றி தெரியவில்லை. தற்போது கூறுவதுபோன்று நான் யாருடைய தெரிவிலும் ஆர்வம் காட்டி இதனைத் தடுக்கவில்லை.

என்னைப் பொறுத்தவரையில் தமிழ், இளைஞர் யுவதிகள் அனைவரையும் எனது மக்களாகவே பார்க்கின்றேன் என்றார்.

# வெள்ளம் நிறைந்த குழியில் வீழ்ந்து சிறுமி பலி

மன்னார் மாவட்டத்தின் மடு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குஞ்சுக்குளம் கிராமத்தில் மழை நீர் நிறைந்த கிடங்கில் கடந்த சனிக்கிழமை மாலை விழுந்த சிறுமியொருவர் உயிரிழந்துள்ளதாக மடு பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஒன்பது வயதான சிறுமியொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணையை மடு பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை வெள்ளம் தொடர்பாக பாதிப்பு ஏற்பட்ட இடங்களில் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய இராசி பலன் (06.11.2012)

**நந்தன வருடம் ஐப்பசித் திங்கள் 21ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**நட்சத்திரம்** : பூசம் மாலை 6.36 வரை அதன் பின் ஆயிலியம்
**திதி** : சப்தமி பிற்பகல் 1.36 வரை. அதன் பின் அட்டமி
**சுபநேரம்** : 10.35 - 12.05 **இராகுகாலம்** : 3.05 - 4.35
(இந்த நேரங்கள் இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்)

**மேடம்** : பிரயாசை மிகுதி, மனமகிழ்ச்சி, நண்பர்களுக்கு உதவுதல்
**இடபம்** : வாக்கு பலிதம், நல்ல சிந்தனை, மேலதிகாரி பாராட்டு
**மிதுனம்** : சந்தோச மிகுதி, அதிகார விருத்தி, பிறருக்கு உதவுதல்
**கடகம்** : தொழில் முன்னேற்றம், குடும்ப மகிழ்ச்சி, வீண் யோசனை
**சிங்கம்** : போசன சுகம், அயலவர் தொல்லை மனஅமைதி குறைவு
**கன்னி** : யோசனை மிகுதி, ஆரோக்கியக் குறைவு, குடும்ப சச்சரவு
**துலாம்** : தொழில் சஞ்சலம், அலைச்சல், வாக்கு விரோதம்
**விருச்சிகம்** : தர்ம காரியம், மன நிம்மதி, விவாக முயற்சி
**தனுசு** : முயற்சியால் பலன், வீண் மனஸ்தாபம், பொருள் நஷ்டம்
**மகரம்** : செலவினம், உடல்நிலை பாதிப்பு, தனிமை கொள்ளல்
**கும்பம்** : மனசஞ்சலம், பிரயாசை மிகுதி, தாமத செயற்பாடு
**மீனம்** : வீண் செலவு, தொழிலாளர் முரண்பாடு, சகோதர உதவி

- ஜோதிடர் பால.இரத்தினசேகர்

# பாரிய பின்விளைவுகளைச் சந்திக்க வேண்டி வரும்

## - பிரிட்டன் எச்சரிக்கை

இலங்கையின் நீதித்துறைச் சேர்ந்தவர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் மனித உரிமைப் பாதுகாவலர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான பிரித்தானிய பிரதிநிதி குற்றம் சாட்டியுள்ளார்.

குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்கப்படாத நிலைமை நீடித்து வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

மனித உரிமை ஆர்வலர்கள், நீதித்துறைச் சார்ந்தோர், ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்துவோருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் அரசாங்கம் பாரிய விளைவுகளை எதிர்நோக்க நேரிடும் என பிரித்தானியா எச்சரிக்கை விடுத்துள்ளது.

குற்றச் செயல்கள் தொடர்பான விசாரணைகள் மற்றும் தண்டனை விதிக்கும் பொறிமுறைமை தொடர்பில் திருப்தி அடைய முடியாது என்று பிரித்தானியா தெரிவித்துள்ளது.

யுத்தத்தின் போது சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறிச் செயற்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது எனக் கோரியுள்ளது.

கருத்துக்களை சுதந்திரமாக வெளியிடக் கூடிய ஓர் பின்னணி உருவாக்கப்பட வேண்டியது அவசியமானது எனப் பிரிட்டன் தெரிவித்துள்ளது.

# ஹெஜிங் தீர்ப்பு தொடர்பில் மேன்முறையீடு

டொச் வங்கிக்கு எதிரான ஹெஜிங் வழக்கு குறித்து அமெரிக்க மத்தியஸ்த நீதிமன்றம் அறிவித்த தீர்ப்பு தொடர்பில் மேன்முறையீடு செய்வதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது இவ்வாறு பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார். மேன்முறையீடு செய்வதற்கான நடவடிக்கைகளை சட்ட மா அதிபர் மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

டொச் வங்கியுடனான ஹெஜிங் உடன்படிக்கை மீறப்பட்டமை குறித்து அரசாங்கத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை அமெரிக்க மத்தியஸ்த நீதிமன்றம் விசாரித்தது.

அந்த மத்தியஸ்த நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகளில் ஒருவர் இலங்கைக்கு சார்பாகவும் மற்றைய இரண்டு நீதிபதிகளும் எதிராகவும் கருத்துக்களை கூறியிருக்கின்றனர்.

இதற்கமைய வழங்கப்பட்டுள்ள தீர்ப்பினை ஆட்சேபித்து மேற்முறையீடு செய்வதற்குரிய வழிவகைகளை சட்ட மா அதிபர் திணைக்களம் ஆராய்ந்து வருவதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

டொச் வங்கிக்கு எதிராக ஹெஜிங் வழக்கில் அந்த வங்கிக்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 60 மில்லியன் டொலர்களை செலுத்த வேண்டுமென அமெரிக்காவை தளமாகக் கொண்ட மத்தியஸ்த நிறுவனம் கடந்த வெள்ளிக்கிழமை தீர்ப்பளித்துள்ளது.

உரிய நேரத்தில் கடனைச் செலுத்தாமல் விட்டமைக்கான வட்டியுடன் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அக்கடனை செலுத்தவேண்டியிருக்குமென அத்தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, இது எங்களுக்கு எதிரான தீர்ப்பாகும் நாம், இந்த தீர்ப்பை செல்லுபடியற்றதாக்கத் தேவையான நடவடிக்கைகள் பற்றி யோசித்து வருகிறோம் என சட்டமா அதிபர் பாலித பெர்ணான்டோ தெரிவித்திருந்தார்.

2007 இல் உலக சந்தையில் எரிபொருள் விலை உயர்வடைந்து கொண்டிருந்தபோது வங்கிகளிடம் இழப்பீடு பெறும் வகையில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஹெஜிங் உடன்படிக்கையை செய்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# அரசாங்கத்தின் தாளத்திற்கு ஆடினால் ஷிராணி பண்டாரநாயக்க குற்றமற்றவர்

## - முன்னாள் பிரதம நீதியரசர்

அரசாங்கத்தின் தாளத்திற்கு ஆடினால் பிரதம நீதியரசர் குற்றமற்றவர் என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் தாளத்திற்கு ஆடத் தவறும் பிரதம நீதியரசர்கள் நாடாளுமன்றிற்கு அருகாமையில் உள்ள தியவன்ன ஓய குளத்தில் மூழ்கடிக்கப்படுகின்றனர்.

117 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிராக குற்றம் சுமத்தியுள்ளனர்.

எனது மாணவியான அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சிதான், பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணைக்கு தலைமை தாங்குகின்றார்.

என்ன குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படடுள்ளன என்பது பற்றி, குற்றப் பிரேரணையில் கையொப்பமிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியுமா?

குற்றச்சாட்டுக்கள் தொடர்பான சாட்சியங்கைள ஆராய்ந்து பார்த்தார்களா? என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா கேள்வி எழுப்பியுள்ளார்.

# ஆசனிக் கலந்த மருந்துகளுக்கு தடை

இலங்கையின் விற்பனை செய்யப்படும் மருந்துப் பொருட்களிலும் விவசாயத்துக்கு பயன்படுத்தப்படும் பசளைகளிலும் ஆசனிக் இராசயனப் பொருள் உள்ளதா? என்பது குறித்து ஆராய்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

அவ்வாறு ஆசனிக் கலந்துள்ள மருந்துப் பொருட்கள் மற்றும் விவசாயப் பசளைகளை தடை-செய்வது குறித்தும் கலந்துரையாடப்படுவதாக சுகாதார சேவை தரப்புக்கள் தெரிவித்துள்ளன. இலங்கையில் சிறுநீரக நோய்கள் பரவுவதற்கு ஆசனிக் மூலகமும் ஒரு காரணம் என்று தெரியவந்துள்ளது. இதனையடுத்தே அதனை தடை செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# 51 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் - பசில் ராஜபக்ஷ

இலங்கை அரசாங்கத்தில் தற்போது பயிற்சி பெறுகின்ற அனைத்து பட்டதாரிகளுக்கும் நிரந்தர தொழில் வாய்ப்புகளை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்காக அமைச்சுக்கள் மற்றும் அரசாங்க திணைக்களங்களில் தற்காலிகமாக தொழில் புரிந்த பட்டதாரிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு 51ஆயிரத்து 420 பட்டத்தாரிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபகஷவுக்கும், அரசாங்க அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு அண்மையில் இடம்பெற்றது.

தெரிவான பட்டதாரிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்படும்.

இந்த காலப்பகுதியில் அவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# நீதியரசர் மீதான குற்றப் பிரேரணை: அமெரிக்காவின் கருத்து ஏற்புடையதல்ல

## - அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்!

பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் குறித்து அமெரிக்கா வெளியிட்டுள்ள கருத்து ஏற்புடையதல்ல என்கிறார் இலங்கை வெளிவிவகார அமைச்சர். அமெரிக்கா, ஜெர்மனி மற்றும் சில சர்வதேச அமைப்புக்கள் பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை குறித்து கருத்து வெளியிட்டுள்ளனர். எனினும், இந்தக் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உண்மை நிலைமைகளை புரிந்து கொள்ளாமலேயே சர்வதேசம் இலங்கை அரசாங்கத்திற்கு விரோதமான வகையில் கருத்து வெளியிட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். பிரதம நீதியரசருக்கு எதிராக எவ்வாறான குற்றச்சாட்டு வைக்கப்பட்டது என்பதை அறியாமல் விமர்சனங்கள் வைக்கப்படுகின்றமை வருத்தமளிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

உலக நாடுகள் இலங்கையை நோக்கும் விதம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல எனவும் அவர் தெரிவித்துள்ளார். அரசியல் சாசனத்திற்கு அமைவான முறையில் சகல சட்டங்களையும் பின்பற்றியே நம்பிக்கையில்லா தீர்மான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கு பத்தரை கிலோ கஞ்சா கடத்த முயன்றவர் இராமேஸ்வரத்தில் கைது

தமிழகத்தின் தேனியில்இருந்து இலங்கைக்கு பத்தரை கிலோ கஞ்சா கடத்த முயன்றவர் இராமேஸ்வரத்தில் கைது செய்யப்பட்டார்.

இராமேஸ்வரம் ராஜகோபால் நகர் ராமநாதன் என்பவர் கடந்த சனியன்று மதுரையிலிருந்து இராமேஸ்வரத்திற்கு ரயிலில் வந்தார்.

போதையில் தூங்கிய இவரது பையை, ரயில்வே பொலிசார் சோதனையிட்டனர்.

பத்தரை கிலோ கஞ்சா இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட இவர், தேனியில் கஞ்சா வாங்கி, இராமேஸ்வரம் வியாபாரியிடம் வழங்குபவர். தொடர்ச்சியாக இக்கைய வியாபார நடவடிக்கைகள் இந்தப் பிரதேசத்தில் நடைபெற்று வருவதாகவும் பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

ஏற்கனவே கிடைத்த தகவல்களின் அடிப்படையிலேயே இராமேஸ்வரம் பகுதியில் பொலிசார் தேடுதல்களை நடத்தி வந்துள்ளனர். இராமேஸ்வரம் பகுதியிலுள்ள வியாபாரிகள் மீனவர்கள் என்ற போர்வையில் இலங்கைக்கு கடத்தி விடுவார்கள் என்றும் பொலிஸ் விசாரணையின் போது கைதானவர் தெரிவித்துள்ளார்.



இலங்கை இலங்கியப் பேரவையின் 2010, 2011ஆம் ஆண்டுக்கான சிறந்த இலக்கிய நூல்களுக்கான பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) யாழ்ப்பாணத்திலுள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. சிறந்த நாடக நூலுக்கான விருதினை 'மனித தர்மம்' பெற்றுக்கொண்டது. இதனை எழுதிய கலைச்செல்வனுக்கு வாழ்நாள் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா விருது வழக்குவதையும், சிறந்த காவிய நூலுக்கான விருதினை ஜின்னா ஷரிபுத்தீன், அருட்சகோதரி ம.சயந்தியிடமிருந்து பெறுவதையும் யாழ்.இலக்கிய வட்டத்தினருடன் பரிசுபெற்றவர்களையும் படங்களில் காணலாம். (படப்பிடிப்பு- மீரான்)

# டெங்கு நோயினால் இளைஞன் மரணம்

டெங்கு காய்ச்சலினால் பாதிக் கப்பட்ட இளைஞர் உயிரிழந்துள் ளார்.

யாழ். நாவற்குழி பகுதியை சேர்ந்த 18 வயதான அருள் வின் சன் என்பரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 3 நாட்களாக ஏற்பட்ட காய்ச்சலினால் யாழ். போதனா வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் தற்போது டெங்கு காய்ச்சல் நோய் அதி-கரித்துள்ளதுடன் ஒரு வகையான வைரஸ் காய்ச்சலும் பரவுகின் றது.

எனவே, சளியுடன் காய்ச்சல் ஏற்பட்டால் வைத்தியசாலையில் தகுந்த சிகிச்சை பெற்றுக் கொள் ளுமாறு" யாழ். போதனா வைத்திய சாலையின் சட்ட வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# தெற்கு அதிவேக நெடுஞ்சாலை வழமைக்கு திரும்பியது

மண்சரிவு ஏற்பட்டதையடுத்து தற்காலிகமாக மூடப்பட்டிருந்த தெற்கு அதிவேக நெடுஞ்சாலை போக்குவரத்துக்கென முழுமை யாக திறந்துவிடப்பட்டுள்ளது

வெலிபன்ன - பின்னதுவ பகுதி யில் தவத்துடுவ, கொம்பத்தல எனுமிடத்தில் மலைப்பாங்கான பகுதியொன்றில் மணிசரிவு ஏற்பட் டதை அடுத்து கொட்டாவ காலிக் கிடையிலான நெடுஞ்சாலையின் தவத்துடுவ முதல் காலி வரை யான வீதியின் சுமார் ஒரு கிலோ மீற்றர் பகுதி தற்காலிகமாக மூடப் பட்டிருந்தது.

இந்நிலையிலேயே சரிந்திருந்த மண்முகடு முழுமையாக அகற்றப் பட்டு குறித்த பகுதி முழுமையாக சுத்தம் செய்யப்பட்டதை அடுத்து வீதி முழுமையாக போக்குவரத் துக்கென திறந்துவிடப்பட்டுள்ளது என வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. இதே வேளை மண்சரிவு இடம் பெற்ற இடத்திற்கு சென்றுள்ள புவியி யல் ஆராய்சியாளர்கள் அவ்வி டத்தில் மேலும் மண்சரிவு கள் ஏற்படுமா? ஆதற்கான சாத் திய கூறுகள் இருக்கின்றனவா? ஏன்பது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றனர்.

# கிணற்றில் வீழ்ந்து சிறுவன் உயிரிழப்பு

யாழ். அளப்பிட்டியில் சிறுவன் ஒருவன் இன்று ஞாயிற்றுக் கிழமை கிணற்றில் வீழ்ந்து உயி ரிழந்துள்ளார்.

இவர் ஐந்து வயதான சிவராசா ஜதுசன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

தற்போது சடலம் யாழ். போதனா வைத்தியாசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட் டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ். பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மாத்தறையில் விபத்து: தாய் பலி; மகள் படுகாயம்

மாத்தறையில் கடந்த ஞாயிற் றுக்கிழமை இடம்பெற்ற விபத்தில் தாய் பலியானதுடன், அவரது மகள் படுகாயமடைந்த நிலையில் வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளார்.

மாத்தறை தெலிஜவில என்னும் இடத்திலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பஸ்ஸுடன் சைக்கிள் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ள தாக பொலிஸார் தெரிவித்தனர்.

மகள் தனது தாயை சைக்கி ளில் ஏற்றிக்கொண்டு பயணித்த போதே இந்த விபத்து இடம்பெற் றுள்ளது.

# கடனட்டை மோசடி: ரோமானியர் இருவருக்கு விளக்கமறியல்

போலிக் கடனட்டை விவகா ரத்தில் கைதான ரோமானிய பிர ஜைகள் இருவரையும் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமற-ியலில் வைக்குமாறு கல்கிசை மேலதிக நீதவான் உத்தரவிட் டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இருவரை யும் தெஹிவளை பொலிஸார் கல்கிசை மேலதிக நீதவான் ரூவிர வெலிவத்த முன்னிலையில் இன்று ஆஜர் படுத்திய போதே மேலதிக நீதவான் மேற்கண்ட வாறு உத்தரவிட்டுள்ளார்.

போலி கடனட்டைகளை பயன் படுத்தி தெஹிவளை, கல்கிஸை, பம்பலப்பிட்டி போன்ற பகுதிகளி லுள்ள வங்கிகளின் தன்னியங்க பணம் பெறும் இயந்திரத்தில் பணங்களை பெற்றுக்கொண்ட ரோமானிய பிரஜைகள் இருவரை தெஹிவளை பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமி ருந்து 235, 100 ரூபாவும் 58 போலி கடனட்டைகளையும் பொலி ஸார் கைப்பற்றியமை குறிப்பிடத் தக்கதாகும்.

**ஹெஜிங் வழங்கு விவகாரம்:**

# அமெரிக்க நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக இலங்கை மேன்முறையீடு

**- அமைச்சர் சுசில்**

டொச் வங்கிக்கு எதிரான ஹெஜிங் வழக்கு குறித்து அமெ ரிக்க மத்தியஸ்த நீதிமன்றம் அறிவித்த தீர்ப்பு தொடர்பில் மேன்முறையீடு செய்வதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற் கொண்டு வருவதாக பெற்றோ லிய வளத்துறை அமைச்சர் சுசில் பிரேம ஜயந் தெரிவித்தார்.

மேன்முறையீடு செய்வதற்கான நடவடிக்கைகளை சட்ட மாஅதி பர் மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

டொச் வங்கியுடனான ஹெஜிங் உடன்படிக்கை மீறப்பட்டமை குறித்து அரசாங்கத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை அமெரிக்க மத்தியஸ்த நீதிமன் றம் விசாரித்தது.

அந்த மத்தியஸ்த நீதிமன்றத் தின் மூன்று நீதிபதிகளில் ஒருவர் இலங்கைக்கு சார்பாகவும் மற் றைய இரண்டு நீதிபதிகளும் எதி ராகவும் கருத்துக்களை கூறியி ருக்கின்றனர்.

இதற்கமைய வழங்கப்பட்டுள்ள தீர்ப்பினை ஆட்சேபித்து மேற் முறையீடு செய்வதற்குரிய வழி-வகைகளை சட்ட மா அதிபர் திணைக்களம் ஆராய்ந்து வருவ தாகவும் அமைச்சர் மேலும் குறிப் பிட்டுள்ளார்.

டொச் வங்கிக்கு எதிராக ஹெஜிங் வழக்கில் அந்த வங்கிக்கு இலங்கை பெற்றோலிய கூட்டுத் தாபனம் (சி.பி.சி) 60 மில்லியன் டொலர்களை செலுத்த வேண்டு மென அமெரிக்காவை தளமாகக் கொண்ட மத்தியஸ்த நிறுவனம் கடந்த வெள்ளிக்கிழமை தீர்ப்ப ளித்துள்ளது.

உரிய நேரத்தில் கடனை செலுத் தாமல் விட்டமைக்கான வட்டியு டன் இலங்கை பெற்றோலிய கூட் டுத்தாபனம் அக்கடனை செலுத்த வேண்டியிருக்குமென அத்தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தன.



இதேவேளை இது எங்களுக்கு எதிரான தீர்ப்பாகும் நாம், இந்த தீர்ப்பை செல்லுபடியற்றதாக்கத் தேவையான நடவடிக்கைகள் பற்றி யோசித்து வருகிறோம் என சட் டமா அதிபர் பாலித்த பெர் ணான்டோ தெரிவித்திருந்தார்.

2007 இல் உலக சந்தையில் எரிபொருள் விலை உயர்வ டைந்துகொண்டிருந்தபோது வங்கிகளிடம் இழப்பீடு பெறும் வகையில் இலங்கை பெற்றோ லிய கூட்டுத்தாபனம் ஹெஜிங் உடன்படிக்கையை செய்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# புகலிடக் கோரிக்கையாளர்கள் சிலர் நவ்ருவிலிருந்து நாடு திரும்ப விருப்பம்



அஸ்திரேலியா நவரு தீவில் இருகின்ற இலங்கையை சேர்ந்த புகலிட கோரிக்கையாளர்களில் சிலர் மீண்டும் நாடு திரும்புவ தற்கு விருப்பம் தெரிவித்துள்ள தாக அவுஸ்திரேலிய குடிவரவு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கையை சேர்ந்த புகலிட கோரிக்கையாளர்களில் ஆண்கள் 11 பேரே இவ்வாறாக நாடு திரும் புவதற்கு விருப்பம் தெரிவித்துள் ளதாக அத்திணைக்களம் அறிவித் துள்ளது.

அவுஸ்திரேலியாவின் புதிய குடியேற்ற சட்டத்தின் பிரகாரம் புகலிட கோரிக்கையாளர்களாக படகு மூலம் செல்பவர்கள் நவரு அல் லது பாப்புவா நியூ கினியா தீவு களுக்கு அனுப்பி வைக்கப்படு கின்றனர்.

தற்போது நவரு தீவில் 377 புகலிடக் கோரிக்கையாளர்கள் இருக்கின்றனர். புகலிட கோரிக் கையாளர்களில் 300 பேர் உணவை மறுக்கின்றனர்.

மேலும் 25 பேருக்கு மருத்துவ சிகிச்சையளிக்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக திணைக்களத் தின் பேச்சாளர் தெரிவித்தார்.

# நீர் நிலைகளில் இருந்து 5 சடலங்கள் மீட்பு

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து இன்று காலை ஐந்து சடலங்கள் மீட்கப பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பயாகல தியகொட எனுமிடத்தில் கடலில் குளிக்க சென்றவர்களில் இருவர் கடலில் மூழ்கி பலியாகியுள்ளனர்.

இதேவேளை லக்கல தெல்கமுவ எனு மிடத்தில் ஆற்றில் குளிக்க சென்ற இரு வர் நீரில் மூழ்கி பலியாகியுள்ளனர்.

அதுமட்டுமின்றி தென் களுத்துறை கடற்கரையில் மிதந்து கொண்டிருந்த ஆண்ணொருவரின் சடலமும் மீட்கப்பட் டுள்ளது.

மீட்கப்பட்ட சடலங்களை அடையாளம் காணும் நடவடிக்கையை அந்தந்த பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஜெட்லைனர் நாடு திரும்பியது

இலங்கை படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் இடம் பெற்ற யுத்தத்தின் போது துருப் புக்காவி கப்பலாக செயற்பட்ட ஜெட்லைனர் தனது இறுதி பய ணத்தை நேற்று மேற்கொண் டது.

இந்த கப்பல் இராணுவ தேவைகளுக்கு2006 ஆம் ஆண்டு முதல் சுமார் 6 வருடங் கள் பயன்படுத்தப்பட்ட பின்னர் அக் கப்பலை கையளிப்பதற்கு இலங்கை கடற் படையினர் தீர்மானித்துள் ளனர்.

மனிதாபிமான நடவடிக்கை உச்சக்கட்டத்தை எட்டியிருந்த போது இந்த கப்பல் இந்தோ னேசிய நிறுவனத்திடமிருந்து குத் தகைக்கு பெறப்பட்டிருந்தது.

ஒரே நேரத்தில் 3,000 படையினரை ஏற்றிச்செல்லும் வசதிகளை கொண்ட இந்த துருப்புக்காவி கப்பல், வடக் கிற்கும் கிழக்கிற் கும் இடை யில், இலங்கை படையினரை யும் பொருட்களையும் விரை வாக ஏற்றி இறக்குவதற்கு உதவியாக இருந்தது என கடற் படை பேச் சாளரான கொமாண்டர் கோசல வர்ண குல சூரிய தெரிவித்தார்.




திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறைக்கு இந்த கப்பல் வாரத்துக்கு மூன்று தடவைகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. 2009இல் போர்முடிவுக்கு வந்த பின்னர் உள்நாட்டு சேவைகளான கருத்தரங்குகள் மற்றும் விழாக் களை நடத்துவதற்கான மிதக்கும் அரங்கமாகவும் இது பயன்படுத் தப்பட்டு வந்தது. இந்த கப்பல் கொழும்பு துறைமுகத்தில் இருந்து இந்தேனேசியாவுக்கு பயணத்தை நேற்று முன்தினம் மேற்கொண்டது என அவர் தெரி வித்தார்.

தமிழ்நாதம்
Thamil Naatham

நவம்பர் மாதம் 06ஆம் திகதி செவ்வாய்க்கிழமை

## இந்திய இராணுவத் தளபதியின் இலங்கை விஜயமும் அதன் தாக்கமும்

இந்திய இராணுவத் தளபதி பிக்ரம் சிங் அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவிருக்கிறார். இந்த விஜயத்தின்போது இலங்கை - இந்திய கூட்டு இராணுவப் பயிற்சி, இருநாட்டு இராணுவத்திற்குமிடையில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது தொடர்பான வழிவகைகள் குறித்தும் ஆராயப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. அடுத்த வருட ஆரம்பத்தில் இரண்டு நாடுகளின் கூட்டு இராணுவப் பயிற்சி இடம்பெறலாம் என்றும் கூறப்படுகிறது. அண்மையில் திடீரென பாதுகாப்புச் செயலாளர் கோதபயா ராஜபக்ஷ புதுடில்லிக்கு மேற்கொண்ட விஜயத்தின் பின்புலத்தில் இந்திய இராணுவத் தளபதியின் இலங்கை விஜயம் அமைகிறது.

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், இந்திய பாதுகாப்புச் செயலாளர் சசிகாந் சர்மா ஆகியோருடனும் பாதுகாப்புச் செயலாளர் கோதபயா ராஜபக்ஷ பேச்சுவார்த்தைகள் நடாத்தியிருந்தார். ஆறரைக்கோடி தமிழ் மக்கள் வாழும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஜெயலலிதா, தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி ஆகியோரின் எதிர்ப்புகளுக்கு மத்தியிலயே இந்தியத் தளபதியின் இலங்கை விஜயம் அமைவது முக்கியத்துவம் வாய்ந்தது. இலங்கைப் படையினருக்கு இந்தியாவில் இராணுவப் பயிற்சி அளிக்கக் கூடாதென்று தமிழகத்தின் முக்கிய தலைவர்கள் மட்டுமல்ல, உதிரித் தலைவர்களும் கூட உரத்துக் குரல் கொடுக்கும் தருணத்தில் இந்தியத் தளபதியின் இலங்கை விஜயம் அமைகிறது.

இலங்கைப் படையினருக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் எதிர்த்துக் குரல் கொடுத்தவர்கள் முதல்வர் ஜெயலலிதாவும், கலைஞர் கருணாநிதியும், கச்சதீவை இந்தியா மீளப் பெற வேண்டும் என்றும் ஜெயலலிதா வலியுறுத்தி வந்தார். இந்திய மத்திய அரசின் கூட்டணியில் தி.மு.க. அங்கம் வகித்தாலும் நெகிழ்ச்சிப் போக்கோடும், இராஜதந்திரத்தோடும் இலங்கை விவகாரத்தை மன்மோகன் சிங்கின் அரசாங்கம் கையாண்டு வருகிறது. தமிழ்நாட்டின் தாம்பரத்தில் பயிற்சி பெற்று வந்த இலங்கை இராணுவ அதிகாரிகள் ஒன்பது பேரை நாட்டை விட்டே வெளியேற்றுமாறு தமிழகத் தலைவர்கள் கடந்த ஜீலையில் இந்திய மத்திய அரசிற்கு அழுத்தம் கொடுத்தனர்.இலங்கை இராணுவ அதிகாரிகளை வெளியேற்ற மறுத்த இந்திய அரசு, தென்னக மாநிலத்திலுள்ள பெங்களூரில் மற்றொரு இராணுவப் பயிற்சி மையத்திற்கு அவர்களை அனுப்பி வைத்தது.

தமிழகத்தில் ஆறரைக் கோடி தமிழர்கள் இல்லையென்றால், இலங்கைக்கெதிரான அழுத்தங்களை தமிழகத் தலைவர்கள் என்றுமே கொடுக்க மாட்டார்கள். இலங்கையில் 1983ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிராக ஜுலை இன சங்காரம் கட்டவிழ்த்து விடப்பட்ட போது தமிழகமே ஆர்த்தெழுந்தது. இலங்கையில் இடம்பெற்ற மூன்று தசாப்த கால யுத்தத்தின் பின்புலமாகத் தமிழகம் இருந்தும் வந்திருக்கிறது.

இந்த இன சங்காரத்தை அடுத்தே இந்தியாவில் இலங்கையின் தமிழீழக் குழுக்களுக்கு ஆயுதப் பயிற்சியும் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் 1987இல் செய்து கொள்ளப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தம் தமிழீழக் குழுக்களின் ஆயுதங்களை கையளிக்க வலியுறுத்தியது. ஆயுதங்களை கையளிப்பதாக பாசாங்கு காட்டிய புலிகள் இயக்கம், இந்தியப் படைகளுக்கு எதிராக தாக்குதல்களை கட்டவிழ்த்து விட்டது. புலேந்திரன், குமரப்பா, உட்பட புலிகளின் முக்கிய தலைவர்கள் தற்கொலை செய்து கொண்டதையடுத்து மோதல்கள் வெடித்தன.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள பல சிங்களக் கிராமங்களைப் புலிகள் தாக்கி அப்பாவிகளைக் கொன்றார்கள். காங்கேசன்துறை சீமேந்து தொழிற்சாலை, பலாலி தொலைக்காட்சி அலைபரப்பு நிலையம் ஆகியவற்றில் பணிபுரிந்து வந்த சிங்கள ஊழியர்களைப் புலிகள் சுட்டுக் கொன்றனர். தாம் காவலில் வைத்திருந்த எட்டு சிங்களப் பொலிஸ்காரர்களையும் புலிகள் சுட்டுக் கொன்று சடலங்களை பகிரங்க இடம் ஒன்றில் காட்சிக்கு வைத்தனர். வன்செயல்கள் அதிகரித்து வந்ததன் விளைவாக 1987ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஏழாம் திகதி இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியும், ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும் கூட்டறிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டனர்.

வடக்கு, கிழக்கில் வன்செயல்களில் ஈடுபடும் புலிகளைக் கண்ட இடத்தில் சுடுமாறு இலங்கை-இந்தியப் படைகளுக்கு இந்தக் கூட்டறிக்கை மூலம் உத்தரவிடப்பட்டது. இத்தகைய சூழ்நிலைகளுக்கு மத்தியில்தான் புலிகளை ஒழித்துக்கட்டும் "ஒப்பரேஷன் பவன்" இராணுவ நடவடிக்கையை இந்தியப் படைகள் ஆரம்பித்தன. ஒப்பரேஷன் பவன் என்றால் சுழல்காற்று என்று அர்த்தம், இந்தியப் படையின் சுழல் காற்று புலிகளை ஓரம் கட்டியது ஏதோ உண்மைதான். ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிற்குப் பிறகு ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸா புலிகளோடு பதின்னான்கு மாதங்களாக பேச்சுவார்த்தை நடாத்தினார்.

அதுவும் முறிவடைந்ததையடுத்து மீண்டும் மோதல்கள் வெடித்தன. இந்தியப் படைகளை இலங்கையின் வடக்கு, கிழக்கிற்கு அனுப்பி கையைச் சுட்டுக்கொண்ட இந்தியா, கடந்த பத்து வருடங்களிற்கு மேலாக இலங்கை விவகாரத்தில் தலையிடாமல் ஒதுங்கியே நின்றது. அப்போதெல்லாம் புலிகளுக்கு எதிராகக் கர்ண கடூரமாகக் குரல் கொடுத்தவர் இன்றைய தமிழக முதல்வர் ஜெயலலிதா. கால, தேச, வர்த்தமான சூழ்நிலைகளுக்கு ஏற்பவும், மேலாதிக்க வல்லரசுகளின் நிலைப்பாட்டுக்கு இணங்கவும் இலங்கை, இந்திய உறவுகளில் அவ்வப்போது ஏற்ற இறக்கங்கள் ஏற்பட்டு வந்திருக்கின்றன. இலங்கையை இந்தியா ஆக்கிரமிக்கப் போகிறது என்ற பீதி கூட முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவை ஆட்டிப் படைத்திருக்கிறது. இன்று யுத்தம் முடிவுக்கு வந்திருக்கிறது. நிலைமைகள் தலைகீழாக மாறிவிட்டன. இலங்கை-இந்திய உறவுகள் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பது இன்றைய எதிர்பார்ப்பாகும்.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி- 021-2219567 / பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# மூன்று இலட்சம் தமிழ் மக்களை அகதிகளாக்கிய 3ஆவது ஈழப்போர்

*(நேற்றைய தொடர்ச்சி)*

அரசாங்கத்தின் ஆயுதப் படைகள் யாழ் நகரத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தன. யாழ்ப்பாணத்தைத் தொடர்ந்தும் புலிகளால் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாத நிலைமை. ஆரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மக்களை வாழவிடக் கூடாதெனப் புலித் தலைமை முடிவெடுத்தது.

இந்த நிலையில்தான் புலிகள் யாழ் மக்களுக்கு ஓர் அறிவித்தல் விடுத்தனர்.

"யாழ்ப்பாண நகரம் விரைவில் யுத்த பூமியாகிவிடும். அதிகாலை நான்கு மணிக்கு நாவற்குழிப் பாலத்தை வெடிவைத்து தகர்க்கப்போகிறோம். அதற்குள் நீங்கள் வெளியேறாவிட்டால் பின் விளைவுகளை நீங்கள் சந்திக்க வேண்டியேற்படும்"

இவ்வாறு யாழ் நகர மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. நள்ளிரவு 12.00 மணியளவில் நாவற்குழிப் பாலத்தைத் தகர்க்கப் போவதாக உடுவில் பகுதி மக்களுக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. யாழ்ப்பாணததைக் கைப்பற்றி சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவதே அரசாங்கத்தின் திட்டமாக இருந்தது.

அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மக்களை இருக்க அனுமதிக்கக்கூடாது என்பதே புலிகளின் நோக்கம். ஜுலை மாத இராணுவ நடவடிக்கைகளிலிருந்து தொடர் தோல்விகளைப் புலிகள் சந்தித்து வந்தனர். இதனால் வன்னிப் பகுதிகளுக்குப் பின்வாங்குவதற்காகவே இவ்வாறு அறிவுறுத்தல்களை மக்களுக்கு விடுத்தனர். வன்னிக்குப் பின்வாங்கிய பின்னர் அரச படையினர் மீது கெரில்லாத் தாக்குதல்களைத் தொடர்வதற்குப் புலித் தலைமை முடிவெடுத்தது. கெரில்லாத் தாக்குதல்களை நடத்திவிட்டுத் தப்பிச் சென்று பாதுகாப்பாகத் தங்குவதற்கு தளப் பிரதேசம் தேவை. யாழ்ப்பாணம் அரச படையினரின் கைகளுக்குள் சிக்குமென்பது உறுதியாகிவிட்டது. எனவே வன்னிக்கு மக்களை விரட்டிச் சென்று அங்கு தமது தளப் பிரதேசத்தை நிறுவித் தமது நிர்வாகக் கட்டமைப்புகளை ஏற்படுத்தும் நோக்குடன்தான் புலிகள் மக்களுக்கு இவ்வாறான அறிவுறுத்தல்களை விடுத்தனர்.

நிலைமைகளைச் சரிவரப் புரிந்துகொள்வதற்கு வட பகுதியின் பூகோள நிலைமைகளைப் புரிந்துகொள்வது அவசியம். நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட நிலப் பரப்பு "தீவு" என அழைக்கப்படுகிறது. மூன்று பக்கங்கள் கடலால் சூழப்பட்ட நிலப் பரப்பு "குடாநாடு" என்று அழைக்கப்படுகிறது. யாழ்ப்பாணம் ஒரு குடாநாடு. யாழ் குடாநாட்டுக்கு அண்மித்ததாக அனலைதீவு, மண்டைதீவு, நெடுந்தீவு, எழுவைதீவு, நயினாதீவு உட்பட பல தீவுகள் உள்ளன. 1990ஆம் ஆண்டு ஆகஸ்டில் இத் தீவுகளை இராணுவம் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. அப்போதைய இராணுவ நடவடிக்கையின்போது தீவுப் பகுதிகளை விட்டு வெளியேறிய மக்களை மீண்டும் தீவுப் பகுதிகளுக்குச் செல்லப் புலிகள் அனுமதிக்கவில்லை.

யாழ்.குடாநாட்டின் வட திசையிலுள்ள பருத்தித்துறை உள்ளிட்ட பகுதிகள் வடமராட்சி என்று அழைக்கப்படுகிறது. குடாநாட்டின் தென்புறத்தேயுள்ள சாவகச்சேரி உள்ளிட்ட பகுதிகள் தென்மராட்சி என்று அழைக்கப்படுகிறது. யாழ் குடாநாட்டையும் வன்னி உட்பட நாட்டின் பெருநிலப் பரப்பையும் இணைப்பதற்கான ஒரேயொரு தரைவழிப் பாதைதான் உண்டு. நாவற்குழியிலுள்ள தரைவழிப் பாதையே அது. நாவற்குழிப் பாலமே அது. அதனைச் செம்மணிப் பாலமென்றும் அழைப்பதுண்டு. கடலேரியொன்று யாழ் குடாநாட்டையும் நாட்டின் பெருநிலப் பரப்பையும் பிரிக்கிறது. சாவகச்சேரியிலிருந்து மறுமுனையிலுள்ள சங்குப்பிட்டிக்கு வள்ளங்கள் மூலம் கடலேரியைத் தாண்டிச் செல்ல முடியும். இதனால்தான் யாழ்ப்பாணத்திலிருந்து மக்களை மிரட்டி, விரட்டிய புலிகள், தப்பிச் செல்லும் மக்களை மறுமுனையில் கொண்டு சென்று விடுவதற்கு இலவச படகுச் சேவையையும் நடத்தினர்.

அக்காலகட்டத்தில் "புலிகளின் குரல்" என்ற வானொலி சேவையைப் புலிகள் நடத்திவந்தனர். அன்றோ அதற்குப் பின்னரோ செம்மணிப் பாலத் தகர்ப்புச் சம்பந்தமான செய்தியைப் "புலிகளின் குரல்" ஒலிபரப்பவில்லை. அவர்கள் அறிவித்தபடி செம்மணிப் பாலம் தகர்க்கப்படவில்லை.

ஒக்டோபர் மாதம் முப்பதாம் திகதி மாலை ஆறு மணியளவில் கண்டி வீதி மக்களால் நிரம்பி வழிந்துகொண்டிருந்தது. பீதியடைந்த மக்கள் கால்நடையாகவும் மாட்டு வண்டில்கள், சைக்கிள்கள் மூலமாகவும் யாழ் நகரத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தார்கள். கையில் அகப்பட்ட பொருட்களை மூட்டை முடிச்சுகளாகக் கட்டிக்கொண்டு மக்கள் அடித்துப் பிடித்து வெளியேறிக்கொண்டிருந்தார்கள். முந்நூறு யார்களைக் கடப்பதற்கு இரண்டு மணித்தியாலங்கள் தேவைப்பட்டன. முத்திரைச் சந்திக்கும் நாயன்மார்கட்டுக்கும் கால் மைல் இடைவெளியே இருக்கும். அன்று சில சந்தர்ப்பங்களில் இந்தத் தூரத்தைக் கடப்பதற்கு நான்கு மணி நேரங்கள் பிடித்தன. யாழ் நகரத்தை விட்டு வெளியேறாமல் தங்கியருக்கும் மக்கள் "துரோகிகள்" என்றும், "இராணுவத்தின் ஒற்றர்கள்" என்றும் புலிகள் கூறியதால் மக்கள் பீதியடைந்திருந்தனர். காணி உறுதிப் பத்திரங்கள், கல்வித் தராதரப் பத்திரங்களைக் கைவிட்டுச் சென்றாலும், புலிகளின் தேசிய பாதுகாப்பு நிதிக்குப் பணம் வழங்கியதற்கான ரசீதை மக்கள் எடுத்துச் செல்ல மறக்கவில்லை.

கிட்டத்தட்ட ஆறு வருடங்கள் புலிகளின் கட்டுப்பட்டில் வாழ்ந்த யாழ் குடாநாட்டு மக்கள் சிலர் கொதிப்படைந்திருந்தனர். சில இடங்களில் புலிகளின் காவல் துறைக்கும் மக்களுக்குமிடையில் மோதல்களும் இடம்பெற்றன. யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரிக்கு இடையிலான சுமார் பத்து, பன்னிரண்டு மைல்களைக் கடப்பதற்கு இருபது மணித்தியாலங்கள் சென்றனவென்றால் மக்கள் எத்தனை கஷ்டங்களை அனுபவித்திருப்பார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். முப்பதாம் திகதி இரவு ஏற்பட்ட சன நெரிசலில் கிட்டத்தட்ட பத்து பேருக்கு மேற்பட்டவர்கள் மரணமடைந்தனர். இவர்களில் மூவர் சிறுபிள்ளைகள். ஏனையோர் நோயாளிகளும் வயோதிபர்களுமாவர். மக்கள் வெளியேறிக் கொண்டிருந்தபோது மழையும் பெய்து கொண்டிருந்தது. அந்த மழைநீரால் தமது வரண்டுபோன நாவை ஈரப்படுத்திக்கொண்டார்கள். குடைகளில் நீரைத் தேக்கி பிள்ளைகளுக்குப் பருக்கினார்கள். நடந்துகொண்டே இதனை அவர்கள் செய்யவேண்டியிருந்தது.

அக்டோபர் முப்பதாம் திகதி பெருமளவு மக்கள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறினர். இருந்தாலும் கணிசமான மக்கள் யாழ் நகரத்திலேயே தங்கியிருக்கத் தீர்மானித்திருந்தனர். யாழ் ஆஸ்பத்திரி வளாகப் பகுதி மோதல் களற்ற பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தமையும், செஞ்சிலுவைச் சங்கக் கமிட்டியின் பிரசன்னமும் சிலருக்கு நம்பிக்கையை ஊட்டியிருந்தன. யாழ் மக்களின் அவலங்கள் குறித்து நவம்பர் மாதம் மூன்றாம் திகதி ஐ.நா.செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் கீழ்க்கண்டவாறு கூறினார். செயலாளர்நாயகம் புட்றோஸ் புட்றோஸ்-காலியின் பேச்சாளர் விடுத்த அறிவிப்பு மனதை உருக்கும் வகையில் அமைந்திருந்தது.

"இலங்கையின் வடபகுதியில் பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்துள்ளனரென்று வெளிவரும் அறிக்கைகள், செயலாளர் நாயகத்துக்குப் பெரும் மனவருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. மக்களின் துயரங்களைக் குறைப்பதற்கு பெருமளவு மனிதாபிமான உதவிகள் அவசியமாகத் தேவைப்படுகின்றன"

இந்த அறிவிப்பு யாழ் மக்கள் சந்தித்த அவலங்களுக்கு இரத்த சாட்சியமாகும். ஆனால் மக்களை மிரட்டியும், ஷெல் தாக்குதல்களை நடத்தியும் வெளியேற்றிய புலிகள் "சிங்கள இராணுவ ஆட்சியின் கீழ் இருக்க விரும்பாமல் மக்கள் தாமாகவே வெளியேறினர் என்று கூறினர். புலிகளின் பத்திரிகையான "ஈழநாதம்" அப்போது கிளிநொச்சியிலிருந்து வெளிவந்து கொண்டிருந்தது. மக்களின் வெளியேற்றம் குறித்துக் கீழ்ககண்டவாறு "ஈழநாதம்" பத்திரிகையில் அறிவிப்பொன்றினைப் புலிகள் வெளியிட்டிருந்தனர். நவம்பர் மாதம் எட்டாம் திகதி இந்த அறிவிப்பு வெளியாகியிருந்தது.

"தமக்குத் தேவையான அவசர பொருட்களை மட்டும் எடுத்துக் கொண்டு, இரண்டு பக்கங்களும் நீரினால் சூழப்பட்ட ஒரு ஒடுக்கமான பாதையூடாக ஒரே இரவில் ஐந்து இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறினர். கர்ப்பிணிப் பெண்கள். சிசுக்கள், தாய்மார்கள், வயோதிபர்கள், நோயாளிகள், காயமுற்ற போராளிகளும் இதிலடங்குவர்.. சன நெரிசலுக்கு மத்தியில் அவர்கள் இருந்து, நடந்து, வீழ்ந்து, எழும்பி, தவழ்ந்து வந்தார்கள். சிங்கள இராணுவ ஆட்சியின் கீழ் எமது மக்கள் வாழ முடியாது, வாழ விரும்பவில்லை என்ற உண்மையை உலகுக்கு அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்"

இதில் ஐந்து இலட்சம் மக்கள் வெளியேறினார்கள் என்பது அப்பட்டமான பொய். மக்கள் சிங்கள இராணுவ ஆட்சியின் கீழ் வாழ விரும்பாமல் தாமாகவே வெளியேறினார்கள் என்பதும் பொய். இதே அறிக்கையின் இறுதிப் பகுதியில் மக்களை வெளியேறுமாறு தாம் உத்தரவிட்ட உண்மையை புலிகள் ஏற்றுக்கொண்டார்கள்.

- எஸ்.அருளானந்தன்

(7ம் பக்கம் பார்க்க)

### மனச்சாய்வுகளுக்கு யாரும் விலக்கல்ல

# ஒரு ஆய்வு முடிவை மாற்ற எத்தனை பேர் தேவை?

மனச்சாய்வுகள் அறிவின் குறுக்கு வழிகள் - நம் மூளை சோம்பலாலோ பழக்கத்தாலோ அளவுக்கு அதிகமான தன்னம்பிக்கையாலோ இந்தக் குறுக்கு வழிகளைப் பயன்படுத்துகிறது. எல்லா குறுக்கு வழிகளைப் போலவும் இதிலும் பாதை தவற வாய்ப்பிருக்கிறது.

குறுக்கு வழியில் செல்பவர்களைப் பொறி வைத்துப் பிடிக்கும் மேற்கண்ட புதிரைப் போன்ற கேள்விகளை நோபல் பரிசு பெற்ற உளவியலாளர் டானியல் காஹ்ன்மேன் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகக் கேட்டுக் கொண்டிருந்தார். ஆனாலும் அவர் அத்தனை ஆண்டுகள் மனச்சாய்வுகளைப் பற்றியும் அவற்றால் ஏற்படும் பிழைகளைப் பற்றியும் ஆய்வு செய்தபின்னும் அதிலிருந்து தன் புத்தி பாடம் எதுவும் கற்றுக்கொள்ளவில்லை என்பதைத்தான் ஒப்புக்கொண்டார். முன்னிருந்தது போலவே இப்போதும் அதீத தன்னம்பிக்கை, மிகைப்பட்ட கணிப்புகள், விரைவில் முடித்துவிடலாம் என்று தவறான திட்டமிடல் போன்ற பிழைகளைத் தொடர்ந்து செய்வதைத் தன்னால் தவிர்க்க முடியவில்லை என்றுதான் சொன்னார் அவர். நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானிக்கே இந்தக் கதி. அதிலும் அவரது ஆய்வு மனச்சாய்வுகளைப் பற்றியதாக இருந்திருக்கிறது!

அறிவியல் புறவயப்பட்ட, தற்சார்பற்ற துறை என்பது பொது நம்பிக்கையாக இருக்கிறது. அப்படி ஒரு நம்பிக்கை இருப்பதால் தான் நம்மால் அறிவியலின் முடிவுகள் உண்மைக்கு விளக்கம் தருகின்றன என்று நம்ப முடிகிறது. ஆனால், இயந்திரங்களைப் போல் அறிவியல் உணர்வற்றதல்ல, அது மனிதர்களின் கூட்டு முயற்சியாக இருப்பதால் கூட்டு முயற்சிகளுக்குரிய அனைத்து சாதக பாதகங்களும் அதற்கும் உண்டு. அறிவியலின் நம்பகத்தன்மைக்கு தற்சார்ப்பே ஆகப் பெரிய ஆபத்தாக இருக்கிறது. அதிலும் குறிப்பாக தற்சார்பின் காரணமாக “அறியாமல்“ நிகழும் “உள்நோக்கமற்ற“ பிழைகளும் திரிபுகளும் எப்போதும் ஒரு அச்சுறுத்தலாகவே இருக்கின்றன. இப்படிப்பட்ட பிழைகளைத் தவிர்க்கவே, சக அறிவி



யலாளர்களின் பார்வைக்கு ஒவ்வொரு அறிவியல் ஆய்வின் முடிவும் வைக்கப்பட்டு அதன் பின்னரே ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

பொதுவாகவே நம் அனைவருக்கும் மனச்சாய்வுகள் உண்டு என்பதையும் ஒரே பண்பாட்டைச் சேர்ந்த அறிவியலர்கள் தம் பண்பாட்டையொட்டிய மனச்சாய்வுகளைத் தாண்டி வருவது அவ்வளவு எளிதல்ல என்பதையும் மனச்சாய்வுகளின் இயல்பை அறிந்தவர்களும்கூட அதற்கு பலியாகின்றனர். மொத்தத்தில், பல பண்பாடுகள் கொண்டதாக மானுட இனம் இருப்பதே அறிவியலையும் சிறப்பிக்கிறது.

**மனசாய்வுகளுக்கு யாரும் விலக்கல்ல**

நம் சிந்தனையின் குறைகளை நாம் அறிந்திருந்தாலும் அதனால் பிழை செய்யாமல் இருக்க முடிவதில்லை. நமக்கு நம் சிந்தனையில் இருக்கும் நம்பிக்கை மற்றவர்களிடத்தில் இல்லை, நாம் புத்திசாலிகள் என்ற இந்த மிகை நம்பிக்கை மற்றவர்கள் எடுக்கும் தவறான முடிவுகளை எளிதில் அடையாளம் கண்டு கொள்ள உதவுகிறது - ஆனால் நம் தவறுகளையே பார்த்துக் கொள்ள முடியாத வகையில் அந்த நம்பிக்கை நம் சிந்தனையையும் குருடாக்கி விடுகிறது. சாமானியனின் நிலைமையே இப்படி என்றால் வெற்றி பெற்றவர்கள் என்றும், அறிவாளிகள் என்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களைப் பற்றி சொல்லவும் வேண்டுமா? மற்றவர்களைவிட இவர்கள் அதிக அளவில் மனச்சாய்வு கொண்டவர்களாக இருக்கின்றனர் என்று எழுதுகிறார் லெஹ்ரர்.

**இயற்கையைப் புரிந்து கொள்ளும் ஆய்வுகளை ஒரே மாதிரி சிந்திக்கும் பூசாரிகளின் தனிப்பொறுப்பில் விட்டுவிடக் கூடாது. ஒவ்வொரு பண்பாடும் தன்னைச் சூழும் இயற்கையின் மையத்தில்தான் இருக்கிறது. அது இயற்கையைத் தன் வழியில் காண்கிறது, இயற்கையிலிருந்து தன்னைப் பிரித்துக் கொண்டுப் பின்வாங்கி அதை உள்ளபடியே அறியும் ஆற்றல் எந்தப் பண்பாட்டுக்கும் கிடையாது. உண்மையை முழுமையாக அறிய பல்வகைப்பட்ட விஞ்ஞானிகளும் தேவைப்படுகின்றனர்.**

சமூகத்தில் பெரிய அளவில் தாக்கத்தை உண்டாக்கக்கூடிய துறைகளையும் பெரும்பதவிகளையும் ஆக்கிரமித்துள்ள அறிவாளிகளுக்கு நமக்கு இருக்கும் நடுநிலைமைகூட இல்லை என்பது அதிர்ச்சியாகத்தான் இருக்கிறது. ஆனாலும் ஆய்வின் முடிவுகள் அப்படி சொல்லும்போது நம்மால் அதைக் கேள்வி கேட்க முடியாது - அந்த அவசியமும் நமக்கு இல்லை!

**டாக்டர் இமானிஷியின் வினோத வழக்கு**

பண்பாட்டு மனச்சாய்வுகளைப பற்றிய கட்டுரையை எழுதிய ஃப்ரான்ஸ் டி வால் 1975லிருந்து குரங்குகளின் சமூக வாழ்க்கையை ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார். குரங்குகள் ஒன்றையொன்று ஏமாற்றுகின்றன, தங்கள் பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக் கொள்கின்றன என்றெல்லாம் சொன்ன இவரது ஆரம்ப கால ஆய்வுகளை முதலில் யாரும் ஏற்றுக் கொள்வதாயில்லை - ஆனால் இப்போது அவரை மறுத்துப் பேச ஆளில்லை.

மற்ற விலங்குகளை நாம் எப்படி பார்க்கிறோம் என்பது நம்மை நாம் எப்படி பார்க்கிறோம் என்பதைப் பொறுத்தது. நம்மால் நம் பண்பாட்டுப் பின்னணியைத் தாண்டி விலங்குகளைப் பற்றி ஆய்வு செய்வதோ அவற்றைப் புரிந்து கொள்வதோ முடியாது என்று சொல்கிறார் அவர். இதற்குச் சான்றாக போட்டியும் கொலைவெறியுமே இயற்கை நியதி என்று நம்பும் டார்வினிய பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டை, ஜப்பானிய குரங்கியல் துறை ஆய்வாளர் முன் வைத்த, “இயற்கை கூட்டுறவையே வெளிப்படுத்துகிறது,“ என்ற கோட்பாட்டையும் ஒப்பு நோக்குகிறார் டி வால்.

இமானிஷி இயற்கையில் கூட்டுறவு இயல்பாக இருப்பதாகக் கூறுவதை மேலை நாட்டு ஆய்வாளர்கள் எவராலும் ஏற்றுக் கொள்ள முடிவதில்லை. இவர்களில் ஹால்ஸ்டெட் என்ற பிரிட்டிஷ் விஞ்ஞானி ஜப்பானுக்கே சென்று இமானிஷியைச் சந்தித்து அவரது முடிவுகளை இமானிஷியுடன் நேருக்கு நேர் விவாதித்து நிராகரித்திருக்கிறார். இந்தச் சந்திப்பைப் பற்றி நேச்சரில், ”கிஞ்சி இமானீயின் எழுத்து ஜப்பானில் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பது ஜப்பானியர்கள் குறித்த சுவையான புரிதலைத் தருகிறது” என்றும் எழுதினார் அவர்.

இயற்கையை கூட்டுணர்வு நிறைந்த ஒன்றாகக் கண்ட ஜப்பானியர்களின் கண்களுக்கு அவர்களது பண்பாடு அப்படிப்பட்ட சாயம் பூசுகிறது என்றால் இயற்கையைப் போட்டி நிறைந்த ஒன்றாகக் கண்ட ஐரோப்பிய-அமெரிக்கர்களுக்கும் அந்த நியாயம் பொருந்தாதா என்று கேட்கிறார் டி வால். வல்லவன் வாழ்வான் என்ற டார்வினியக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்ட மேலை நாடுகள்தான் சுதந்திரச் சந்தை முதலியப் பொருளாதார அமைப்பையும் உலகளவில் வலியுறுத்துகிறது? இது ஒன்றும் உடன் நிகழ்வல்லவே? சமூக விழைவுகளுக்கு ஜப்பான் முக்கியத்துவம் தந்தால், தனி மனித உரிமைகளுக்கு மேலை நாடுகள் முக்கியத்துவம் தருகின்றன. இந்தப் பண்பாட்டு வேற்றுமையால்தான் இவர்கள் இயற்கையை இப்படி மாறுபட்ட கோணங்களில் பார்க்கின்றனர்.

குரங்குகளை ஆய்வு செய்த மேலை நாட்டு விஞ்ஞானிகள் அவற்றைக் கூட்டங்களாகவே கண்டனர், குரங்குகளுக்கு சுயம் சார்ந்த தனி அடையாளத்தைத் தர அவர்களுடைய மனம் ஒப்பவில்லை. ஆனால் ஜப்பானியரான இமானிஷி குரங்குகளையும் மனிதர்களைப் போலவே பார்த்தார். பிளாட்டோ மனிதனை உயிர்களின் உச்சியில் வைத்தார், அதையொட்டிய மேலைச் சிந்தனை மனிதனின் தனித்தன்மைகள் அனைத்தையும் ஏனைய விலங்குகளுக்கு மறுத்தது. இமானிஷிக்கு அந்தச் சிக்கல் எதுவும் இல்லை. அவர் குரங்குகளைத் தனித்தன்மை கொண்டவையாகப் பார்த்து, அவற்றுக்கிடையே இருந்த உறவு முறைகளைத் தலைமுறை தலைமுறையாகக் கவனித்தார். ஆரம்ப காலத்தில் இந்த அணுகுமுறையை கேலி செய்த மேலை நாட்டினர் இன்று இதை முழுக்க முழுக்கப் பின்பற்றுகின்றனர் என்று சொல்கிறார் டி வால் - இது ஜப்பானிய அணுகுமுறை என்பதையும் மறந்து விட்டனராம் அவர்கள். அவ்வளவு மௌனமாக இந்த ஊடுருவல் நிகழ்ந்திருக்கிறது. விலங்குகளை மனிதர்களாகப் பார்க்கக்கூடாது என்று சொன்னவர்கள் இன்று டால்பின் முதற்கொண்டு அனைத்து விலங்குகளையும் தனித்தன்மை கொண்டவையாகவே கருதி அவற்றைத் தொடர்ந்து கவனிக்கின்றனர். இப்படிச் செய்யாமல் விலங்குகளின் சமூக வாழ்க்கையைப் புரிந்து கொள்ள முடியாது என்பதுதான் உண்மை.

1958ல் இந்த உண்மையைப் பேசிக்கொண்டு அமெரிக்கா வந்த இமானிஷியும் அவரது மாணவர்களும் ஏளனத்தையே எதிர்கொண்டனர். அத்தனை குரங்குகளையும் இவர்களால் தனித்தனியாகப் பிரித்து அடையாளம் கண்டு பிடிக்க முடிகிறதா என்ன, என்பதே கூட அறிவுத்துறைகளில் முன்னணியில் இருந்த அமெரிக்கர்களுக்கு வேடிக்கையான விஷயமாக இருந்திருக்கிறது. ஜப்பானிய ஆய்வுகளைப் படிக்கவோ பின்பற்றவோ கூடாது என்பது மேலை நாட்டுப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு வலியுறுத்தப்பட்டது - அவ்வளவும் தப்பாம்!

மேலை நாட்டு அறிவியல் விலங்குகளின் இயல்பு பிறப்பால், அவற்றின் மரபணுப் பரிமாற்றத்தால் வருகிறது என்பதை வலியுறுத்தியது. அவற்றின் பழக்க வழக்கங்கள் அறிவற்றவை, அதில் கற்றல் என்ற பேச்சுக்கே இடமில்லை, எல்லாமே அனிச்சைச் செயல்கள் என்பதாக இருந்தது. அவர்களின் விலங்கு ஆய்வுகள் எலிகளுக்கு ஷொக் கொடுத்தன. ஆனால் ஜப்பானியர்களுக்கு விலங்குகளுக்கு ஆன்மா இல்லை, அறிவில்லை என்ற நம்பிக்கைகள் தடைகளாக இருக்கவில்லை. கோஷிமா என்ற தீவில் உள்ள குரங்குகளுக்கு உருளைக் கிழங்கைக் கழுவி உண்ணும் பழக்கத்தைப் புகட்டி, அது எவ்வாறு குரங்குகளிடையே பரவுகிறது என்பதை ஆவணப்படுத்தினர். இது சந்தேகத்துக்கு இடமின்றி விலங்குகளுக்கு சமூக வாழ்க்கை இருக்கிறது என்பதையும் அவை ஒன்றைக் கண்டு ஒன்று கற்கின்றன என்பதையும் நிரூபித்தது.

இன்று இந்த முறைகளைக் கொண்டு பண்பாடு சார்ந்த கற்றல் பறவைகளின் பாடல்களிலும் திமிங்கலங்களின் வேட்டைப் பழக்கங்களிலும் சிம்பன்சிகளின் கருவிப் பயன்பாட்டிலும் இருக்கிறது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். இமானிஷியின் ஆய்வு முறைகளைப் பயன்படுத்தாமல் இது சாத்தியமாகி இருக்காது.

எப்போதோ ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்க வேண்டிய இமானிஷியின் ஆய்வு முறை ஏன் இவ்வளவு காலதாமதமாக, இத்தனை எதிர்ப்பையும் ஏளனத்தையும் எதிர்கொண்டு, இன்று அதன் ஜப்பானிய அடையாளமும் அழிக்கப்பட்ட நிலையில் அறிவியலாக அங்கீகாரம் பெற்றது? முன் சொன்ன பண்பாடு ஒரு காரணம். குரங்குகள் விஷயத்தில் ஜப்பானிய பண்பாடு சரியான முடிவுகளை அடைய உதவியாக இருந்திருக்கிறது. எப்படி மேலை நாட்டு ஆய்வாள்ர்களால் தங்கள் பண்பாட்டுக்கு வெளியே சிந்தித்திருக்க முடியாதோ அதே போல் ஜப்பானிய விஞ்ஞானிகளாலும் தங்கள் பண்பாட்டைத் தாண்டிச் சிந்தித்திருக்க முடியாது.

இதைக் காரணம் காட்டி டி வால் பண்பாட்டு மனச்சாய்வைத் தவிர்க்க முடியாது என்ற நிலையில் என்ன செய்யலாம் என்று சொல்கிறார்:

”மேலை நாட்டு அறிவியல் மேலாதிக்கத்தைக கண்டு நாம் ஏமாந்துவிடக் கூடாது. உலகின் அனைத்து நாடுகளையும் ஏவலாட்களாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்று எந்த ஒரு நாடும் நினைப்பதைப் போன்ற பேதைமை அது. இயற்கையைப் புரிந்து கொள்ளும் ஆய்வுகளை ஒரே மாதிரி சிந்திக்கும் பூசாரிகளின் தனிப்பொறுப்பில் விட்டுவிடக் கூடாது. ஒவ்வொரு பண்பாடும் தன்னைச்



சூழும் இயற்கையின் மையத்தில் தான் இருக்கிறது. அது இயற்கையைத் தன் வழியில் காண்கிறது, இயற்கையிலிருந்து தன்னைப் பிரித்துக் கொண்டுப் பின்வாங்கி அதை உள்ளபடியே அறியும் ஆற்றல் எந்தப் பண்பாட்டுக்கும் கிடையாது. உண்மையை முழுமையாக அறிய பல்வகைப் பட்ட விஞ்ஞானிகளும் தேவைபபடுகின்றனர். கண்ணாடியில் திரித்துத் தெரியும் பல்வேறு பிம்பங்களை ஒப்பிட்டு அதன் உண்மை உருவை அறிவது போன்ற விஷயம் இது. மிகப் பெரிய அளவில் திரிக்கப்பட்ட நம் செய்திகளில் எங்கேயோ உண்மை இருக்கிறது”

முதலில் சொன்ன மாதிரி, பல பண்பாடுகள் கொண்டதாக மானுட இனம் இருப்பதே அறிவியலையும் சிறப்பிக்கிறது.



## உயிர் வாழும் உரிமைக்கு உலை வைக்கும்

# மரபணு தொழில்நுட்பம்

நாம் அன்றாடம் உண்ணும் உணவில் சேர்த்துக் கொள்ளப்படும் தக்காளியில் மீனின் மரபணுவும் உள்ளது. நீங்கள் வெஜிடேரியனா? சிகிச்சை மற்றும் பல காரணங்களுக்காக புலால் உணவு தவிர்ப்பவரா? அப்படியானால் இன்னுமொரு கூடுதல் அதிர்ச்சியும் காத்திருக்கிறது. தக்காளிக்குள் தவளையின் மரபணுவும் உள்ளது. இந்தத் தகவல் உங்களுக்கு குமட்டலை ஏற்படுத்தினாலும் அதிர்ச்சியில் மயக்கமே வந்தாலும் இது தான் உண்மையாகும். எந்த உண்மையும் சற்று கசக்கவே செய்யும் என்பார்கள். ஆனால் இந்த உண்மை கசக்க மட்டும் செய்யாது பலவீனமானவர்களுக்கு மாரடைப்பையே ஏற்படுத்தும்.

இவையெல்லாம் மரபணு தொழில்நுட்பம் என்ற பெயரில் நடைபெற்று வரும் காய்கறி உற்பத்திகள். இந்தத் துறையில் இன்னும் நடைபெறப்போகும் சில உண்மைகளைக் காண்போம். நீங்கள் உங்கள் நண்பரின் பிறந்த நாள் பரிசாக பூங்கொத்து ஒன்றைக்



கொடுக்கும்போது அதை மல்லிகை மணம் கொண்ட பச்சை வண்ணத் தாமரை மலராகக் கூட கொடுக்கலாம். அந்த நண்பரின் விழாவில் விருந்தாக பழங்களும் உணவு வகைகளும் சதுரமாகவும் நீளமாகவும் வழங்கப்படலாம். விழா வானவில்லின் ஏழு நிறங்களான புல் தரையில் கூட நிகழலாம். மூன்று மாதங்களுக்கு முந்தைய தக்காளியில் பழச்சாறு பிழிந்து குடிக்கலாம். அந்தத் தக்காளியும் தற்போது பறித்ததுபோல் பளபளப்பாகவும் அழகாகவும் இருக்கும். அதே சமயம் வனங்களுக்கு நீங்கள் சுற்றுலா சென்றால் அங்கே தேளின் கொடுக்கை கொண்ட யானையைப் பார்க்கலாம். பறக்கும் எட்டுக்கால் பூச்சியை நீங்கள் பார்க்க நேரிடலாம். இவை எல்லாம் காமிக்ஸ் படங்களில் வருவது போன்று அதிசயமாக இருக்கலாம். இன்னும் எவ்வளவோ வியப்புகள் உள்ளன. இவற்றை நிகழ்த்தி வருவது மரபணு பொறியியல். இப்படி ஆராய்ச்சிக்கூடங்களில் உருவாக்கப்பட்ட உயிரினங்கள் (செடிகள் உள்ளிட்ட பல வகை தாவரங்கள், விலங்குகள்) மரபிணி மாற்ற உயிரினங்கள் (genetically modified organisms) என்றழைக்கப்படுகின்றன.

தக்காளியில் தவளையும் மீனும் வருவது எப்படி? காய்கறிகளையும் பழங்களையும் சதுரமாகவும் நீளமாகவும் எப்படி உருவாக்குகிறார்கள்? எதற்காக உருவாக்குகிறார்கள்? ஏன்? இந்த கேள்விகளுக்கு பதில் காண வேண்டுமானால் நீங்கள் மரபணு தொழில்நுட்பத்தை புரிந்து கொள்ள வேண்டும். அறிவியலில் ஏற்பட்டுள்ள பிரம்மாண்டமான வளர்ச்சியின் முக்கிய மைல்கல்லாக மரபணு தொழில் நுட்பம் கண்டுபிடிக்கப்பட்டது. இது மரபணு தொழில் நுட்பம் என்றும் மரபணு பொறியியல் என்றும், உயிரியல் தொழில்நுட்பம் என்றும் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறது. பன்னாட்டு நிறுவனங்களின் கட்டுப்பாட்டிலும் ஆதரவிலும் இலாப நோக்கத்திற்காக இப்படிப்பட்ட விபரீதமான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு காய்கறிகளிலும் தாவரங்களிலும் விலங்குகளிலும் மரபணு மாற்றங்கள் செய்யப்பட்டு அவை மக்களின் பயன்பாட்டிற்காக சந்தையில் விடப்பட்டுள்ளன. முதலில் மரபணு தொழில் நுட்பம் மிக முன்னேறிய தொழில் நுட்பம் என்றும் மனிதனுக்கு கிடைத்துள்ள வரப்பிரசாதம் என்றும் கூறப்படுகிறது. ஆனால் உயிர் வாழும் உரிமைக்கும் இயற்கைக்கும் எதிரானதாக மரபணு தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது.எனவே சமூக மாற்றத்திற்காகவும் மனித உரிமைகளுக்காகவும் பாடுபடுபவர்கள் மரபணு தொழில்நுட்பத்தை புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

மரபிணிகள் (Genes) எனப்படுபவை உயிரினங்களின் மரபியல் பண்புகளைத் தலைமுறை தலைமுறையாக சுமந்து வரும் தூதர்கள் ஆகும். உயிரினங்கள் அமீபா போன்ற ஒரு செல் நிலையில் தொடங்கி மக்கள், யானை, திமிங்கலங்கள் போன்ற பல கோடி செல்களைக் கொண்டதாகப் பல உயிரினங்கள் உள்ளன. இந்த செல்களை உயிரினங்களின் அடிப்படை அலகுகள் என்று கூறலாம். செல்களுக்குள் உட்கரு (nucleus) எனப்படும் ஒரு பகுதி உள்ளது. அதற்குள் குருமேனியன்கள் எனப்படும் குரோமோசோம்கள் உள்ளன. இவை குச்சி வடிவத்தில் காணப்படும். குரோமோசோம்களை உள்ளடக்கிய டி.என்.ஏ அமைப்பு உள்ளது. இந்த டி.என்.ஏவில் உள்ளதுதான் மரபிணிகள் ஆகும். மரபிணிகளைக் கொண்ட டி.என்.ஏ வில் குறியன்கள் எனப்படும் (codens) பண்புக்கூறுகள் உள்ளன. இவைதாம் உயிரினங்களின் உடலியல் கூறுகளைத் தீர்மானிப்பவை யாகும். வம்சாவழித்தகவல்களை சுமந்து வருபவையும் இவைதான். மரபிணிப் பொறியியல் என்பது ஏற்கனவே கூறியுள்ள குறியன்கள் எனப்படும் மரபிணிக் கூற்றை மாற்றியமைப்பதாகும். அதாவது ஒவ்வொரு உயிரினமும் தனக்கேயுரிய தனித்த பண்புகளைக் கொண்டுள்ளன. (மாங்கொட்டையிலிருந்து மாமரம் வளர்வதுபோல) இவை மரபிணிகளின் அமைப்பிற்கு ஏற்ப உருவாகின்றன. ஆனால் அறிவியலாளர்கள் உயிரினங்களின் தனித்தன் மையான பண்புகளைக் கூட மாற்றி வெவ்வேறு உயிரினங்களில் அமைத்து விடுகின்றனர்.

டி.என்.ஏ விலுள்ள ஒரு மரபுக்கூற்றைத் தனியே பிரித்தெடுத்து அதே இனத்திலோ அல்லது மற்றொரு இனத்திலுள்ள மரபுக்கூற்றில் பொருத்தி புதியதொரு மாற்று மரபு கொண்ட உயிரினத்தை உருவாக்குவதாகும். மரபணு பொறியியலின் மூலம் நாம் விரும்புகின்ற உயிரினத்தையோ தாவரத்தையோ உருவாக்க முடியும். அதே போல நாம் விரும்பாத பண்பை நீக்கி விட்டு ஒரு உயிரினத்தை உருவாக்கிட முடியும். இந்த மாற்றம் திடீரென்று ஏற்பட்டதல்ல. இந்த வரலாறு அறிவியல் பல மைல்கல்களை கொண்டது.

1957ல் கிரிகர் மெண்டல் என்ற துறவியார் பட்டாணிச் செடிகளில் பல ஆய்வுகளை அவர் நிகழ்த்தி வந்தார். அவர் நிறம், உயரம் போன்றவை அடுத்தடுத்த தலைமுறைச் செடிகளுக்கும் கடத்தப்படுவதை கண்டறிந்தார். மெண்டல் அதை மரபியல் காரணிகள் என்று கருதினார். ஆனால் அவருடைய ஆய்வுகள் அப்போது யாராலும் கணக்கிலெடுத்துக் கொள்ளப்படாமல் கிடப்பில் போடப்பட்டன. பின்னர் 1940களில் கனடா நாட்டு மருத்துவர் ஆஸ்வால்ட் ஆவரி, மெண்டலால் கண்டுபிடிக்கப்பட்ட மரபியல் காரணிகளை டி.என்.ஏ என்று தெளிவாக நிறுவினார். அவரும் அவருடன் உடன் பணிபுரிந்த அறிவியலாளர்களும் ஒரு நுண்ணுயிரிலிருந்து மற்ற உயிரினத்திற்கு அதை மாற்ற முடியும் எனவும் கண்டறிந்தனர். 1953ல் வாட்சனும் கிரிக்கும் முப்பரிமான டி.என்.ஏ அமைப்பை இரட்டைத்தன்மை வடிவமுள்ளதாக கண்டறிந்தனர்.

1950முதல் 1960களுக்கு இடைப்பட்ட காலத்தில் அறிவியலாளர்கள் மரபினிச் செய்திகள் எவ்வாறு பொதிந்துள்ன? எவ்வாறு பெருக்கமடைகின்றன? தலைமுறைக்கு தலைமுறை எவ்வாறு கடத்தப்படுகின்றன? என்பனவற்றை தெளிவாகக் கண்டறிந்தனர். 1970களிலிருந்து 1980கள் வரை மரபணுவை ஒரு உயிரினத்திலிருந்து மற்ற உயிரினத்திற்கு மாற்ற முடியும் என்பதை நிருபித்தனர். இதற்காக கட்டுப்பாட்டு நொதிமங்கள் (restriction enzymes) கண்டுபிடிக்கப்பட்டன. இது அறிவியலாளர்களுக்கு மாபெரும் கருவியாக அமைந்து விட்டன. இப்போதுள்ள பல்வேறு நுண்ணுயிரிகள் இப்படிப்பட்ட நொதிமங்கள் மரபிணிக் கத்திரிகளாக உள்ளன. இவை குறிப்பிட்ட மரபினிகளை அவை சூழ்ந்துள்ள டி.என்.ஏவில் இருந்து வெட்டி எடுக்க உதவுகின்றன. பல நூறு நொதிமங்கள் இவ்வாறு கண்டறியப்பட்டுள்ளன. மரபினிப் பொருட்களை ஒரு புதிய ஓம்புநர் உயிரிக்கு (host) மாற்றும்போது ஓட்டுதல் பணி குறிப்பிட்ட ஒரு நொதிமத் தொகுப்பால் நடைபெறுகின்றது. 1970களில் முதல் வணிக உயிரி நுட்ப மருந்து இம்முறையில் கண்டறியப்பட்டது. மனிதரின் மரபினி இன்சுலின் சுரப்பிற்கு ஒரு நுண்ணுயிரில் செலுத்தப்பட்டு புதிய வகை இன்சுலின் உருவாக்கப்பட்டது.(இப்போது நீரிழிவு நோயாளிகளுக்கு பெரும்பாலும் விலங்குகளின் இன்சுலின்தான் விற்கப்படுகின்றன என்பதை கவனத்தில் கொள்க)

நுண்ணுயிரிகளில் மரபினி மாற்றம் நடத்தியவுடன் அறிவியலாளர்களின் கவனம் செடிகளுக்கு சென்றது. செடிகளில் மரபினி மாற்றப் பணி கடுமையாக இருந்தது. முதலில் சிறு நுண்ணுயிரிகளை விடக் கூடுதலான வகை மரபினிகளை அவை கொண்டிருந்தன. மேலும் இவற்றின் இவற்றின் செல்களின் சுவர்கள் ஊடுருவதற்கு கடினமாக இருந்தன. ஆனால் இயற்கையே இதற்கு ஒரு தீர்வையும் வழங்கியது. அகரச்குச்சில் (agrobacterium) என்னும் நுண்ணுயிரிச் செடிகளின் மரபினியில் இயற்கையாகவே ஊடுருவிச் செல்லும் தன்மை கொண்டது. இருப்பினும் அகரச்குச்சிகளால் அனைத்துச் செடிகளையும் ஊடுருவிச் செல்ல முடியவில்லை. இதற்கும் தீர்வாக நச்சுயிரிகளில் இருந்து மரபினிகளைப் பெறுகின்றனர். இதன் உச்சகட்டமாக மரபினித் துப்பாக்கி ஒன்றை உருவாக்கியுள்ளனர். இதன் மூலம் எந்த செடியையும் எந்த உயிரினத்தையும் நேரடியாகத் துளைக்க முடியும் அதாவது வைரஸ் மூலமாக விரும்புகின்ற மரபணுவை மரபினி துப்பாக்கியின் மூலமாக செலுத்தி உயிரினத்தில் செலுத்த முடியும் என்ற நிலை ஏற்பட்ட பின்னர் இலாப நோக்கிலும் பல விபரீதங்களைத் தொடங்கினர். ஏனெனில் இந்த மரபினித் துப்பாக்கியின் உரிமையை டூபாண்ட் என்ற பன்னாட்டு நிறுவனம் வைத்துள்ளது.

விலங்குகளின் கருமுட்டையிலேயே உள்ள மரபணுவை மாற்றத் தொடங்கினர். இதன் அடிப்படையில் புதிய இன சுண்டெலி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு நுண் ஊசி வழியாக சுண்டெலியின் கருவில் ஒரு மரபணுவைப் புகுத்தி மைந்து சுண்டெலி என்ற புதிய இன சுண்டெலி உருவாக்கப்பட்டது. இதே போல பிரிட்டானிய அறிவியலாளர்கள் வெள்ளாட்டையும் செம்மறி ஆட்டையும் இணைத்து வெண்மறி ஆட்டை உருவாக்கினர்.

கடையில் இருக்கும்போது தக்காளி நீண்ட நாட்களுக்கு மிகவும் கனிந்து அழுகிப்போகாமல் இருக்க வேண்டும். அது குளிர்சாதனப் பெட்டியில் வைத்தாலும் அது விரைத்துப் போய் உடைந்து விடாமல் இருக்க வேண்டும். செடியிலிருந்து பறித்த பின்னரும் அது நீண்ட



முல்லைத்தீவு அரசாங்க அதிபரின் வேண்டுகோளிற்கிணங்

நாட்களுக்கு உறுதியாகவும் புதிதாகவும் அப்போது பறித்தது போன்று பளபளப்பாக இருக்க வேண்டும். அதற்கு என்ன செய்வது?. அதற்கு கண்டுபிடித்த வழிமுறைதான் மீனின் மரபணுவை தக்காளியில் புகுத்துவது ஆகும். கடுமையான தட்பவெப்ப நிலைகளிலும் நீரில் இருக்கும் உயிரினங்களின் மரபணுவை தக்காளியில் சேர்ப்பது. பிளவுண்டர் என்ற ஆர்டிக் உறைபனி சமுத்திரத்திலுள்ள மீன் வகையானது இயல்பிலேயே எவ்வளவு குளிரிலும் விரைத்து விடாத தன்மையுடையது. இதனால் இம்மீன்களின் விரைத்து விடாத தன்மையைக் கொண்ட அந்த மரபணுவை தனியே பிரித்தெடுத்து தக்காளியின் டி.என்.ஏவில் சேர்த்து அதை குளிர்சாதனப்பெட்டியில் வைத்தாலும் விரைத்துவிடாத தன்மைகொண்ட தக்காளியாக மாற்றுகின்றனர். இதே போல கத்திரிக்காய், அரிசி, சோயா பீன்ஸ், காபி மிளகு, காலி பிளவர் முட்டைக்கோஸ் பட்டாணி, முலாம்பழம், உருளைக்கிழங்கு, நிலக்கடலை, வெண்டை, வள்ளிக்கிழங்கு, கூவைக்கிழங்கு, ஏலக்காய், மொச்சை, மாதுளை பருத்தி, சணல், உதட்டுச்சாயத்திற்கான செவ்வண்ணம் தரும் உலர் குசும்பப்பூ போன்று மரபணு ரீதியான மாற்றியமைக்கப்பட்ட பொருட்களின் பட்டியல் நீளுகிறது. அடுத்த முறை நீங்கள் காய்கறி கடைக்குச் செல்லும் போது பளபளப்பாக அழகாக இருக்கும் காய்கறிகளைக் கண்டு மயங்கி விடாதீர்கள் எச்சரிக்கை. இந்த அழகுக்கு பின்னேதான் ஆபத்து மறைந்து கிடக்கிறது. அது என்ன ஆபத்து?

மரபணுரீதியாக மாற்றியமைக்கப்பட்டவை காய்கறிகள், பழங்கள் மற்றும் பொருட்கள் மட்டுமல்ல, பல புதிய தாவர அடிப்படையிலான இனிப்பூட்டிகளும் இந்த பட்டியலில் உள்ளன. இவை சந்தைக்கு வர அணி வகுத்து நிற்கின்றன. இந்த இனிப்பூட்டிகளில் தவ்மாட்டின், மோனெல்லின், ஹெர்னாண்டல்சின், ஸ்டீவியோசை, மிராக்குலின், பிரேஸியன் போன்றவை அடங்கும். இவையெல்லாம் சக்ரோஸ் எனப்படும் சர்க்கரையைப் போல ஆயிரக்கணக்கான மடங்கு அதிகமாக இனிப்பூட்டுபவை. தாவரங்களிலிருந்து இந்த இனிப்பூட்டிகளை பிரித்தெடுப்பதற்கு அதிகமாக செலவாகும். எனவே, இந்த மரபினிகளைத் தனிமைப்படுத்தி அவைகளை பாக்டீரியாவாக மாற்றுவதை நோக்கிய ஆராய்ச்சிகள் பெருமளவில் நடைபெறுகின்றன. மரபினிப் மாற்றப்பயிர்களினால் பாதிப்புகள் இல்லையா? அந்த பாதிப்புகளை ஊடகங்கள் வெளிச்சத்திற்கு கொண்டு வருவதில்லை.

மரபினிப் மாற்றப் பயிர்கள் மனிதர் உள்ளிட்ட அனைத்து உயிரினங்களின் ஆரோக்கியம், மண் வளம், சூழல் மீது ஏற்படுத்தும் பாதிப்புகளை காண்போம். முதலாவதாக மரபணுக்கள் ஒரு உடலிலுள்ள சூழலிருந்து மற்றொரு சூழலுக்கு மாற்றப்படுவதால், மாற்றப்படும் புதிய சூழலுக்கு ஒத்துப் போவது மிகவும் குறைவாகும். அங்கிருந்தே பிரச்சினைகள் தொடங்குகின்றன. செம்மறி ஆட்டையும் வெள்ளாட்டையும் இணைத்து புதிய வெண்மறி ஆட்டை உருவாக்கியது குறித்த பரபரப்பான செய்திகள்தான் ஊடகங்களில் வந்தன. ஆனால் அந்த ஆடு மலடாகி குருடாகிப்போனது பற்றி எந்த ஊடகங்களும் செய்தி வெளியிடவில்லை. பிரிட்டனிலுள்ள ஒரு ஆய்வுக்கூடத்தில் எட்டுக்கால் பூச்சிக்கு பறவையின் மரபணுவை செலுத்தினர். ஆனால் சில மணி நேரங்களில் அந்தப் பூச்சி இறந்து விட்டது. இயற்கையின் வரம்புகளை மீறினால் இப்படித்தான் நடக்கும்.

வட அமெரிக்க தேசிய அறிவியல் கழகம் தனது அறிக்கையில் மரபினிப் மாற்ற பயிர்கள் உணவில் எதிர்பாராத அழற்சிப் பொருட்களையும் நச்சுப்பொருட்களையும் உண்டாக்கும் ஆற்றல் பெற்றவை என்றும் அவை கடுமையான சுற்றுச்சூழல் விளைவுகளையும் கட்டுப்படுத்தாத உயிரிகளையும் மண்ணிலுள்ள உயிர்மங்களின் மீது தீய விளைவுகளையும் உண்டாக்கும் ஆற்றலையும் பெற்றவை என்றும் கூறுகின்றது. பூச்சி எதிர்ப்பு என்ற பெயரில் மரபணுப் பொறியியல் முறையில் தயாரிக்கப்பட்ட பி.டி பயிர்களை சுவீடன் நாட்டின் இரண்டு விஞ்ஞான பரிசோதனைக் கூடங்கள் ஆய்வு செய்தன. இந்த ஆய்வில் மரபணுப் பொறியியல் முறையில் நோவர்ட்டீஸ் என்ற சோள வகைப் பயிரிலிருந்து சோளத்தை உட்கொண்ட பசுமை நாடாப் பூச்சிகளின் இறப்பு எண்ணிக்கை அதிகரித்துள்ளது தெரிய வந்துள்ளது. மேலும் இந்த ஆய்வில் இந்த பயிர்களில் உள்ள பி.டி நஞ்சானது மற்ற உயிரினங்களைக் கொல்வதோடு நாம் உண்ணும் உணவிலும் நுழைந்து விடும் என்பதும் இதன் தொடர்ச்சியாக உண்ணும் உணவின் மூலம் நமது உடலில் இருக்கும் பி.டி நஞ்சானது நமது நோய்களுக்கு எந்த ஆன்டிபயோடிக் மருந்தை உட்கொண்டாலும் அதை செயல் இழக்கச் செய்து விடுகின்றன என்பதும் தெரிய வந்துள்ளது.

கூடுதலாக, மரபணுப் பொறியியல் முறையில் உருவான பூச்சி எதிர்ப்பு நஞ்சினைத் தாவரங்களாவது தங்கள் பாகங்கள் முழுவதும் உற்பத்தி செய்யும் ஆற்றல் பெறுகின்றன. இதனால் இப்பயிர்கள் அறுவடைக்குப் பின்னர் கழிவாகிப் புதைவதனால் மண் முழுவதும் நச்சுத்தன்மை கொண்டதாக மாறி விடுகிறது. இந்த நச்சுத்தன்மையையும் அப்பயிர்கள் உறிஞ்சிக் கொள்கின்றன. அது மற்ற உயிரினங்களான மனித குலத்திற்கு சேவை செய்யும் தேனி, சுருள் பூச்சி, வண்ணத்துப் பூச்சி மற்றும் முக்கியமாக விவசாயிகளின் நண்பனான மண் புழு ஆகியவற்றைக் கொன்று விடும். இது மட்டுமின்றி அந்த நிலங்களில் மேயும் ஆடு மாடுகள் மற்ற உயிரினங்கள் இறந்து விடுகின்றன. ஆந்திராவில் பி.டி. பருத்திச் செடியை சாப்பிட்ட 1500க்கும் மேற்பட்ட ஆடுகள் இறந்து விட்டன. ஆந்திராவில் கரீம் நகரிலிருந்து 80 கி.மீ தொலைவில் உள்ள மாமிடலப்பள்ளி கிராமத்தில் பி.டி பயிரிடப்பட்ட நிலத்தில் மேய்ந்த 12 மயில்கள் இறந்து விட்டன.

எந்தப் பூச்சிக்காக இப்பூச்சி எதிர்ப்பு நஞ்சுடன் மரபணுக்கள் செலுத்தப்படுகின்றனவோ, அந்தப்பூச்சிகள்




தங்களின் உடலில் இந்த நஞ்சிற்கு எதிர்ப்பு சக்தியையும் நாளடைவில் வளர்த்துக் கொள்கின்றன. அந்தப் பூச்சியானது 3லிருந்து 5 ஆண்டுகளுக்குள் எதிர்ப்பு சக்தியை வளர்த்துக்கொள்வதாக அமெரிக்க சுற்றுச் சூழல் பாதுகாப்பு நிறுவனம் ஒன்று தனது ஆய்வின் மூலம் கண்டுபிடித்துள்ளது. மண்ணின் உவர் நிலைமையை சகித்துக் கொள்ளும் மரபணுக்கள் பொருத்தப்பட்ட பயிர்கள் வளர்க்கப்படுவதால் பகுதியின் சூழல் மாசாவதோடு உவர் மண்ணுக்கேற்ப இயற்கையாக விளையும் பயிர்களுக்கு இடமில்லாத சூழ்நிலையும் ஏற்படுகிறது.

ஒரு முறை மரபணுப் பொறியியல் முறையில் உருவாக்கப்பட்ட உயிரினங்களையும் தாவரங்களையும் மீண்டும் கட்டுபடுத்த முடியாது. அவை எங்குள்ளது என்பதையும் கண்டுபிடிக்காத அளவில் பெருகி விடும். இந்த முறையில் தயாரிக்கப்படாத உயிரினங்கள், தாவரங்கள் ஆகியவற்றுடன் அவை இணைந்து பரவி விடும். ஜெர்மனியில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றில் மரபணுப் பொறியியலுக்கு உட்படுத்தி வளர்க்கப்பட்ட பயிர்கள் 200 மீட்டர் வரை பரவியுள்ளதை கண்டுபிடித்தனர். அமெரிக்காவிலும் நார்வேயிலும் சால்மன் மீன் வகைகளில் மிக நீளமாகவும் அதிக எடையுடன் வளர்வதற்கு மரபணுக்கள் பொருத்தப்பட்டன. இம்மீன்களுக்கு இருந்த எடையுடன் 5 மடங்கு அதிகரித்தது. ஆனால் மிக வேகமாக பரவி இத்தொழில் நுட்பத்திற்குள்ளாகாத மீன்களை விட ஒன்றுக்கு 5 மடங்கு விகிதத்தில் அதிகரித்து விட்டன. இதே போல் பயோ டெக்னிக்கல் இன்டர்நேசனல் என்ற பன்னாட்டு நிறுவனம் சோயா பீன்ஸ்களுக்கு இந்த உற்பத்தி முறையைக் கடைபிடித்தது. தொடர்ந்து கண்காணித்ததில் 4 ஏக்கரில் இதே பயிர்கள் பரவியது கண்டுபிடிக்கப் பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் 30 ஆயிரம் உயிரினங்கள் சுற்றுச்சூழல் மாசினாலும் காடுகளை அழிப்பதாலும் அழிந்து வருகின்றன. ஐ.நாவின் உணவு மற்றும் விவசாய அமைப்பானது 75 விழுக்காடு மரபணு பெருக்கமானது இந்த நூற்றாண்டிலேயே அழிந்து விட்டது என்றும் இதற்கு முக்கிய காரணமாக தாவரங்களின் பன்முகத்தன்மையை அழித்து செயற்கையான மரபணுப் பொறியியல் முறையில் ஒருமைத் தன்மையுடன் (mono culture) வளர்க்கப்படுவதே என்று கூறியுள்ளது.

மரபணு பொறியியல் மூலம் ஒரே தன்மை கொண்ட ஒரே பயிர்கள் வளர்க்கப்படுவதால் அவை ஒரு நோய் தாக்கினாலே விரைவாக அழிந்து பஞ்சம் ஏற்படுகிறது. அதே சமயத்தில் பன்முகத் தன்மையுடன் பல வகைப் பயிர்கள் வளர்க்கப்படும்போது அவை எந்த வகை நோயையையும் எதிர்த்து நிற்கும் ஆற்றலைப் பெற்று விடுகின்றன. மெக்சிகோவிலும் இந்தியாவின் வடகிழக்கு மாநிலத்திலும் மேற்கொள்ளப் பட்ட ஆய்வுகளில் முன்னதில் 300 வகையான பயிர்களும் வளர்க்கப்பட் டதால் இவ்விரு பகுதிகளும் அனைத்து விதமான பூச்சிகளையும் எதிர்கொள்ளும் ஆற்றலைப் பெற்றதாகத் தெரிய வந்துள்ளது. மரபணு பொறியியலின் இன்னொரு பாதக விளைவாக ஒரு பகுதியின் தட்ப வெப்ப சூழ்நிலைக்கேற்ப விளையும் பயிர்களை அழிப்பது உள்ளது.

சில காலத்திற்கு முன்னதாக மான்சான்டோ என்ற பன்னாட்டு கம்பெனி மரபணு பொறியியல் மூலமாக தயாரிக்கப்பட்ட பருத்தி விதைகளை அறிமுகப்படுத் தியது. அதிக மகசூல் கிடைக்கும் என்ற இந்த கம்பெனியின் பொய்ப் பிரச்சாரத்தை நம்பி ஏராளமான விவசாயிகள் அதிக கடன் வாங்கி இந்த விதைகளை பயிரிட்டனர். ஆனால் இவை மறுபடியும் பயிரிட முடியாத மலட்டு விதைகள் என்பதாலும் அதிக மகசூல் கிடைக்காததாலும் விவசாயிகள் ஆயிரக்ககணக்கானோர் தற்கொலை செய்து கொண்டனர் என்பது அனைவரும் அறிந்த செய்தி. இந்திய அரசு இப்போது இந்த கம்பெனியின் விதைகளுக்கு மட்டுமல்ல ஏறத்தாழ 144 கம்பெனிகளின் விதைகளை இந்திய மண்ணில் பரிசோதித்து பார்ப்பதற்கு அனுமதி அளித்துள்ளது. நமது நாட்டின் இறையாண்மை தன்னிறைவான உணவு உற்பத்தியில் உள்ளது.

விவசாயத்தை அழிப்பது நாட்டின் இறையாண்மையை அழிப்பதாகும். நமது நாட்டின் அடிப்படை ஆதாரமாகவும் முதுகெலும்பாகவும் உள்ள விவசாயத்தை பன்னாட்டு நிறுவனங்களுக்கு அடகு வைக்கப்படும் இந்த நாசகரமான போக்கை எப்படி தடுத்து நிறுத்தப் போகிறோம்?





ங்க முல்லைத்தீவுப் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 500000 ரூபா பெறுமதிக்கான அத்தியாவசிய உலர்உணவுப்பொருட்கள், நுளம்பு வலைகள், கூரை விரிப்புக்கள் மற்றும் நிலவிரிப்புக்கள் என்பன முதற்கட்ட உதவிகளாக **UR Friend Foundation** நிறுவனத்தினால் வழங்கப்பட்ட போது எடுத்த படம்.

# "முகவர்களின் வார்த்தைகளை நம்பியதால் துன்பப்படுகின்றோம்"

## நவ்ருவில் உள்ள புகலிடக் கோரிக்கையாளர்கள் கண்ணீர்

புகலிடம்கோரி சென்று நவ்ருவில் அழைத்துச் செல்லப்பட்டுள்ளோர் வெப்பம் தாங்க முடியாமலும் உரிய மருந்து, உணவு வசதிகள் இன்றியும் துயரங்களை அனுபவிப்பதாக நவ்று முகாமில் இருப்பவர்கள் கூறுகின்றனர். அவுஸ்ரேலியா செல்லும் நோக்கி இலங்கையிலிருந்து படகு மூலமாகச் சென்று கிறிஸ்மஸ் தீவில் தங்கவைக்கப்பட்டிருந்தது. பின்னர் அங்கிருந்து நவ்று தீவுக்கு மாற்றப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் நாடு திரும்பவே எண்ணியுள்ளதாக நவ்று தீவில் பேசிய ஒருவர் சர்வதேச ஊடகம் ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.

தமது தஞ்சக் கோரிக்கையைப் பரிசீலிக்க அவுஸ்ரேலிய அரசாங்கம் காலதாமதமாகி வருவதால் நாடு திரும்பி விடுவதே நல்ல முடிவு என்று பலரும் எண்ணுவதாக அவர் மேலும் கூறினார். நவ்று தீவில் மிகுந்த துயரங்களுக்கு மத்தியிலேயே தாம் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் நவ்று முகாமிலுள்ளவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அந்த அடிப்படையிலேயே நவ்று தீவிலிருந்து இலங்கை திரும்புவதற்கு மேலும் 11 பேர் சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இன்னும் சில மாதங்களில் தமது விசாரணைகளைத் தொடங்குவது தொடர்பான முடிவு எதுவும் கிடைக்காவிட்டால் நாட்டுக்குத் திரும்புவதற்கே அங்குள்ள இலங்கையர்களில் பெரும்பாலானவர்கள் தீர்மானித்துள்ளதாகவும் அவ் ஊடகத்திடம் பேசிய புகலிடக் கோரிக்கையாளர் தெரிவித்தார்.

சட்டவிரோதமாக வெளிநாட்டுக்குப் பயண ஏற்பாட்டாளர்களின் ஆசை வார்த்தைகளை நம்பியே தம்மில் பலர் ஏமாந்து போயிருப்பதாகவும் இன்னும் பலர் படகுகளில் நாளாந்தம் அவுஸ்திரேலியா நோக்கி வந்துகொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். அதேநேரம் அவுஸ்ரேலியப் பெருநிலப்பரப்புக்குள் கொண்டு சேர்ப்பதற்காகக் கூறி தம்மைக் கடல் மார்க்கமாக அழைத்துச் சென்ற "ஏஜென்டுகள்" மிகுதிப் பணத்தைக் கொடுக்குமாறு தமது குடும்பங்களுக்கு அச்சுறுத்தல் கொடுப்பதாகவும் நவ்று தீவில் தங்கவைக்கப்பட்டுள்ள இலங்கை தஞ்சக் கோரிக்கையாளர்கள் கூறுகின்றனர்.

தாம் சட்டவிரோத பயணத்தை மேற்கொண்ட காரணத்திற்காக தமது குடும்பங்கள் அதுபற்றி காவல்துறையிடம் முறைப்பாடு செய்ய முடியாமல் இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். இலங்கையிலிருந்து சிறு படகுகளில் பயணத்தை தொடங்கி பின்னர் பெரிய படகுக்கு மாற்றப்பட்டு ஒரு மாத காலம் கடலில் தத்தளித்த நிலையில் அவுஸ்ரேலிய காவல்படையினரால் மீட்கப்பட்டே தம்மில் பலர் கிறிஸ்மஸ் தீவைச் சென்று சேர்ந்துள்ளதாகவும் நவ்று தீவில் உள்ள இலங்கை தஞ்சக் கோரிக்கையாளர்கள் கூறுகின்றனர்.



நவ்று தீவில் தங்கவைக்கப்பட்டுள்ள தஞ்சக் கோரிக்கையாளர்கள் தமது விசாரணைகளை விரைவுபடுத்த வேண்டும் அல்லது அவுஸ்ரேலியாவுக்குள் அனுப்பி அங்கு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கோரி கடந்த நான்கு நாட்களாக உண்ணாவிரதத்திலும் ஈடுபட்டுள்ளதாக கூறுகின்றனர். கடல் மூலமாக அவுஸ்ரேலியாவுக்குள் வர முயற்சிப்போரை அங்கிருந்து நவ்று மற்றும் பப்புவா நியூகினி ஆகிய நாடுகளுக்கு அனுப்பி, அங்கிருந்து அவர்களின் தஞ்சக்கோரிக்கையை பரிசீலிக்க அவுஸ்ரேலிய அரசு அண்மையில் சட்டம் கொண்டுவந்தமை குறிப்பிடத்தக்கது.

## பொலன்நறுவையில் அதிசக்தி வாய்ந்த கிளைமோர் குண்டு மீட்பு

பொலன்நறுவை மன்னம்பிட்டி பிரதேசத்தில் உள்ள வீட்டுத் தோட்டம் ஒன்றில் இருந்து அதிசக்தி வாய்ந்த கிளைமோர் குண்டு மீட்கப்பட்டுள்ளதாக பொலன்நறுவை காவற்துறையினர் தெரிவித்துள்ளனர்.

8 கிலோ கிராம் எடைகொண்ட இந்த கிளைமோர் குண்டு, மன்னம்பிட்டி கொலனி வீதியில் உள்ள யோகேஸ்வரன் தர்மலிங்கம் என்பவரின் வீட்டுத் தோட்டத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. தோட்டத்தை துப்பரவு செய்துகொண்டிருந்த போது, குண்டு இருப்பதை அவதானித்த அவர், இது குறித்து காவற்துறையினருக்கு அறிவித்துள்ளார். இதனையடுத்து, மின்னேரிய இராணுவ முகாமைச் சேர்ந்த குண்டு செயலிழக்க செய்யும் பிரிவினர் உதவியுடன் குண்டு மீட்கப்பட்டு செயலிழக்க செய்யப்பட்டுள்ளது.

கிளைமோர் குண்டை அந்த இடத்திற்கு கெபண்டு சென்றவர் யார் என்பதை கண்டறிய காவற்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## சிறுமியைக் கடந்த உதவிய ஆட்டோச் சாரதி கைது

அலவத்துகொடை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அக்குறணை தீகலப் பிரதேசத்தில், கடந்த செப்டெம்பர் மாதம் 19ஆம் திகதி 14 வயதுச் சிறுமியொருவரை கடத்துவதற்கு உதவியததாகக் கூறப்படும் முச்சக்கரவண்டிச் சாரதியொருவரை அலவத்துகொடை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் பிரதான சந்தேக நபர் பொலிஸாரினால் ஏற்கெனவே கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில் தலைமறைவாகியிருந்த முச்சக்கரவண்டிச் சாரதி தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கைது செய்யப்பட்டதாக அலவத்துகொடை பொலிஸார் தெரிவித்தனர்.

## முன்னாள் எம்.பி. ஏ.பி.ஏ.அஸீஸ் காலமானார்

அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.பி.ஏ. அஸீஸ் தனது 58 வயதில் நேற்றுக் காலை மாரடைப்பால் காலமானார் நேற்று அதிகாலை திடீர் சுகயீனம் ஏற்பட்டதையடுத்து இவர் அம்பாறை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். பின்னர், அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக கண்டி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் மகாஓயா பிரதேசத்தில் வைத்து காலமானதாக தெரிவிக்கப்படுகிறது.

பொத்துவில் பிரதேசத்தை சொந்த இடமாகக் கொண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அஸீஸ் மூன்று ஆண்கள் உட்பட ஐந்து பிள்ளைகளின் தந்தையாவார்.

## எமிரேட்ஸில் இலங்கை பணிப்பெண்களை வேலைக்கமர்த்தக் கடும் சட்ட திட்டம்

### இலங்கைத் தூதரகம் தகவல்

இலங்கை பணிப்பெண்களை ஐக்கிய அரபு இராச்சியத்தில் பணிக்கு அமர்த்துபவர்களுக்காகப் புதிய கடுமையான சட்ட திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக ஐக்கிய அரபு இராச்சியத்திற்கான இலங்கை தூதரகம் தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தப் புதிய திட்டத்திற்கமைய இலங்கைப் பணிப்பெண்களுக்கு மாதாந்தம் 800 திர்ஹாம்கள் வேதனமாக வழங்கப்படுவதுடன் அவர்களுக்கான உறைவிடம் விமானப் பயணச்சீட்டு, மருத்துவக் காப்புறுதி என்பனவும் வழங்கப்படவேண்டும்.

இதுதவிர, பணிப்பெண்களுக்கு உறங்குவதற்கான தனி விடுதி வழங்கப்படுவதுடன், பாதுகாப்பு வைப்பாக 1000 அமெரிக்க டொலர்கள் வைப்பிலிடப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சட்டதிட்டங்களுக்கு அமைய ஐக்கிய அரபு இராச்சியத்தில் வேலை கொள்வோர் கட்டுப்படத் தவறும் பட்சத்தில் அங்கு பணியாற்ற அனுமதி வழங்கப்படமாட்டாது என்று தூதரகத்தின் முதலாவது செயலாளர் எம்.ஈ.ஜி.சமரவீர சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, ஐக்கிய அரபு இராச்சியத்தில் மூன்று இலட்சம் இலங்கையர்கள் பணியாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கேப்பாபுலவு மக்களுக்காக நிரந்தர வீடுகள் அமைப்பு

முல்லைத்தீவு கேப்பாபுலவு பிரதேச மக்களுக்கான நிரந்தர வீடுகளை அமைத்துக்கொடுக்கும் பணிகள் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சர் குணரட்ன வீரக்கோன் இத்திட்டத்தை கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைத்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் 165 நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவிருக்கும் நிலையில் முதற்கட்டமாக இவ்வருடத்துக்குள் 50 வீடுகள் அமைக்கப்படவிருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

கேப்பாபுலவு சூரியமோட்டைப் பிரதேசத்தில் இவ்வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. 111.16 மில்லியன் ரூபா செலவில் இவ்வீட்டுத் திட்டம் அமைக்கப்படவுள்ளது.

2013ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் இத்திட்டத்தைப் பூர்த்திசெய்ய அரசாங்கம் எதிர்பார்த்திருப்பதாக மீள்குடியேற்ற அமைச்சு தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தில் 5 திறந்த கிணறுகளும், 10 குழாய் கிணறுகளும், 3 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா செலவில் வீடுகள் அமைத்துக்கொடுக்கப் படவிருப்பதுடன், இராணுவத்தினரின் உதவியுடன் இவ்வீடுகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அரசாங்க அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், சூரிபுரத்தில் தங்கவைக்கப்பட்டிருக்கும் 165 குடும்பங்களுக்கும் காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. காணி அமைச்சினால் வழங்கப்பட்ட காணி அனுமதிப்பத்திரங்கள் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 40 பேர்ச் காணிகள் வழங்கப்படவிருப்பதாகவும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் மேலும் கூறியுள்ளார்.

# காது, மூக்கு, தொண்டை
## மருத்துவமும் மைக்ரோ சர்ஜரியும்



காது, மூக்கு, தொண்டை மருத்துவத் துறையின் நுண்ணறிவைச் சிகிச்சை (மைக்ரோ-சர்ஜரியின்)யில் சிறந்தவரான மதுரை மருத்துவக் கல்லூரியின் போராசிரியர் திரு. சையது பாஸுதீன் அவர்கள் வழங்கிய செவ்வியிலிருந்து

**கேள்வி:** காது, மூக்கு, தொண்டை - நோய்கள் எந்த வயதினரை அதிகமாகப் பாதிக் கின்றன, எந்தவகையான பாதிப்புகள் அதிகமாகக் காணப்படுகின்றன?

காது, மூக்கு, தொண்டை நோய்களைப் பொறுத்தவரை அதிகமாகப் பாதிக்கப்படுவது குழந்தைகளே. அதிகமான மக்கள் தொகை, பள்ளிச்சூழல் பாதிப்பு, ஊட்டச்சத்துக் குறைபாடு இவைகளால் காது, மூக்கு, தொண்டைகளில் பாதிப்புகள் ஏற்படுகின்றன. இவை எல்லாவற்றையும் விடச் சுற்றுச்சூழல் பாதிப்புத்தான் காது, மூக்கு, தொண்டை நோய்களுக்கு முதன்மையான காரணம். குழந்தைகளுக்கு வரக்கூடிய நோய்களில் முக்கியமானது தூங்கும்போது ஏற்படக்கூடிய (Sleep earthmya syndrom) மூச்சுத்திணறல் 2 முதல் 10 வயது வரை இந்த வகை நோய்ப் பாதிப்பு காணப்படுகிறது. நோய் கண்ட குழந்தைகளுக்குத் தூங்குவது கூடச் சிரமமாக இருக்கும். தூங்கும்போது நெஞ்சில் ஏற்ற இறக்கம் வேகமாகவும், விகாரமாகவும் இருக்கும். இதனால் மூச்சு நின்று விடுமோ என்று கூட பயப்படத் தோன்றும்... இந் நோய்க்குத் தீர்வு அறுவைச் சிகிச்சை மட்டுமே. மூச்சுக் குழாயில் இருக்கக் கூடிய அடினாய்டு என்னும் சதை வளர்ந்து மூச்சுப்பாதையை அடைப்பதால் இந்த நோய் ஏற்படுகின்றது.



**கேள்வி:** காது, மூக்கு, தொண்டை - அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள எத்தனை நாட்கள் ஆகும்?

Take care surgery என்ற சிகிச்சை முறை வெளி நாடுகளில் பயன்படுத்தப் படுகிறது. இந்த முறையில் காலையில் சிகிச்சை பெற்றவர்கள், மதியமே வேலைக்குச் சென்று விடுகிறார்கள். ஆனால் இந்தியா போன்ற, மக்கள் தொகை அதிகம் உள்ள நாடுகளில் அவ்வாறு செய்ய முடிவதில்லை. காரணம், வெளியில் இருந்து வரும் பிறகாரணிகளால் சிகிச்சை பெற்றவர்க்கு பாதிப்புகள் வர வாய்ப்பு அதிகம் என்பதே. எனவே 24 மணி நேரத்தில் இருந்து 48 மணி நேரம் வரை காது, மூக்கு, தொண்டை (நுவே) சிகிச்சையில் ஓய்வெடுக்க வேண்டும். ஒரு வாரத்தில் வழக்கம்போல வேலை செய்யலாம்.

**கேள்வி:** மாசுபட்ட சூழலுக்குச் செல்லாமல் வீட்டிலேயே இருக்கும் பெண்களுக்கும் 'ஹைசனஸ்' பிரச்சனை வருவதற்குக் காரணம் என்ன?

சுற்றுச்சூழல் பாதிப்பினால் மட்டுமே சைனஸ் வருகிறது என்ற பழைய கொள்கை தற்போது மெல்லமாறத் தொடங்கியுள்ளது. சுவாசப் பாதையில் உள்ள உறுப்புகளின் பாதிப்பினாலும் சைனஸ் வருகிறது. மூச்சுக் குழாயின் வழியாக வர வேண்டிய காற்று தடுக்கப்பட்டு நேரடியாக வாய்க்குள் போவதால் பாதிப்புகள் பலவாறு ஏற்படுகின்றன. இந்தப் பாதிப்புகளே சைனஸ் நோயாகவும் மாறிவிடுகிறது.

**கேள்வி:** சைனஸ் - நோய்க்கு அறுவைச் சிகிச்சையைத் தவிர வேறு வகையான தீர்வுகளே இல்லையா?

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த பேராசிரியர் ஹமிஸ்ரகிளின் என்பவர் சைனஸ் தொடர்பாக ஆராய்ச்சி செய்து சைனஸ் பிரச்சினையில் சுமார் 50,000 அறுவைச் சிகிச்சைக்களுக்கு மேல் செய்திருக்கிறார். அவர் கூற்றுப்படி மூக்கில் உள்ள பிரச்சினைகளை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்துச் சரிசெய்து விட்டால் ஹைசனஸ் பிரச்சினையை முற்றிலுமாகத் தீர்த்துவிட முடியும். மூச்சுப் பயிற்சிகள், சித்த, ஆயுர்வேதம் இவற்றின் மூலம் சரி செய்வதாகக் கூறப்பட்டாலும், அதற்கான அறிவியல் பூர்வமான ஆதாரங்கள் இல்லை.

**கேள்வி:** காது கேளாமை - ஏற்படுவதற்கான காரணங்கள் என்னென்ன?

வெளிப்பொருள் பாதிப்பினால் வந்த காது கேளாமைக்கு மூன்று வகையான காரணங்கள் உண்டு, அவை அதிர்வுகளால் வந்த அடைப்பு, வெளிப் பொருள்கள் அடைத்துக் கொள்ளுதல் ஆகியவைகளாகும். இந்த வகைக் குறைகளை சிகிச்சை மூலம் சரி செய்துவிடலாம். இவை தவிர காதிற்கு உள்ளேயே ஏற்படும் பாதிப்பினாலும் காது கேளாமைக் குறைபாடு ஏற்படுகின்றது. வயதானவர்களுக்கு நரம்புக் குறைபாட்டினால் காது கேளாமை ஏற்படுகிறது. ஒலியை உணரக்கூடிய நரம்பு செல்கள் வயதாக வயதாகக் குறைந்து கொண்டே வருவதால் இந்த வகைக்குறைபாடு நிகழ்கிறது. நரம்பு சம்பந்தப்பட்ட காது கேளாமை குறைக்குக் காது மிஷின் பொருத்துவதைத் தவிர தற்போதைக்கு வேறு வழிகள் கிடையாது. கண் தெரியாதவர்கள் தொகையைப் போல காது கேளாத குழந்தைகளின் எண்ணிக்கையும் தற்போது அதிகரித்துக் கொண்டே வருகிறது. சொல்லப்போனால் உலக மக்கள் தொகையில் 2% குழந்தைகள் காது கேளாதவர்களாக இருக்கின்றனர். மரபு வழியாகவும், குரோமோசோம்களில் ஏற்படும் பாதிப்பு காரண மாகவும், கருவில் இருக்கும் போது தாய்க்கு வைரஸ் காய்ச்சல் வந்திருந்தாலும் இந்தக் காது கேளாத குறைபாடுகள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. கருவில் வைரஸால் பாதிக்கப்பட்ட குழந்தை கேட்கும் தன்மையை இழப்பதற்கு நூற்றுக்கு நூறு சதவீதம் வாய்ப்புகள் உண்டு. குழந்தை பிறந்த உடன் அழா விட்டாலும், அதனால் ஏற்படும் பாதிப்புகளால் கூட காது கேளாமை ஏற்பட வாய்ப்புகள் உண்டு. மரபு காரணமாகவும் காது கேளாமை ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. மூன்று தலைமுறைகளுக்கு முன்னால் இருந்து கூட இந்தக் குறைபாடுகள் கடத்தப்படலாம்.

**கேள்வி:** தொடர்ந்து வரும் தும்மலுக்கு காரணம் என்ன? அதனை எவ்வாறு தடுப்பது?

தொடர்ந்து வரும் தும்மலுக்கு முதல் காரணம் ஒவ்வாமை (அலர்ஜி). சுற்றுச் சூழல் பாதிப்பு, இவை தவிர 60 முதல் 70 சதவீதம் வீட்டில் இருக்கும் தூசிகளே தொடர் தும்மலுக்குக் காரணமாக அமை கின்றன. வீட்டில் செல்லப் பிராணிகளாக வளர்க்கப்படும் நாய், பூனை இவற்றின் மூலமாகக் கூட ஒவ்வாமை ஏற்படுகின்றது. இந்த வகைப் பிரச்சினையுடன் சிகிச்சைக்காக வருபவர்களுக்குச் செல்லப் பிராணிகளை வளர்க்க வேண்டாம் என்று மருத்துவர்கள் அறிவுறுத்துகிறார்கள்.

வீட்டில் தூசியை எழுப்பக் கூடிய பொருட்களை அதிகமாகப் பயன்படுத்தாமல், படுக்கையறையை சுத்தமாக வைத்திருப்பது நல்லது. சில சமயம் நம் உடலில் உண்டாகக் கூடிய பொருட்களே ஒவ்வா மையை ஏற்படுத்தி விடுகின்றன. வெளியில் இருந்து வரக்கூடிய ஒவ்வாமையை போக்க மருந்துகள் உண்டு. ஒவ்வாமையை கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளக் கூடிய டானிக்குகளும் தற்போது அறிமுகமாகி உள்ளன.

**கேள்வி:** நுண்ணறுவைச் சிகிச்சை (மைக்ரோ சர்ஜரி) எந்த வகையான குறைபாடுகளை நீக்கப் பயன்படுகிறது?

முன்பெல்லாம் இடையில் ஏற்படும் காதுகேளாமை (Midval deafness), காதில் நீர் வடிதல் போன்றவற்றிற்குச் சிகிச்சை கள் இல்லை. அந்தக் குறைபாடுகளைப் போக்க ஜெர்மனியில் இருந்து வந்த மருத்துவமே இந்த (மைக்ரோ சர்ஜரி) நுண்ணறுவைச் சிகிச்சை முறை. முன்பெல்லாம் வெளி நாடுகளில் மட்டும் இருந்த இம்முறை தற் போது இந்தியாவில், தமிழ்நாட் டில், மதுரையில் அதுவும் நாங் களே வெற்றிகரமாகச் செய்து வருகிறோம்.



# ஆரோக்கிய நாதம்

**கேள்வி:** காதுகளைத் தாமாகச் சுத்தம் செய்து கொள்வது சரியான ஒன்றுதானா?

காதுகளை வெளிப் பொருட்களைக் கொண்டு சுத்தம் செய்வதே ஒரு பெரிய தவறு. இயல்பாகவே காதில் இயக்கம் தன்னைத்தானே சுத்தம் செய்து கொள்கிறது. இயற்கையிலே இந்த மிகச் சிறந்த அமைப்பைக் காது பெற்றுள்ளது. காதில் உள்புறத்திற்குள் ஒரு துளி நீர் சென்றாலும், அது ஒரு வாரத்திற்குள் தானாகவே வெளியேறி விடும். எனவே வெளிப்பஞ்சுக் குச்சிகளை வைத்து ஈரத்தை, அழுக்கைத் துடைக்க வேண்டும் என்ற அவசியமே இல்லை. காதில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளுக்கு முக்கிய காரணமே இந்தப் பஞ் சுக் குச்சிகள் தான். இதனாலேயே மேலை நாடுகள் இந்தப் பஞ்சுக் குச்சிகளை ஒழித்துக் கட்ட முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கின்றன.

**கேள்வி:** குறட்டை தற்காலத்தில் பெரிய பிரச்சனையாக இருக்கிறது, இதற்கான சிகிச்சை முறைகள் என்னென்ன?

குறட்டை என்பதைத் தனிமனிதக் குறைபாடு என்பதைவிட அதை ஒரு சமுதாயப் பிரச்சினை என்றே கூறலாம். அந்த அளவுக்கு குறட்டை - விடுபவரை விட அடுத்தவருக்குத் தொல்லை தரும் ஒன்றாகவே இருக்கிறது. குறட்டையைச் சரி செய்ய புதிய வகை அறுவைச் சிகிச்சைகள் தற்போது அறிமுகமாகியுள்ளன. குறட்டைக்கு எடுத்த உடனேயே அறுவைச் சிகிச்சை என்பது சரியான தீர்வாகாது. குறட்டை விடுபவர்களை தூக்கச் செயல் கணக்கெடுப்பு (sleep study) செய்து குறையுள்ள இடத்தினைச் சரியாகக் கண்டுபிடிப்பது இந்த முறையில் முக்கியமானபடி ஆகும். அதிக எடைப் பிரச்சினை பல்வேறு தொல்லைகளை மொத்தமாக உடம்புக்குக் கொண்டு வந்துவிடுகிறது. அதிக எடை கொண்டுவரும் நோய்களில் குறட்டை முக்கியமான ஒன்று. குறட்டையும் அதிக எடையும் நண்பர்கள் என்றே சொல்லலாம். அந்த அளவுக்கு எடை அதிகம் உள்ளவர்களுக்கு குறட்டை ஏற்பட வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. எடையைக் குறைப்பது ஒன்றே குறட்டைக்கு தீர்வாகும்.



பண்ணை வீட்டுச் சமையலறையில் வகுப்புகள் நடந்தன. அவை விளையாடத் தோட்டத்தைத் தாண்டி வெளியே செல்ல அனுமதிக்கப்படவில்லை. தவிரவும் பண்ணையிலிருந்த மற்ற மிருகங்களின் குட்டிகளுடன் விளையாட, பழக பன்றிக் குட்டிகள் அனுமதிக்கப்படவில்லை. சற்றேறக் குறைய இதே சமயத்தில், இன்னொரு விதியும் அமுலுக்கு வந்தது. பாதையிலே ஒரு பன்றி எதிர்ப்பட்டால் மற்ற எந்த மிருகமானாலும் அதற்கு வழிவிட்டு மரியாதையாக ஒதுங்கி நிற்க வேண்டும் என்பதுதான் அது.

எந்தப் பன்றியும் விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் தன் வாலில் பச்சை நிற ரிப்பன் ஒன்று கட்டிக்கொள்ளலாம். அந்த உரிமை அதற்கு உண்டு என்றும் அறிவிக்கப்பட்டது.

பண்ணைக் காரியங்கள் அவ்வருடம் வெற்றிகரமாகவே நடந்தன. ஆனால் பண்ணையிலே போதிய பணம்தான் இல்லை. கல், சுண்ணாம்பு, மணல் எல்லாம் தேவை. பள்ளிக்கூடம் கட்டுவதற்கு அவைகளை வாங்கியாக வேண்டும்.




காற்றாடி யந்திர சாமான்கள் வாங்க மீண்டும் பணம் சேகரிக்க வேண்டும். வீட்டு விலங்குகளுக்கு எண்ணெய், மெழுகுவர்த்திகள் எல்லாம் வாங்கியாக வேண்டும். நெப்போலியனின் உபயோகத்துக்கென்று சர்க்கரை வாங்க வேண்டும். (மற்ற விலங்குகள் சர்க்கரை உபயோகப்படுத்தக்கூடாது, உபயோகப்படுத்தினால் அவை அதிகமாகக் கொழுத்துப் போய்விடும் என்று விதி ஏற்பட்டிருந்தது) மற்றும் பண்ணைக்குத் தேவையான தளபாடங்கள், ஆயுதங்கள், ஆணிகள், கயிறு, எரிப்பதற்குக் கரி, கம்பி, இரும்பு, நாய் பிஸ்கோத்து கள் முதலியனவும் வாங்கியாக வேண்டும்.

வைக்கோல் போர் ஒன்றும், அறுவடையான உருளைக் கிழங்கில் ஒரு பகுதியும் விற்கப்பட்டன. விற்பனைக்குக் கொடுக்கும் முட்டைகள் ஐநூறிலிருந்து அறுநூறாக உயர்த்தப்பட்டன. அந்த வருடம் இட்ட முட்டைகளில் விற்கப்படாமல் குஞ்சுகளானவை மிகவும் சொற்பமே, பண்ணையிலே கோழிகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துவிடும்போல இருந்தது.

டிசம்பரில் குறைக்கப்பட்ட உணவு அளவு பெப்ரவரியில் மீண்டும் குறைக்கப்பட்டது. விளக்குகளுக்கு எண்ணெய் வீணாகச் செலவாகிறது. வீட்டுக்கு வெளியே மிருகங்கள் படுத்துறங்கும் இடங்களில் விளக்குகள் எரியக்கூடாது என்று நெப்போலியன் உத்தரவிட்டது. ஆனால் பன்றிகள் சௌகரியமாகத்தான் இருந்தன. அவை தின்று கொழுத்துக் கொண்டிருக்கிற மாதிரிதான் தோன்றியது. பெப்ரவரி மாதக் கடைசியில் ஒருநாள் மாலையில் ஏதோ ஒரு சமையல் வாசனை பண்ணை பூராவும் பரவி எல்லோருக்கும் நாக்கில் நீர் வரச் செய்தது.

அதுவரை விலங்குகள் அந்த மாதிரி வாசனையை முகர்ந்ததே கிடையாது. ஜோன்ஸ் காலத்தில் கூட உபயோகப்படாமல் கிடந்த சாராயம் காய்ச்சும் கிடங்கிலிருந்து வந்தது. அந்த வாசனை பார்லி கொதிக்கும் வாசனை என்ற யாரோ சொன்னார்கள்.

பசியுடன் நாக்கில் நீர் ஊற காற்றில் வந்த அந்த வாசனையை நுகர்ந்தன மிருகங்கள்.

**(நாளை)**

## வரைவோம் வாருங்கள்!



# சிறுவர் அமுதம்

## உலகின் மிகப்பெரும் தீவுகள்



| பெயர் | இருப்பிடம் |
|---|---|
| அயர்லாந்து வட | அட்லாண்டிக் கடல் |
| அவுஸ்திரேலியா | தென்மேற்கு பசிபிக் கடல் |
| இலங்கை | இந்து சமுத்திரம் |
| எலியஸ்மியர் தீவு | ஆர்க்டிக் கடல் |
| ஐஸ்லாந்து | வட அட்லாண்டிக் கடல் |
| கியூபா | கரீபியன் கடல் |
| கிரீன்லாந்து | ஆர்க்டிக் கடல் |
| பிரிட்டன் | வட அட்லாண்டிக் கடல் |
| சுமத்திரா | இந்து சமுத்திரம் |
| செலிபஸ் | தென் மேற்கு பசிபிக் கடல் |
| சைப்பிரஸ் | கிழக்கு மெடிட்டரேனியன் கடல் |
| டொமினிகன் குடியரசு | கரீபியன் கடல் |
| தஸ்மானியா | தென்மேற்கு பசிபிக் கடல் |
| நியூ கினியா | மேற்கு பசிபிக் கடல் |
| நியூசிலாந்து | தென்மேற்கு பசிபிக் கடல் |
| நியூஃபௌண்ட்லாந்து | வட அட்லாண்டிக் கடல் |
| பிஜி தீவு | தென் மத்திய பசிபிக் கடல் |
| பேபியன் தீவு | ஆர்க்டிக் கடல் |
| போர்னியோ | இந்து சமுத்திரம் |
| மாலைதீவுகள் | இந்து சமுத்திரம் |
| மிண்டனோ | வட பசிபிக் கடல் |
| லுசான் | மேற்கு பசிபிக் கடல் |
| வட தீவு | தென் மேற்கு பசிபிக் கடல் |
| ஜப்பான் | பசிபிக் கடல் |
| ஜாவா | இந்து சமுத்திரம் |
| ஹிஸ்பானி | கரீபியன் கடல் |
| ஹைதி | கரீபியன் கடல் |
| ஹொக்கைடோ | வட மேற்கு பசிபிக் கடல் |



## நாயும் திருடனும்

**ஒரு** வீட்டில் எஜமானர் வீட்டைப் பூட்டிவிட்டு வெளியூர் செல்கிறார். காவலுக்கு நிற்கிறது கம்பீரமான நாய் ஒன்று.

ஓரிரு நாட்களுக்குப் பிறகு ஒரு திருடன் அந்த வீட்டு வாசலுக்கு வருகிறான். நாய் இருப்பதை ஏற்கனவே அறிந்திருக்கிறான். நின்று நோட்டம் பார்க்கையில், நாயும் அவனைப் பார்க்கிறது. குரைக்காமல்.

குரைக்காத நாய் கடிக்காது என்றவனுக்கு யாரோ சொன்னது நினைவுக்கு வருகிறது.

ஆக, இந்த நாய் விவரமானது என்றுணர்கிறான். கையோடு கொண்டு வந்த நெய்யில் பொரிக்கப்பட்ட இறைச்சித் துண்டு ஒன்றை நடுவில் போடுகிறான்.

வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த மனிதன், எதையோ போட்டதுமே சுதாரிக்கிறது நாய். மெதுவாக அந்தப் பொருளை நுகர்கிறது.

அவ்வளவுதான். அடுத்த நொடி அந்த மனிதன் மீது விழுந்து கடித்துக் குதறுகிறது. அதன் தாக்குதலை சமாளிக்க முடியாத அந்தத் திருடன் நிலைகுலைந்து போகிறான். ஒருவாறு கடிபட்டவாறே தடுத்து அந்த நாயைப் பார்த்து வினவுகிறான்:

"ஏன் நாயே.. நான் உன்னைப் பார்த்த போதே குரைத்து என்னை எச்சரித்திருந்தால் நான் ஓடிப் போயிருக்க மாட்டேனா.." என்கிறான்.



நாய் சொல்கிறது: "நான் உன்னைப் பார்த்து குரைக்காததன் காரணம் நீ சாதாரண மனிதனா அல்லது திருடனா என்று தெரியாததால்தான். அதனால்தான் உன்னைப் பார்த்துக் குரைக்காமல் கவனித்துக் கொண்டிருந்தேன். ஆனால் எப்போது என்னைக் கவர நீ ஓர் இறைச்சித் துண்டைப் போட்டாயோ.. அப்போதே நீ கயவனென்றறிந்தேன். ஆகவேதான் உன்னைத் துரத்தினேன்" என்று சொன்னதாம்!

ஆக "தன்னை மயக்க இறைச்சித் துண்டைப் போட்டாலும் சுதாரித்துக் கொண்ட நாயைப் போல நீங்கள் மாற வேண்டும்" என்றார் பாரதி கிருஷ்ணகுமார்.

**- லியோ டால்ஸ்டாஸ்**

"ஒரு குளத்தில் ஒரு அல்லிக் கொடி இருக்கிறது. அதன் பரப்பளவு தினமும் இரட்டிக்கிறது. 48 நாட்களில் அது முழுக் குளத்தையும் நிறைக்கிறது என்றால், அந்த குளத்தின் பரப்பளவின் பாதிக்கு வளர அதற்கு எத்தனை நாட்கள் தேவைப்பட்டிருக்கும்?"

**விடை 47 நாட்கள்**

**சுடோக்கு எண் 88 விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 4 | 9 | 7 | 8 | 5 | 1 | 2 | 3 |
| 8 | 2 | 7 | 3 | 9 | 1 | 6 | 4 | 5 |
| 1 | 5 | 3 | 4 | 2 | 6 | 8 | 7 | 9 |
| 9 | 6 | 4 | 2 | 5 | 8 | 7 | 3 | 1 |
| 7 | 3 | 5 | 1 | 6 | 4 | 2 | 9 | 8 |
| 2 | 1 | 8 | 9 | 7 | 3 | 5 | 6 | 4 |
| 3 | 7 | 2 | 5 | 1 | 9 | 4 | 8 | 6 |
| 4 | 8 | 1 | 6 | 3 | 2 | 9 | 5 | 7 |
| 5 | 9 | 6 | 8 | 4 | 7 | 3 | 1 | 2 |

**சுடோக்கு எண் 89**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 4 | 9 | 7 | 8 | 5 | 1 | 2 | 3 |
| 8 | 2 | 7 | 3 | 9 | 1 | 6 | 4 | 5 |
| 1 | 5 | 3 | 4 | 2 | 6 | 8 | 7 | 9 |
| 9 | 6 | 4 | 2 | 5 | 8 | 7 | 3 | 1 |
| 7 | 3 | 5 | 1 | 6 | 4 | 2 | 9 | 8 |
| 2 | 1 | 8 | 9 | 7 | 3 | 5 | 6 | 4 |
| 3 | 7 | 2 | 5 | 1 | 9 | 4 | 8 | 6 |
| 4 | 8 | 1 | 6 | 3 | 2 | 9 | 5 | 7 |
| 5 | 9 | 6 | 8 | 4 | 7 | 3 | 1 | 2 |

# பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்குமாறு நோர்வே கோரிக்கை

தேசிய, மாகாண மற்றும் உள்ளூராட்சி அரசாங்கங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்குமாறு நோர்வே இலங்கைக்கு அறிவுறுத்தியுள்ளது தேசிய மனித உரிமைகள் நடவடிக்கை திட்டத்திற்கேற்ப இதனை மேற்கொள்ளுமாறு நோர்வே அறிவுறுத்தியுள்ளது.

அரசியலில் தேர்ந்தெடுக்கப்படும் பெண்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பது குறித்து நோர்வே அக்கறை காட்டியுள்ளது.

ஜெனீவாவில் நடைபெற்ற உலகளாவிய பருவகால மீளாய்வுக் குழுக் கூட்டத் தொடரில் அமைச்சர் சமரசிங்க ஆற்றிய உரைக்கு பதிலளிக்கும் முகமாக நோர்வேயின் நிரந்தரப் பிரதிநிதி மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த நான்கு வருடங்களாக இலங்கை சவால்களை எதிர்கொள்கிறது என்று கூறிய நோர்வேப் பிரதிநிதி, யுத்தத்திற்குப் பின்னர் இலங்கையின் பொருளாதாரம் மீட்சி பெறுவது குறித்து பாராட்டுத் தெரிவித்தார்.

2009ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி யுத்தம் முடிவிற்கு வந்த பின்னர் இலங்கை ஈட்டிய சாதனைகளை நோர்வேப் பிரதிநிதி பாராட்டிப் பேசினார். மனித உரிமை பாதுகாவலர்கள், ஊடகவியலாளர்கள், சிவிலியன்கள் ஆகியோர் தாக்கப்பட்டமை தொடர்பாகவும் கடத்தப்பட்டமை தொடர்பாகவும் விசாரணை நடாத்த இலங்கை அரசாங்கம் தவறியுள்ளது என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

சர்வதேச மனித உரிமை தராதரத்திற்கேற்ப தகவல் அறியும் சட்டத்தை உடனடியாக அமுல்படுத்த வேண்டும் என்றும் நோர்வே வலியுறுத்தியுள்ளது. சுயாதீனமான மக்கள் அமைப்புக்களின் முக்கியத்துவம் பற்றியும் நோர்வே வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் ஜனநாயகச் சூழலை ஏற்படுத்துவதற்கு அதிகாரப் பகிர்வு முறை ஏற்படுத்துவது அவசியமானது இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு ஆகியன பலப்படுத்தவேண்டும் என்றும் நோர்வே பிரதிநிதி வலியுறுத்தினார்.

## பாகிஸ்தான் உணவுப் படை இந்தியாவுக்கு எதிராக இலங்கையிலிருந்து செயற்படுத்துகிறதாம்

பாகிஸ்தான் உளவு நிறுவனமான ஐ.எஸ்.ஐ. குறித்து இந்திய உளவு நிறுவனமான "றோ" இந்திய அரசாங்கத்திடம் இரண்டு வாரங்களுக்கு முன் இரகசிய அறிக்கை ஒன்றை கையளித்துள்ளது.

இந்தியாவுக்கு எதிராக நாசகார வேலைகளை மேற்கொள்வதற்காக இந்தியாவின் அயல் நாடுகளான நேபாளம், பங்களாதேஷ், இலங்கை, பர்மா, ஆகிய நாடுகளில் நிலைகொண்டு இந்தியாவை சுற்றிவளைக்கும் நோக்கில் தனது நாசவேலை குழுவினருக்கு மறைவிடங்களை அமைத்துக்கொடுக்கும் வேலையில் பாகிஸ்தான் உளவு நிறுவனமான ஐ. எஸ்.ஐ. ஈடுபட்டுள்ளதாக அந்த அறிக்கையில் எச்சரித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுபட்டுள்ளதாவது,

நேபாளம், பங்களாதேஷ் ஆகிய நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகளை செயற்படுத்தும் வசதிகள் குறைந்துபோயுள்ளதால் இந்த புதிய போக்கில் ஆழ்ந்த கவனத்தை செலுத்த வேண்டியதாக உள்ளது.

இதற்குப் பதிலாக இலங்கை மற்றும் பர்மாவில் தனது வலையமைப்பை விரிவாக்குவதில் பாகிஸ்தான் உளவு நிறுவனம் கூடிய கவனம் செலுத்துகின்றது.

இந்த முறையில் ஐ.எஸ்.ஐ. இந்தியாவை தனது நாசவேலைப் படையினரால் முழுமையாகச் சுற்றிவளைத்து எந்த இடத்திலிருந்தும் தனது நாசவேலைப்படையினரை இந்தியாவுக்குள் அனுப்பக்கூடியதாக இருக்கும்.

இந்தியாவுக்கு எதிரான நாசவேலைகளை மேற்கொள்வதற்காக ஆட்களை நியமிப்பவர்கள் அயல் நாடுகளிலுள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயங்களில் பல்வேறு பதவிகளில் ஐ. எஸ்.ஐ. இனால் நியமிக்கப்பட்டுள் ளனர் என இந்த அறிக்கை கூறுகின்றது.

## இந்திய வீட்டுத்திட்டம் பதிவு செய்யுமாறு கோரிக்கை

**சண்டிலிப்பாய்**

இந்தியன் வீட்டுத் திட்டத்திற்கான பதிவுகளை இதுவரை மேற்கொள்ளாதவர்கள் உடனடியாக உடனடியாக தங்களது பதிவுகளை மேற்கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளனர்.

சண்டிலிப் பாப் பிரதேச செயலாளர் பிரிவினுள் இந்திய வீட்டுத்திட்ட பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தியடையும் நிலையில் உள்ள தால், இதுவரை இவ் வீட்டித் திட்டத்திற்கான பதிவுகளை மேற் கொள்ளாதவர் கள் உடனடியாக பதிவுகளை மேற்கொள்ளுமாறு வேண்பட்டப்பட்டுள்ளது.

இப்பதிவு களை தங்கள் பகுதி கிராம அலுவலரிடமோ அல்லது அப் பகுதி நியமிக்கப்பட்ட பட்டதாரி பயிலினருடனோ சென்று விரைவாத தங்களின் விவரங்களை பதிவு செய்துகொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளது.



யா/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் சுன்னாகம் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களால் மாணவர்களுக்கு போக்குவரத் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதையும் அதிபர் என்.சிவநேசன் நிற்பதையும் படத்தில் காணலாம். (உடுவில் நிருபர்)

### நூதனசாலை திருட்டுப் பொருட்கள் கல்கமுகவில் மீட்பு

கொழும்பு நூதன சாலையில் கடந்த மார்ச் மாதம் திருட்டுப் போன தங்கத்திலான பொருட்கள் கல்கமுகவில் உள்ள நகைக் கடையொன்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளன. இத் திருட்டுத் தொடர்பாக ஒக்ரோபர் மாதம் 27 ஆம் திகதி கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து பெறப்பட்ட தகவலை அடுத்து இப் பொருட்கள் மீட்கப்பட்டன.

தங்க மோதிரங்கள், தங்க நாணயங்கள், வாள் ஒன்றின் தங்கத்திலான உறை ஆகியவை மீட்கப்பட்டுள்ன. பிரதான சந்தேக நபரான பிரியந்த என்பவர் இத் தங்கப் பொருட்களை நகைக்கடை உரிமையாளருக்கு விற்பனை செய்து வந்தமை தெரியவந்துள்ளது.

## திருக்கேதீஸ்வர ஆலய சூழலில் புத்தர் சிலை

மன்னார் திருக்கேதிஸ்வர ஆலய சூழலில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தனியார் காணையில் அமைக்கப்பட்ட புத்தர் சிலைக்கான ஏனைய கட்டுமானப் பணிகள் பலரது எதிர்ப்பினால் தடைப்பட்டது.

இந்த நிலையில் தொல்பொருள் திணைக்களத்தில் இருந்து காணியை அளவீடு செய்து புத்தர் சிலை அமைப்பதற்கான வழிவகைகளை செய்யுமாறு கோரி மன்னார் பிரதேச செயலாளருக்கு கடந்த வாரம் கடிதம் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தேசிய மதம் பௌத்த மதம் என்பதினால் அவற்றை அமைப்பதற்கு அதிகாரிகள் தடையாக இருக்கக்கூடாது எனவும், நடுநிலமையாக அதிகாரிகள் செயலாற்ற வேண்டும் எனவும் அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### வீதைகள் வீநியோகம்

**சண்டிலிப்பாய்**

திவிநெகும வாழ்வெழுச்சித் திட்டத்தின் மூலம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் விநியோகிக்கப்படும் விதை பக்கட்டுக்களை பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பிரதேச செயலகத்தின் கிராம அலுவலர்கள் பட்டதாரி பயிலுனர்கள் ஊடாக மேற்படி விதைப் பக்கற்றுக்கள் விநியோக்கப்பட்டு வருவதனால் வீட்டுத் தோட்டத்தில் ஆர்வம் உள்ளவர்கள் உடனடியாக இதனைப் பெற்று வீட்டுத் தோட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## காலியில் நால்வர் கொலை : மூவர் கைது செய்யப்பட்டனர்

காலியில் நேற்று முன்தினம் சடலமாக கண்டுபிடிக்கப்பட்ட நால்வரும் ஒரு கொலை தொடர்பாக தேடப்பட்டுவந்த சந்தேக நபர்கள் என்று பொலிஸார் தொவித்துள்ளனர்.

காலி மாநகரசபை எதிர்கட்சித் தலைவர் துஷ்யந்த் செனிவரட்ணவின் சகோதரரான குமார செனிவிரட்ண என்பவரின் கொலை தொடர்பாக இந்த நால்வரும் தேடப்பட்டு வந்தனர்.

48 வயதான குமார செனிவிரட்ண 2009 ஆம் ஆண்டு பாதாளக் கோஷ்டி ஒன்றினால் கொல்லப்பட்டார்.இந்த படுகொலையுடன் சம்பந் தப்பட்டதாக கூறப்படும் மூன்று சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் அக்மீமன என்ற இடத்தில் கைது செய்யப்பட்டனர்.

## மூன்று இலட்சம் தமிழ் அகதிகளை...

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

"எதிரிப் படை மீது காத்திரமான முறையில் நாம் தாக்குதல் நடத்துவதற்கு எவ்வித தடையும் இருக்கக்கூடாது என்பதற்காக மக்களை வெளியேறுமாறு உத்தரவிட வேண்டிய நிலை எமக்குத் தவிர்க்கமுடியாமல் ஏற்பட்டுவிட்டது"

இப்படியும் கூறியது புலிகளின் அறிக்கை.

யாழ் ஆஸ்பத்திரி வளாகப் பகுதி பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்பட்டிருந்ததால் அங்கு ஆயுதங்களுடன் எவரும் நடமாட முடியாதபடி தடை விதிக்கப்பட்டிருந்தது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கமிட்டியின் கண்காணிப்பில் யாழ் ஆஸ்பத்திரியும் அதனை அண்டிய பகுதிகளும் இருந்தன. மண்டைதீவிலிருந்து இராணுவம் யாழ்ப்பாண நகரத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாகப் புலிகள் வதந்திகளைப் பரப்பிவிட்டனர். இதனால் யாழ் ஆஸ்பத்திரியில் தங்கியிருந்த பெருமளவு நோயாளர்களும், கனிட்ட தரத்திலான டாக்டர்களும் ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறினர். நவம்பர் மாதம் மூன்றாம் திகதி அப்போதைய புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் யாழ் ஆஸ்பத்திரிக்குச் சென்றிருந்தார். யாழ் ஆஸ்பத்திரியை மூடிவிடுமாறும், அங்குள்ள நோயாளர்களைப் பருத்தித்துறை மற்றும் சாவகச்சேரி ஆஸ்பத்திரிகளுக்கு இடமாற்றுமாறும் அவர் வலியுறுத்தினார். இதற்கு முதல்நாள் அதாவது இரண்டாம் திகதி யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கு சென்ற புலிகள் மிகுதியாக அங்கு தங்கியிருந்த அகதிகளையும் வெளியேற்றினார்.

யுத்தச் சூழ்நிலை காரணமாகப் பெரும்பாலான நோயாளர்கள் ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறியிருந்தனர். நவம்பர் பத்தாம் திகதி வாக்கில் முந்நூறு நோயாளர்களே அங்கு தங்கியிருந்தனர். பதினான்காம் திகதி அனைத்து நோயாளர்களையும் புலிகள் வெளியேற்றிய பின்னர் ஆஸ்பத்திரி மூடப்பட்டது. யாழ்ப்பாண ஆஸ்பத்திரி ஆயிரம் கட்டில் வசதிகளை அப்போது கொண்டிருந்தது. ஆஸ்பத்திரியிலிருந்த மருந்துப் பொருட்கள் மற்றும் விலையுயர்ந்த மருத்துவ உபகரணங்கள் யாவும் புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டன. யாழ் ஆஸ்பத்திரியிலிருந்த காயமுற்ற புலி உறுப்பினர்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

யாழ்ப்பாணம் கோவில் வீதி - றக்கா றோட் சந்தியிலுள்ள சென் ஜோன் பொஸ்கோ பாடசாலையில் பல்லாயிரக் கணக்கான அகதிகள் தங்கியிருந்தனர். இவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்காக அந்தப் பாடசாலைக்கு அண்மித்ததாகப் புலிகள் ஷெல் தாக்குதல்களை நடத்தினர். சுண்டிக்குளி மகளிர் கல்லூரியிலும் பல்லாயிரக்கணக்கான அகதிகள் தங்கியிருந்தனர். நவம்பர் மாதம் 12ஆம் திகதி அதிகாலை இரண்டு மணியளவில் புலி இயக்க உறுப்பினர்கள் அக் கல்லூரிக்குள் புகுந்து அங்கிருந்த அகதிகளை வெளியேற்றினர். தூங்கிக் கொண்டிருந்த வயோதிபர்கள், சிறுவர்கள், ஆண்கள், பெண்கள் என்ற வித்தியாசமின்றி அனைவரையும் புலிகள் தரதரவென இழுத்துவந்து வெளியே வீசினர்.

பெரும்பாலான மக்கள் சாவகச்சேரி, கிளிநொச்சி, வடமராட்சி ஆகிய பகுதிகளுக்குச் சென்றனர். வீடுகளையோ, சொத்துக்களையோ அல்லது பெருமளவு பணத்தையோ புலிகளுக்கு கொடுத்தவர்கள் கொழும்புக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். அப்போதெல்லாம் புலிகளிடம் பாஸ் நடைமுறை இருந்தது. புலிகளிடம் அவர்களின் நிபந்தனையின் பேரில் அனுமதி பெற்றவர்களே புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டனர். நவம்பர் 17ஆம் திகதி இந்தப் பாஸ் வழங்கும் அலுவலகங்களை புலிகள் மூடிவிட்டு கொடிகாமத்தில் அலுவலகங்களைத் திறந்தனர்.

சாவகச்சேரியில் பல்கலைக்கழக மாணவர்கள் அமைப்பொன்று கூட்டத்தை நடத்தி மாணவர்களை புலிகளுடன் இணைந்துகொள்ளுமாறு கோரியது. மாணவர்கள் இணைந்துகொள்வதன் மூலம் விடுதலை துரிதப்படும் என அவர்கள் அறிவித்தனர்.

மூன்றாவது ஈழப்போர் முடிவில், 1996ஆம் ஆண்டு மே மாதமளவில் யாழ்ப்பாண குடாநாடு இராணுவத்தினரின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. வன்னிக்குள் புலிகளின் பகுதிகளுக்குள் அகப்பட்டவர்கள், புலிகளின் மூளைச்சலவைக்கு தமது பிள்ளைகளை பறிகொடுத்தவர்கள் போக பெரும்பாலானவர்களும் தென்மராட்சி, வடமராட்சியில் தங்கியிருந்தவர்களும் மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பினர்.

# சர்ச்சைக்குரிய தீவுப் பகுதியில் சீன போர்க் கப்பல்கள்: ஜப்பான் மீண்டும் குற்றச்சாட்டு



சர்ச்சைக்குரிய தீவுப் பகுதியில் சீன போர்க்கப்பல்கள் மீண்டும் நுழைந்ததாக ஜப்பான் குற்றம் சாட்டியுள்ளது.

கிழக்கு சீனக்கடலில் உள்ள தீவுக்கு ஜப்பான், சீனா சொந்தம் கொண்டாடி வருகின்றன.

எண்ணெய் மற்றும் கனிமவளம் அதிகமாக உள்ள இந்த தீவு, தற்போது ஜப்பானின் கட்டுப்பாட்டில் உள்ளது.

கடந்த 2ஆம் திகதி சீனா கப்பற்படையைச் சேர்ந்த 6 கப்பல்கள் இந்தத் தீவுக்கு உள்பட்ட கடல்பகுதியில் நுழைந்தன. இதற்கு ஜப்பான் கடும் கண்டனம் தெரிவித்தது.

இந்நிலையில் நேற்று மீண்டும் 4 சீனக்கப்பல்கள், அந்தத் தீவின் கடல் எல்லைக்குள் வந்ததாக ஜப்பான் குற்றம் சாட்டியுள்ளது.

இதுகுறித்து ஜப்பான் வெளிவிவகாரத் துறை துணை அமைச்சர் சிகாவோ கவாய் கூறுகையில், ஜப்பான் கடல் எல்லையில் சீனக் கப்பல்கள் அத்துமீறுவது தொடர்பாக சீனத் தூதரிடம் கடுமையாக வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த வெறுப்பூட்டும் செயல்கள் தொடர்வதால், இருநாடுகளும் மேற்கொண்டுள்ள அமைதி முயற்சிக்கு பங்கம் ஏற்படும் என்றார்.

# அமெரிக்காவில் இன்று வாக்குபதிவு: வாக்குசாவடிகளாக மாறிய இராணுவ வாகனங்கள்




அமெரிக்காவில் இன்று ஜனாதிபதி தேர்தல் நடைபெற உள்ள நிலையில், தீவிரமாக பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.அமெரிக்காவில் நாளை ஜனாதிபதி தேர்தல் நடைபெற உள்ளது. இந்நிலையில் பல பகுதிகள் சான்டி புயலால் பாதிக்கப்பட்டுள்ளதால், இராணுவ வாகனங்கள் வாக்குசாவடிகளாக பயன்படுத்தப்பட உள்ளன. இது குறித்து நியூஜெர்ஸி மாகாண லெப்டினன்ட் ஆளுநர் கிம் குவாடாக்னோ கூறுகையில், சான்டி புயலின் காரணமாக ஜனாதிபதி தேர்தல் சவால் நிறைந்ததாக மாறியுள்ளது. இம் மாகாண மக்கள் வாக்குபதிவை இரண்டாம் பட்சமாக கருதுகின்றனர். இதனையடுத்து அமெரிக்க ஜனாதிபதியால் ஆளுநருக்கு கொடுக்கப்பட்ட இராணுவ வாகனங்கள் உட்பட அனைத்து உடைமைகளும் தேர்தலுக்காகப் பயன்படுத்தப்படும். இராணுவ டிரக்குகளில், வாக்குப்பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த வாகனங்களில் வாக்குப்பதிவு செய்யலாம் எனக் குறிப்பிடப்பட்டிருக்கும். நிவாரண முகாம்களில் உள்ள மக்களிடம் வாக்குச் சீட்டு முறையில், வாக்களிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

# மரண தண்டனை கைதிகளின் உறுப்புகளை தானமாக பெறும் திட்டத்தை கைவிட சீனா முடிவு



மரண தண்டனை கைதிகளிடமிருந்து உறுப்பு தானம் பெறும் திட்டத்தை கைவிட சீனா திட்டமிட்டுள்ளது.

சீனாவில் ஒவ்வொரு ஆண்டும் 15 லட்சம் பேருக்கு மாற்று உறுப்பு தேவைப்படுகிறது. ஆனால் 10 ஆயிரம் பேருக்கு தான் மாற்று உறுப்புகள் கிடைக்கப்பெற்று அறுவை சிகிச்சை நடக்கிறது.

எனவே மரண தண்டனை கைதிகளின் உறுப்புகள் தண்டனை நிறைவேற்றுவதற்கு முன் அகற்றப்பட்டு வருகின்றன.

சீனாவின் இந்த நடைமுறைக்கு சர்வதேச அளவில் கண்டனம் உள்ளது. அத்துடன் மரண தண்டனை கைதிகளின் அனுமதியில்லாமலேயே, உறுப்புகள் எடுக்கப்படுவதாக தொடர்ந்து புகார்கள் வருகின்றன.

இதுகுறித்து சீன சுகாதாரத் துறை வல்லுநர் வாங் ஹைபூ குறிப்பிடுகையில், மூளை சாவு ஏற்பட்டவர்களின் உறுப்புகளை தானமாக பெறுவது உட்பட வேறு சில திட்டங்களை சீனா அறிமுகப்படுத்தியுள்ளது. எனவே மரண தண்டனை கைதிகளின் உறுப்புகளை அகற்றும் திட்டம் அடுத்த ஆண்டு முதல் நிறுத்தப்படும் என்றார்.

# ஓரினச் சேர்க்கையாளர்களின் திருமணத்தை அங்கீகரிக்க கத்தோலிக்க கிறிஸ்துவ சபை முடிவு




பிரான்சில் ஓரினச் சேர்க்கையாளர்களின் திருமணத்தை அங்கீகரிக்க பல்வேறு கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன.

தலைநகர் பாரிசில் உள்ள ரோமன் கத்தோலிக்க கிறிஸ்துவ சபை, ஓரினச் சேர்க்கையாளர்களின் திருமணத்தை அங்கீகரிப்பது தொடர்பாக திட்டமிட்டு வருகிறது.

ஓரினச் சேர்க்கைக்கு எதிரான திருமண சட்டத்தை எதிர்த்து வாக்களிக்க பாதிரியார் ஒருவர் கேட்டுக் கொண்டுள்ளார். அதற்காக மக்களாகிய நீங்கள் வீதிகளில் போராட தயாராகுங்கள் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இயற்கைக்கு எதிரான இந்த ஓரினச்சேர்க்கை திருமணத்தை ஆதரிப்பது சமுதாயச் சீரழிவுகளை ஏற்படுத்தும்என்று ஆளும் சோசலிஸ்ட் கட்சி எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இத்திருமணம் குறித்து நாட்டில் எதிர்ப்பும் ஆதரவும் இருக்கும் பட்சத் தில், இது குறித்து வரைவு திட்டமொன்றை அமைச்சரவை கூட்டத்தில் கொண்டுவர பிரான்ஸ் அரசு முடிவெடுத்துள்ளது.

# உலக பார்வை

## திருமணத்தில் நம்பிக்கை இழப்பு: சுதந்திரத்தை விரும்பும் பிரிட்டன் பெண்கள் ஆய்வில் அதிர்ச்சி தகவல்



ஆண்களை விட பெண்களுக்கு, திருமண பந்தத்தில் நம்பிக்கை குறைவாக இருப்பது, பிரிட்டனில் நடந்த ஆய்வில் தெரிய வந்துள்ளது.

பொதுவாக, திருமண பந்தத்தில் பெண்களுக்கு தான் அதிக நம்பிக்கை இருக்கும் என்றாலும், தற்போது அந்த நிலை மாறி வருகிறது. இதுகுறித்து, பிரிட்டனில் சமீபத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

பல்வேறு நகரங்களில், 21 வயதுக்குட்பட்ட, 1,200 பெண்களிடமும், 600 ஆண்களிடமும் நடத்தப்பட்ட ஆய்வில், ஐந்தில் ஒரு பெண் மட்டுமே திருமணம் செய்து கொள்வதை முக்கியமாகவும், மூன்றில் ஒரு பெண் மட்டுமே, திருமணமான தம்பதி யரே நல்ல பெற்றோர்களாக இருப்பர் என்றும் கருதுவதாக கூறியுள்ளனர்.

ஆண்களில், 56 சதவீதம் பேர், திருமணத்தில் நம்பிக்கை தெரிவித்துள்ள நிலையில், 46 சதவீதம் பெண்கள் மட்டுமே திருமண பந்தத்தில் நம்பிக்கை உள்ளதாக தெரிவித்துள்ளனர். திருமண பந்தத்தின் மேல், தங்களுக்கு மதிப்பு இருந்தாலும், அதை வெற்றியின் அடையாளமாக பார்ப்பதில்லை என, பெண்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

ஐந்தில், மூன்று பெண்கள், தன்னம்பிக்கையோடும் சுதந்திரமாகவும் இருப்பதையே வெற்றி என்று கருதுகின்றனர்.

ஆனால், பாரம்பரியமான குடும்ப வாழ்க்கையில் இருக்கும் நன்மைகளை உணர்ந்த பெண்களும் இருக்கின்றனர்.

திருமணம் செய்து குழந்தையோடு வாழும் பெற்றோருக்கு கிடைப்பதை விட, ஒரே பாலினத்தை சேர்ந்த பெற்றோர், திருமணம் செய்யாமல் சேர்ந்து வாழும் பெற்றோர், ஆகியோருக்கு சமூகத்தில் குறைந்த மதிப்பே கிடைக்கிறது என, 10ல் ஏழு பெண்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.



மியான்மரின் நை பை பிடவ் நகரில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அந்நாட்டு எதிர்கட்சித் தலைவர் ஆங் சான் சூகி மற்றும் டென்மார்க் பிரதமர் ஹெல்லி தார்னிங்.

## உலகில் முதன்முறையாக அரிய விண்வெளி புகைப்படங்கள் ஏலம்



ஆஸ்திரியா தலைநகர் வியன்னாவில் 1000க்கும் மேற்பட்ட அரிய விண்வெளி புகைப்படங்கள் ஏலத்திற்கு வருகின்றன.

விண்வெளி ஆராய்ச்சியின் ஆரம்ப காலத்தில் எடுக்கப்பட்ட 4,500 புகைப்படங்களே இவ்வாறு ஏலத்திற்கு வருகின்றன.

இந்த புகைப்படங்களை ஐரோப்பியாவை சேர்ந்த புகைப்பட சேகரிப்பாளர் விற்பனைக்கு வைக்க உள்ளார்.

கடந்த 1960ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவுக்கும், அப்போதைய சோவியத் யூனியனுக்கும் இடையே விண்வெளி ஆராய்ச்சி துறையில் கடும் போட்டி நிலவியது.

ஆளில்லாத விண்கலங்கள், ஒன்று அல்லது இருவரை மட்டும் ஏற்றிச் செல்லும் விண்வெளி ஓடங்களை தயாரிப்பதில் இரு நாடுகளும் முனைப்பு காட்டின.

இறுதியில் நிலவுக்கு நீல் ஆம்ஸ்ட்ராங் தலைமையில் விண்வெளி ஓடத்தை அனுப்பி அமெரிக்கா வரலாறு படைத்தது.

அப்போது நிலவில் எடுக்கப்பட்ட புகைப்படங்களும், வேறு சில அரிய விண்வெளி புகைப்படங்களும் இந்த ஏலத்தில் இடம்பெறவுள்ளன.

இந்த ஏலத்தின் மூலம் ரூ. 4 கோடியே 14 லட்சம் வருவாய் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாக சம்பந்தப்பட்ட ஏல நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுபோன்ற புகைப்படங்கள் அதிகளவில் விற்பனைக்கு வருவது உலகளவில் இதுவே முதல் மறையாகும்.

# இளைய தலைமுறையினரை சந்திப்பதில் ஆர்வம் அதிகம்

சீனா சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் பெகிங் பல்கலைக்கழக மாணவர்களை சந்தித்தார்.தனது சீன விஜயம் குறித்து அப்துல் கலாம், நான் ஏற்கனவே அமெரிக்காவிலும் கல்வி புகட்டியுள்ளேன்.

ஒரு பேராசிரியர் என்ற முறையில் என்னை எங்கெல்லாம் அறிவு அழைக்கின்றதோ அங்கெல்லாம் நான் சென்று அறிவைப் பகிர்ந்து கொள்ளவே விரும்புவேன்.



முக்கியமாக எனக்கு இளைய

**அப்துல் கலாம்**

தலைமுறையினரை சந்திப்பதிலும் அவர்களின் அறிவை வளர்க்கப் பங்களிப்பதிலும் ஆர்வம் அதிகம் என்றார்.

82 வயதாகும் விஞ்ஞானி அப்துல் கலாம், இந்தியாவின் ஏவுகணைத் தயாரிப்பிலும் அணுகுண்டு சோதனையிலும் பெரும் பங்கு ஆற்றியிருப்பதால் 'Missile Man' என அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

# மழையால் உயிரிழந்த 17 பேரின் குடும்பத்திற்கு முதல்வர் நிதியுதவி

தமிழகத்தில் பெய்த கன மழை காரணமாக, பல்வேறு சம்பவங்களில் உயிரிழந்த, 17 பேரின் குடும்பத்திற்கு, தலா 2.5 இலட்சம் ரூபாய், நிதி உதவி அளித்து முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டு உள்ளார். முதல்வர் வெளியிட்டுள்ள அறிக்கை: தமிழகத்தின் பெய்து வரும் கனமழை காரணமாக, பல்வேறு சம்பவங்களில், 17 பேர் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களின், 17 பேரின் குடும்பத்திற்கு, என் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்து கொள்கிறேன். இவர்களின் குடும்பத்தினருக்கு, தலா, 2.5 இலட்சம் ரூபாய், உதவி தொகை உடனே அளிக்க உத்



தரவிட்டு உள்ளேன்.

கடந்த மாதம், 31ஆம் திகதி, விருதுநகர், குழலிகுளம் கிராமத்தைச் சேர்ந்த, பசுக்காரன் என்பவரின் மகன் கருப்பன் மற்றும் பூம்பிடாகை கிராமத்தைச் சேர்ந்த மாயாண்டி ஆகிய இருவரும், சிலரால் தாக்கப்பட்டு உயிரிழந்தனர். கொடூர தாக்குதலில் ஈடுபட்டவர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கவும், இருவரின் குடும்பத்திற்கு, தலா, 5 இலட்ச ரூபாய் வழங்கவும் உத்தரவிட்டு உள்ளேன். காஞ்சிபுரம் மற்றும் கோவையில் நடந்த சாலை விபத்தில் உயிரிழந்த, ஜெயசீலன் மற்றும் ருக்மணி ஆகியோரின் குடும்பத்திற்கு, தலா, 1 இலட்ச ரூபாயும், செங்கல்பட்டு அருகே நடந்த விபத்தில் காயமடைந்த, இருவருக்கு தலா, 10 ஆயிரம் ரூபாய் வழங்கவும் உத்தரவிட்டு உள்ளேன். இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

# 10ஆம் வகுப்பு மாணவியை ஏமாற்றிவிட்டு தப்பியோடிய டொக்டருக்கு வலை வீச்சு

ஆந்திர மாநிலத்தில் 10ம் வகுப்பு மாணவி ஒருவரை திருமணம் முடித்து உல்லாசத்திற்கு பின் ஆசிரமத்தில் சேர்த்து விட்டு 58 வயது டொக்டர் ஒருவர் தப்பியோடி விட்டார்.

ஆந்திர மாநிலம் மெகபூப் நகரைச் சேர்ந்த விஜய மோகன், விஜயா தம்பதியினரின் மகளான பிரியா 10ஆம் வகுப்பு படித்து வந்தார்.

விஜய மோகன் புற்றுநோயாளி என்பதால் ஹரிநாத்(வயது 58) என்ற டொக்டரிடம் சிகிச்சை பெற்று வந்தார்.

சிகிச்சைக்காக ஹரிநாத் விஜய மோகன் வீட்டிற்கும் வருவதுண்டு.

இந்நிலையிலேயே பிரியாவிடம் ஆசை வார்த்தைகள் கூறி அவரை மயக்கியுள்ளார்.

இந்நிலையில் கடந்த செப்ரெம்பர் 6ஆம் திகதி முதல் பிரியாவை காணவில்லை. இதனால் பொலிஸாரிடம் புகார் அளித்த பிரியாவின் பெற்றோர் அவரை தேட ஆரம்பித்தனர்.

இந்நிலையில் பிரியாவின் உறவினரான சீனிவாசனுக்கு ஒரு அழைப்பு வந்தது. அதில், தமிழகத்தில் உள்ள உடுமலைப் பேட்டை ஆசிரமத்தில் பிரியா உள்ளார் எனக் கூறிவிட்டு அழைப்பை ஹரிநாத் துண்டித்துவிட்டார்.

அதிர்ச்சியடைந்த சீனிவாசன் மற்றும் பெற்றோர்கள் அங்கு சென்று பார்த்த போது பிரியா பைத்தியம் பிடித்தது போல் காணப்பட்டார்.

இது குறித்த விசாரணையில், திருமணம் செய்து கொண்ட பின்னர் பிரியாவை பெங்களூரு அழைத்துச் சென்றுள்ளார் டொக்டர் ஹரி.

அங்கு உல்லாசம் அனுபவித்து பின்னர் இருவருக்கும் இடையே கருத்து வேறுபாடு வரவே இந்த ஆசிரமத்தில் சேர்த்து விட்டு தலைமறைவாகியுள்ளார். தற்போது அந்த டொக்டரைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

# செய்னாவுக்கு எம்.பி., ஆசை: முலாயம் சிங்

லோக்சபா எம்.பி., தேர்தலில் போட்டியிட பாட்மின்டன் வீராங்கனை செய்னா நேவலுக்கு வாய்ப்பு தருவதாகக் கூறி, சமாஜ்வாடி கட்சித் தலைவர் முலாயம் சிங் யாதவ் அதிர்ச்சி அளித்தார்.

உ.பி.,யில் தனியார் பல்கலை., சார்பில், லண்டன் ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற இந்திய நட்சத்திரங்களான செய்னா நேவல் (பாட்மின்டன்), மேரி கோம் (குத்துச்சண்டை), ககன் நரங் (துப்பாக்கி சுடுதல்), விஜய் குமார் (துப்பாக்கி சுடுதல்), சுஷில் குமார்(மல்யுத்தம்), யோகே'வர் தத்(மல்யுத்தம்) ஆகிய 6 பேருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது.

இதில் பங்கேற்ற முன்னாள் முதல்வர் முலாயம் சிங் பேசுகையில், விளையாட்டு அரங்கில் ஜொலிப்பவர்கள் அரசியலில் குதித்து பொதுச் சேவை செய்ய வேண்டும். செய்னா விரும்பினால், அடுத்த லோக்சபா தேர்தலில் போட்டியிடலாம். அவருக்கு அலிகார் தொகுதியை அளிக்க தயாராக உள்ளோம் என்றார்.

டாக்டர் செய்னா: இதை கேட்டு அதிர்ந்து போன செய்னா, முலாயமுக்கு நன்றி மட்டும் தெரிவித்து விட்டு அரசியல் பேசாமல் நழுவினார். இவர் கூறுகையில், நான் டாக்டருக்கு படிக்க வேண்டுமென தந்தை கனவு கண்டார். ஆனால், விதிப் படி பாட்மின்டன் வீராங்கனையாக வாழ்க்கை அமைந்து விட்டது. தற்போது கவுரவ டாக்டர் பட்டம் கிடைத்ததை மிகவும் பெருமையாக கருதுகிறேன், என்றார்.

வயது இல்லை: லோக்சபா எம்.பி., தேர்லில் போட்டியிட குறைந்தபட்சம் 25 வயதை எட்டியிருக்க வேண்டும். செய்னாவுக்கு தற்போது 22 வயது தான் ஆகிறது.

2014இல் தேர்தல் வந்தால் கூட 24 வயதை தான் எட்டியிருப்பார். வயது அடிப்படையில் பார்த்தால் தற்போதைக்கு போட்டியிட முடியாது.

அடுத்த பிரதமர் பதவிக்கு குறிவைக்கும் முலாயம் சிங்கிற்கு இது தெரியாமல் போனது வேதனையான விடயம்.

# இந்திய செய்திகள்

## ரிவி சமையல் கலை நிபுணர் செ.ஃப் ஜேக்கப் காலமானார்

தமிழ்நாட்டில் சன் டிவியில் ஒளிபரப்பாகும ஆஹா என்ன ருசி சமையல் நிகழ்ச்சியின் தொகுப்பாளர் ஜேக்கப் சகாயகுமார் (வயது38) மாரடைப்பால் மரணமடைந்தார்.

தேனி மாவட்டம் உத்தமபாளையத்தைச் சேர்ந்த ஜேக்கப் சென்னையில் வசித்து வந்தார்.

அவருக்கு நேற்று திடீரென மாரடைப்பு ஏற்பட சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

**கின்னஸ் சாதனை**

கடந்த 2010ஆம் ஆண்டு தொடர்ந்து 24 மணி நேரம் 485 விதமான உணவுகளை தயாரித்து ஜேக்கப் கின்னஸ் சாதனை படைத்தமை குறிப்பிடத்தக்கது.



ஆஹா என்ன ருசி நிகழ்ச்சியில் சமையல் செய்வதை கிச்சனோடு நிறுத்தாமல் ஏரிக்கரை, குளம், அருவி என பல்வேறு இடங்களில் சமைத்து நிகழ்ச்சியை வித்தியாசப்படுத்திக் காட்டினார்.



டில்லியில் அந்நிய நேரடி முதலீட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து எருமை ஒன்றின் காதில் மகுடி ஊதி நூதன போராட்டத்தில் பா.ஜ.க மூத்த தலைவர் முரளி மனோகர் ஜோஷி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## பயங்கரவாதி கசாப்புக்கு டெங்கு காய்ச்சல்

மும்பை சிறையில் அடைக்கப்பட்டுள்ள, பாகிஸ்தான் பயங்கரவாதியும், தூக்குத் தண்டனை கைதியுமான, அஜ்மல் கசாப்புக்கு டெங்கு காய்ச்சல் பாதித்துள்ளதால், அதற்கான சிகிச்சை அளிக்கப்படுகிறது. நான்கு ஆண்டுகளுக்கு முன், மும்பையில் தாக்குதல் நடத்திய பாகிஸ்தான் பயங்கரவாதிகளால், 166 பேர் கொல்லப்பட்டனர். பொலிஸ் பதிலடியில், பயங்கரவாதிகள் அனைவரும் கொல்லப்பட, உயிருடன் சிக்கிய, அஜ்மல் கசாப்புக்கு, தூக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. பலத்த பாதுகாப்புடன், மும்பை, ஆர்தர் ரோடு சிறையில் அடைக்கப்பட்டுள்ள அவனுக்கு, இப்போது, 25 வயதாகிறது. கடந்த நான்கு நாட்களாக, அவன் டெங்கு காய்ச்சலால் பாதித்துள்ளதால், அதற்காக, சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக, சிறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## அபுதாபியில் இந்திய டொக்டர் படுகொலை: பாகிஸ்தான் பிரஜை கைது

வளைகுடா நாடான அபுதாபியில் கேரள மாநிலத்தைச் சேர்ந்த டொக்டர் ராஜன் டேனியலை மிகக் கொடூரமான முறையில் கொலை செய்த பாகிஸ்தான் பிரஜையை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அபுதாபியில் அல் அலி மருத்துவமனையில் டொக்டர் ராஜன் டேனியல் பணிபுரிந்து வந்தார்.

அவர் கடந்த வியாழக்கிழமையன்று பணியில் இருந்த போது மிகப் பெரிய கத்தியுடன் உள்ளே நுழைந்த பாகிஸ்தான் பிரஜை ஒருவன் ஆட்டை வெட்டுவது போல் வெட்டிக் கொலை செய்திருக்கிறான்.

தமது உறவினர் ஒருவர் சிகிச்சை பலனின்றி இறந்ததற்கு டொக்டர் ராஜன் டேனியலே காரணம் என்பதால் தாம் அவரைக் கொலை செய்ததாக அந்நபர் விளக்கமளித்துள்ளார்.

# ஜெயசூர்யா உட்பட 16 சர்வதேச வீரர்களுக்கு ஊதியம் இல்லை

கனடாவில் நடைபெற்ற ரி20 போட்டியொன்றில் பங்கேற்ற சனத் ஜெயசூர்யா உட்பட 16 சர்வதேச வீரர்களுக்கு அப்போட்டிக்கான ஊதியம் இன்னமும் வழங்கப்படவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் ரொரண்டோவில் நடைபெற்ற இப்போட்டியை கனடாவைச் சேர்ந்த கற் ரோஸ் கஸ்டம் டிசைன்ஸ் என்ற நிறுவனம் கனடாவின் கிரிக்கெட் வாரியத்தின் ஒப்புதலுடன் நடத்தியிருந்தது.

இப்போட்டியில் பங்கேற்ற சனத் ஜெயசூரியா, சக்லைன் முஷ்தாக், கைல் மில்ஸ், ஜேக்கப் ஓரம், மார்க் பௌச்சர், டெவோன் ஸ்மித், ரீனா பெஸ்ட், பிரென்டன் டெய்லர் உட்பட 16 வீரர்களுக்குரிய ஊதியமே வழங்கப்படவில்லை.

அனைத்து நட்சத்திர ரி20 போட்டியில் இவ்வீரர்கள் பங்குபற்றியிருந்த போதிலும், அவர்களுக்கென வழங்கப்பட வேண்டிய ஊதியத்தை ஏற்பாட்டுக் குழுவினர் வழங்காத நிலையில் அதற்கெதிரான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் மும்பை அசத்தல் புஜாரா அரை சதம்



இங்கிலாந்து லெவன் அணிக்கெதிரான பயிற்சி போட்டியில் மும்பை வீரர் புஜாரா 87 ஓட்டங்கள் எடுத்து அசத்தினார்.

இங்கிலாந்து லெவன், மும்பை ஏ அணிகள் பங்கேற்கும் இரண்டாவது பயிற்சி போட்டி (மூன்று நாட்கள்), மும்பையில் நடக்கிறது. முதல் நாள் ஆட்டநேர முடிவில் முதல் இன்னிங்சில் இங்கிலாந்து அணி 6 விக்கெட்டுக்கு 338 ஓட்டங்கள் எடுத்தது.

நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் நடந்தது. இதில் தொடக்கம் முதல் மும்பை பந்து வீச்சாளர்கள் அசத்த இங்கிலாந்து அணி அடுத்தடுத்து 3 விக்கெட்டை பறிகொடுத்தது. முதலில் சமித் படேல் 60 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பின்பு வந்த ஆணியன்ஸ் ஓட்டங்களின்றி ஆட்டமிழந்தார்.

இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சை 9 விக்கெட்டுக்கு 345 ஓட்டங்கள் எடுத்த நிலையில், டிக்ளேர் செய்தது.

பின்பு முதல் இன்னிங்சை தொடங்கிய மும்பை ஏ அணியில் பவின் தாகூர் 5 ஓட்டங்களிலும், தவான் 27 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

பின்பு புஜாரா, ஹிக்கன் ஷா ஜோடி நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இருவரும் இணைந்து மூன்றாவது விக்கெடுக்கு 163 ஓட்டங்கள் சேர்த்தனர். சிறப்பாக ஆடிய புஜாரா அரைசதம் கடந்து 87 ஓட்டங்கள் எடுத்தார்.

இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் மும்பை ஏ அணி முதல் இன்னிங்சில் 4 விக்கெட்டுக்கு 232 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஹிக்கன் ஷா 84 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். மும்பை அணி 113 ரன்கள் பின்தங்கியுள்ளது. இன்று ஒருநாள் மட்டுமே ஆட் டம் எஞ்சியுள்ளதால், இப்போட்டி டிராவில் முடிய அதிக வாய்ப்பு உள்ளது.

# நியூசிலாந்து எதிர் இலங்கை: 14 ஓட்டங்களால் இலங்கை வெற்றி

இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும், இலங்கை அணிக்குமிடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் இரண்டாவது போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற்றுள்ளது. மழையால் பாதிக்கப்பட்ட இப்போட்டியில் இலங்கை அணி டக்வேர்த் லூயிஸ் அடிப்படையில் 14 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

பல்லேகல சர்வதேசக் கிரிகெட் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 50 ஓவர்களின் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 250 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது விக்கெட்டை 17 ஓட்டங்களுக்கே இழந்த அவ்வணி, அதன் பின்னர் இரண்டாவது விக்கெட்டுக்காக 83 ஓட்டங்களைப் பகிர்ந்தது.

தொடர்ந்து 4ஆவது விக்கெட்டுக்காகவும் சிறப்பான இணைப்பாட்டம் பகிரப்பட்டது. ஆனால் தேவையான வேகத்தில் ஓட்டங்கள் பெறப்படாததன் காரணமாக நியூசிலாந்து அணி 250 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

துடுப்பாட்டத்தில் நியூசிலாந்து அணி சார்பாக றொஸ் ரெய்லர் 62 பந்துகளில் 72 ஓட்டங்களையும், பி.ஜே.வற்லிங் 86 பந்துகளில் 55 ஓட்டங்களையும், ரொப் நிக்கல் 74 பந்துகளில் 46 ஓட்டங்களையும், ஜேம்ஸ் ஃபிராங்ளின் 40 பந்துகளில் 35 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக லசித் மலிங்க 39 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், ரங்கன ஹேரத் 10 ஓவர்களில் 28 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், நுவான் குலசேகர, அன்ஜலோ மத்தியூஸ், திஸர பெரேரா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

251 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 22.5 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 118 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது மழை குறுக்கிட்டுப் போட்டி இடைநிறுத்தப்பட்டது.

அதன் பின்னர் போட்டி மீள ஆரம்பிக்க முடியாது போனதன் காரணமாக இலங்கை அணி டக்வேர்த் லூயிஸ் அடிப்படையில் 14 ஓட்டங்களால் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக மஹேல ஜெயவர்தன 49 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 43 ஓட்டங்களையும், திலகரட்ண டில்ஷான் 51 பந்துகளில் 37 ஓட்டங்களையும் பெற்றனர். இப் தொடரில் இலங்கை அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியின் நாயகனாக இலங்கை அணியின் லசித் மலிங்க தெரிவானார்.

# மைதானத்தை பார்வையிட ஜேர்மன் தூதரக அதிகாரிகள் யாழ். விஜயம்



ஏ-9 நெடுங்குளம் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் கால்பந்தாட்ட மைதானத்தை பார்வையிடுவதற்காக கொழும்பிலுள்ள ஜேர்மன் தூதுவராலய பிரதிதிட்டப் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டனர்.

ஜேர்மன் வெளிநாட்டு அபிவிருத்தி அமைப்பு மற்றும் பீபா ஆகியவற்றின் நிதியுதவியுடன் யாழ். நெடுங்குளம் பகுதியில் கால்பந்தாட்ட மைதானம் அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த மைதானத்தின் நிலமைகளைப் பார்வையிடுவதற்காக வந்த கொழும்பிலுள்ள ஜேர்மன் தூதுவராலய அதிகாரிகளுக்கான விளக்கங்களை யாழ். கால்பந்தாட்ட லீக்கின் தலைவர் அந்தோனிப்பிள்ளை வழங்கினார். இதன் போது கொழும்பிலுள்ள ஜேர்மன் தூதுவராலய பிரதித்திட்டப் பணிப்பாளா மர்ஜா எய்னிகினால் யாழ். கால்பந்தாட்ட வீரர்களுக்கான பந்துகளை யாழ். கால்பந்தாட்ட லீக் தலைவரிடம் கையளித்தார்.

# இங்கிலாந்திற்கெதிரான இந்திய டெஸ்ட் அணியில் யுவ்ராஜ்

இந்தியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும், இந்திய அணிக்குமிடையிலான நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலிரண்டு போட்டிகளுக்கான இந்திய டெஸ்ட் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அறிவிக்கப்பட்டுள்ள அணியில் யுவ்ராஜ் சிங் சேர்க்கப்பட்டுள்ளார்.

மகேந்திரசிங் டோணி தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ள அணியில் எதிர்பார்க்கப்பட்ட பெரும்பாலான வீரர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

புற்றுநோயிலிருந்து குணமாகிய பின்னர் தான் பங்குபற்றிய முதலாவது முதற்தரப் போட்டியிலேயே இரட்டைச்சதம் பெற்ற யுவ்ராஜ் சிங், அதன் பின்னர் இங்கிலாந்திற்கெதிரான பயிற்சிப் போட்டியில் அரைச்சதம் பெற்றதோடு, 5 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியதன் காரணமாக இவ்வணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

யுவ்ராஜ் சிங் தவிர, சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங்கிற்கும் அணியில் சேர வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் அஜின்கியா ரஹானே, முரளி விஜய் ஆகியோரும் அணிக்குள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

எதிர்பார்க்கப்பட்ட வீரர்களில் மத்தியவரிசைத் துடுப்பாட்ட வீரர் சுரேஷ் ரெய்னாவிற்கு அணியில் இடம் வழங்கப்படவில்லை. நியூசிலாந்திற்கெதிராக இடம்பெற்ற தொடரில் அவர் பங்குபற்றியிருந்த போதிலும் அவருக்கு இத்தொடரில் வாய்ப்பு வழங்கப்படவில்லை.

அதேபோல் மற்றுமொரு மத்தியவரிசைத் துடுப்பாட்ட வீரரான சுப்ரமணியம் பத்ரினாத்திற்கும் அணியில் இடம் கிடைக்கவில்லை.

# இங்கிலாந்து பிரீமியர் லீக் போட்டி முடிவுகள்

இடம்பெற்றுவரும் இங்கிலாந்து பிரீமியர் லீக் தொடரின் நேற்றைய இரண்டு போட்டிகளும் சமநிலையில் முடிவடைந்தன. குயீன்ஸ் பார்க் ரேஞ்சர்ஸ் - ரெடிங் அணிகளுக்கிடையிலான போட்டியும், லிவர்பூல் - நியூகாசில் யுனைட்டட் அணிகளுக்கிடையிலான போட்டியுமே சமநிலையில் முடிவடைந்தன.

குயீன்ஸ் பார்க் ரேஞ்சர்ஸ் அணிக்கும், ரெடிங் கழகத்திற்குமிடையிலான போட்டி 1-1 என்ற கணக்கில் முடிவடைந்தது. இப் போட்டியில் ரெடிங் கழகம் சார்பாக போட்டியில் 17ஆவது நிமிடத்தில் கோலொன்று பெறப்பட்டது. ஆனால் 66ஆவது நிமிடதத்தில் பதிலளித்த குயீன்ஸ் பார்க் கோலொன்றைப் பெற்றுக் கொண்டது.

லிவர்பூல் அணிக்கும், நியூகாசில் யுனைட்டட் அணிக்குமிடையிலான போட்டி 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. இப்போட்டியில் நியூகாசில் யுனைட்டட் அணி 44ஆவது நிமிடத்தில் கோலொன்றைப் பெற்ற போதிலும், 67ஆவது நிமிடத்தில் லிவர்பூல் அணி கோலொன்றைப் பெற்று கோல் எண்ணிக்கையைச் சமப்படுத்தியது.

இப்போட்டியில் 84ஆவது நிமிடத்தில் நியூகாசில் யுனைட்டட் அணியைச் சேர்ந்த கொலோக்சினிக்கு சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டது. 90ஆவது நிமிடத்தில் நியூகாசில் யுனைட்டட் அணிக்கு மஞ்சள் அட்டையொன்று காண்பிக்கப்பட்டிருந்தது.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 06.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது